பொழிவு - 17
குவிப்பு - 09
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
செப்ரெம்பர் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா
THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

## தமிழர் தாயகத்தில் காலடி பதிக்கும் முதல் திருத்தந்தை!

# போரால் பாதிப்புற்ற தமிழ் மக்களை மடுப்பதியில் சந்திக்கிறார் திருத்தந்தை!

## தைப்பொங்கல் தினத்தன்று மடுவில் சிறப்பு வழிபாடு

எதிர்வரும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ், போரினால் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்த தமிழ் மக்களையும், அங்கவீனர்களையும் மடுத்திருத்தலத்தில் சந்தித்து அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிவதுடன், அவர்களுக்கு விசேட ஆசீர்வாதமும் வழங்கவுள்ளார். 2015 ஜனவரி 14ஆம் திகதி தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தன்று மடுத்திருத்தலத்தில் பி.ப 3.00 மணிக்கு இடம்பெறவுள்ள சிறப்பு வழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் கலந்துகொள்கிறார். இதன்போதே இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

திருத்தந்தையின் இலங்கைப் பயணம் தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த 15.08.2014 அன்று மடு அன்னையின் திருநாள் திருப்பலி நிறைவில் வெளியிடப்பட்டது. இதன்போது தமிழ் மொழியிலான அறிவிப்பை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையும், சிங்கள மொழியிலான அறிவிப்பை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் வெளியிட்டனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



கர்தினால் மல்கம் ஆண்டகை சில மாதங்களுக்கு முன்னர் வத்திக்கானில் இலங்கைத் தூதுக்குழுவினரோடு திருத்தந்தையைச் சந்தித்தார். அவ்வேளையில் இலங்கைக்கு வருகைதருமாறு திருத்தந்தைக்கு அவர் அழைப்புவிடுத்தபோது எடுக்கப்பட்ட படம்.

## சிறிய குருமடத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள்

மன்னார் சிறிய குருமடத்தின் 25 வருட நிறைவை முன்னிட்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி திங்கட்கிழமை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. சிறிய குருமடத்தில் மாலை 5.00 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் மன்னார் ஆயர் தலைமையில் யூபிலி விழாத்திருப்பலியும், அரங்க நிகழ்வுகளும், யூபிலி மலர் வெளியீடும் நடைபெறவுள்ளன.

## சிறப்பாக நடந்துமுடிந்த மடு ஆவணித் திருவிழா



மடு அன்னையின் ஆவணித் திருவிழா கடந்த 15.08.2014 அன்று சிறப்பாக நடந்து முடிந்தது. சுமார் ஆறு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொண்டிருந்தனர்.

கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் அதிமேதகு கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் ஆயர்கள் ஐவரது பிரசன்னத்தில் காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவுதினம்



தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் இறையடி சேர்ந்த 34வது ஆண்டு நினைவுதினம் (01.09.1980 - 01.09.2014) கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் நகரில் உள்ள தனிநாயகம் அடிகளார் திருவுருவச் சிலைக்கு முன்னால் சிறப்பாக நினைவுகூறப்பட்டது. மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு முன்னர் அடிகளாரின் திருவுருவச் சிலை புதுமெருகூட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு அடிகளாரின் நூற்றாண்டு தினம் (02.08.1913 - 02.08.2013) அன்று மன்னார் பழைய நூல் நிலையத்திற்கு முன்னால் இத்திருவுருவச் சிலை திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## மன்னார் சிறிய குருமடத்தில் இறை அழைத்தல் கண்காட்சி



மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தின் 25வது வருட யூபிலி விழாவை முன்னிட்டு 'இறை அழைத்தல்' என்ற கருப்பொருளில் சிறிய குருமடத்தில் கண்காட்சி ஒன்று ஒழுங்கு -செய்யப்பட்டிருந்தது. கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் 31ஆம் திகதிகளில் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இக்கண்காட்சியைத் திறந்துவைத்து பார்வையிட்டார்.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளும், மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் துறவற சபைகளும் இந்தக் கண்காட்சிக்கு தமது பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர். ஒவ்வொரு துறவற சபைகளைப் பற்றிய விபரங்களும் இங்கு சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அருட்பணி. சேவியர் குரூஸ், அருட்பணி. ஒல்பன் இராஜசிங்கம், அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் இன்னும் பல குருக்கள் துறவியர் மற்றும் பொதுநிலையினர் இக்கண்காட்சியின் வெற்றிக்கு முன்னின்று அயராது உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

**மன்னாவை**
காலம் தாமதிக்காமல்
உடனடியாக விநியோகிங்கள்!
- மன்னா நிர்வாகம் -

## தனது நண்பரான பெந்தகோஸ்துசபைப் பாஸ்டரைச் சந்தித்த திருத்தந்தை!

### கத்தோலிக்கரால் பெந்தகோஸ்து சபையினர் துன்புறுத்தப்பட்டதற்கு திருத்தந்தை மன்னிப்புக் கோரினார்





இத்தாலியில் கடந்தகாலப் பாசிசக் கொள்கைகளின்கீழ் சில கத்தோலிக்கர்கள் பெந்தக்கோஸ்து சபையினரைத் துன்புறுத்தியதற்காக, கத்தோலிக்கரின் மேய்ப்பர் என்ற முறையில் மன்னிப்புக் கேட்பதாகத் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தென் இத்தாலியின் கம்பானியா மாநிலத்தின் கசெர்த்தா நகருக்கு கடந்த யூலை மாதம் 28ஆம் திகதி தனது தனிப்பட்ட பயணமாகச் சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் நண்பரான அந்நகரின் கசெர்த்தா பெந்தகோஸ்து சபை பாஸ்டர் கியோவன்னி ரார்ற்சன் (Giovanni Trarttion) அவர்களையும் அவ்வாலயத்தில் இருந்த ஏறக்குறைய 200 பேரையும் சந்தித்து உரையாற்றியபோது இவ்வாறு கூறினார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## மதிய உணவுக்காக வத்திக்கான் ஹோட்டலுக்கு வந்த திருத்தந்தை

### அனைவருடனும் ஒன்றாக அமர்ந்து உணவருந்தினார்!



திருத்தந்தை பிரான்ஸிஸ் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடும்விதமாகத் தமது மதிய உணவுக்காக வத்திக்கானில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வந்திருந்தார்.

கடந்த யூலை மாதம் 22ஆம் திகதி அன்று 'மீன் வெள்ளிக்கிழமை' (Fish Friday) அன்று மதிய உணவுக்கான நேரம் ஆரம்பமாகிய வேளையில் அந்த ஹோட்டலுக்கு வந்திருந்த ஏனையோரைப்போன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் வரிசையில் நின்றே மதிய உணவைப் பெற்றுக்கொண்டார். திருத்தந்தை சோஸ் கலக்காத பாஸ்தா, உருளைக்கிழங்கு மற்றும் அன்றைய தினத்தில் விசேட அம்சங்களில் ஒன்றான மீன் கறியையும் வரவழைத்தார். குடிதண்ணீர் போத்தல் ஒன்றையும் அவர் பெற்றுக்கொண்டார். உணவைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர் அங்கு வந்திருந்தவர்களுக்கு மத்தியில் சென்று அவர்களுடன் அமர்ந்தவாறே உணவை உட்கொண்டார். உணவை முடித்துக்கொண்டபின்னர் அந்த ஹோட்டலில் இருந்த அனைவருக்கும் திருத்தந்தை ஆசீர் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு

கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தை அதன் முக்கியத்துவம் கருதி இங்கு மீள்பிரசுரம் செய்கின்றோம்.

## அருளாசியைத் தாண்டியும் ஓர் அரசியல்பணி உண்டு

*உலகில் உள்ள 1.2 பில்லியன் கத்தோலிக்கர்களின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் அடுத்த ஆண்டு தமிழர் திருநாளில் தமிழர் தாயகத்துக்கு முதல் தடவையாக வருகைதரவுள்ளார் என்ற நற்செய்தி கிடைத்திருக்கிறது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற தமிழர்களின் நம்பிக்கைக்கு மகுடம் வைப்பது போன்று பாப்பரசரின் வருகை அமைந்திருப்பதும் கூடுதல் சிறப்பு.*

*இலங்கை ஒரு பௌத்த நாடு என்று கொழும்பு அரசுகளும் புத்த பிக்குகளும் பறைசாற்றிக் - கொண்டாலும் பாப்பரசர்கள் இங்கு வருகைதருவது புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னர் கடைசியாக 1995ஆம் ஆண்டில் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வருகை தந்திருந்தார். இன மோதல் உச்சத்தை எட்டியிருந்த நேரம் அது. எனவே வடக்குக்கு வருகை தருவதற்கான வாய்ப்புக்கள் அவருக்குக் கிட்டவில்லை. அதனால் தமிழர்களின் தாயகப் பகுதிக்கு வருகைதரும் முதலாவது பாப்பரசர் என்கிற சிறப்பு இன்றைய பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களுக்கே உரித்தாகிறது.*

*போர் முடிந்து, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட ஒரு சூழலில் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் வடக்கு வருகை முக்கியத்தும் மிக்கதாக அமைந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்தித்து பாப்பரசர் ஆறுதல் கூறுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.*

*உலக மக்கள் தொகையில் அதிகூடியோரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மதத்தலைவர். பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆற்றுப்படுத்துவது சக்திமிக்க அருளாசியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. துன்பங்களால் துவண்டு ஒடுங்கிப்போயிருக்கும் மக்கள் கூட்டத்தினருக்கு அது மீட்சியியைக் கொடுக்கும் என்பதும் திண்ணமே! ஆனால், அருளாசி வழங்குவதுடன் மட்டுமே பாப்பரசரின் பங்கு, பணி இது விடயத்தில் நிறைவடைந்துவிட்டது என்று வத்திக்கான் எண்ணிவிடலாகாது.*

*இலங்கைக்கான இந்தப் பயணத்தின்போது கொழும்பு அரசின் உயர் தலைவர்களைப் பாப்பரசர் நிச்சயம் சந்தித்துப் பேசுவார். அப்போது நிரந்தர அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கான முழு அழுத்தத்தையும் அவர் கொழும்பு அரசின் தலைவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதை வத்திக்கான் கவனத்தில் கொள்ளவேண்டும்.*


*பாப்பரசரின் பணி இந்த உலகில் துன்பப்படும் மக்களுக்கு ஆன்ம விடுதலை அளிப்பது மட்டுமன்று. வாழும் காலத்திலேயே கடவுளின் குழந்தைகள் நிம்மதியாகவும் கௌரவத்துடனும் வாழ்வதை உறுதிசெய்வதும் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்வதும்கூட பாப்பரசரின் பணிகளில் ஒன்றே.*

*அதிலும் 30 ஆண்டுகளாகக் கடும் துன்பங்களில் சிக்கி உழன்ற கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய தமிழ் மக்களுக்கு நிம்மதியானதும் அமைதியானதுமான வாழ்வு ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பதையும் பாப்பரசரின் பயணத்தின் முக்கிய குறிக்கோளாக வத்திக்கான் செயற்படுத்த வேண்டும் என்பது தமிழ் மக்களின் வேணவா.*

*பாப்பரசர் போன்ற உலக ஆன்மீகத் தலைவர்களின் சக்தி அபரிமிதமானது. அதில் கொஞ்சத்தை அவர் தமிழர்களின் நிம்மதியான வாழ்வுக்காவும் செலவிட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு.*

*(நன்றி - உதயன் - 17.08. 2014)*

## அருட்பணி. பாக்கியறஞ்சித் அடிகளாரின் ஏழாம் ஆண்டு நினைவு



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணி. நீ. பாக்கியறஞ்சித் அடிகளார் இறைபதம் அடைந்து ஏழு ஆண்டுகள் (26.09.2007 - 26.09.2014) பூர்த்தியாகின்றன.

இம்மாதம் 26 ஆம் திகதி காலை 5.45 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறும் அன்னாரின் இரங்கல் திருப்பலியில் பங்கேற்றுச் செபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறையடி சேர்ந்த அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் தொடர்ந்து செபிப்போம்.

## துயர் பகிர்கின்றோம்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் எஸ். ஜெயபாலன் (வங்காலை பங்குத்தந்தை) அவர்களுடைய அன்புத் தயார் திருமதி சீமாம்பிள்ளை செபமாலை அவர்கள் கடந்த யூன் மாதம் 30ஆம் திகதி இறைபதமடைந்தார்.

இவர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செபஸ்ரியம்மா அன்ரன் சோமராஜா அவர்களின் தாயுமாவார். அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைகள் யூலை மாதம் 2ஆம் திகதி முருங்கன் இசைமாலைத்தாழ்வில் இடம்பெற்றன.

இவருடைய பிரிவால் துயருறும் இவருடைய குடும்பத்தினருக்கும் குறிப்பாக எமது சகோதர குரு அருட்பணி. எஸ். ஜெயபாலன் அவர்களுக்கும், அவருடைய ஏனைய சகோதர சகோதரிகளுக்கும், குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை மன்னார் மறைமாவட்டத் திருச்சபை சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறோம். அவருடைய ஆன்மா இறைவனின் அமைதியில் இளைப்பாறுவதாக!

## நலம்பெறச் செபிப்போம்!

**மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளார் உடல் நலம் குன்றி இருக்கும் நிலையில் அவர் விரைவில் முழுமையான நலம்பெறச் செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2014

### ஐப்பசி

01 - குழந்தை இயேசு திருவிழா - பாவிலுப்பட்டான்கட்டி குடியிருப்பு
04 - செபமாலை அன்னை திருவிழா - மடுத்திருப்பதி, தங்கநகர், சகாயமாதா - பாவற்குளம்.
06 - செபமாலை அன்னை விழா - பெரியநீலாசேனை
07 - செபமாலை மாதா - மணல் மோட்டை
11 - மன்னார் மடுமாதா சிறிய குருமட விழா
14 - செபமாலை அன்னை திருவிழா - தலைமன்னார் ஸ்ரேசன்
19 - உலக மறைபரப்பு தினம் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்)
20 - மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆயராக அபிசேகம் செய்யப்பட்ட நாள் (1992)
25 - தூய அடைக்கல அன்னை திருவிழா - தட்டான்குளம்
28 - புனித யூதாததேயு திருவிழா - ஒலிமடு, இரட்டைக்குளம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மன்னார் மாணவர்கள் பெருவெற்றி



(தனி நிகழ்வும் + குழு நிகழ்வும்)
தமிழ்மொழித்தினப் போட்டி, 1ஆம் இடம்.



மன்/ சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை (குழு நிகழ்ச்சி) விவாதம் - 2ஆம் இடம்.



தேசிய மட்டத்தில் (தனி நிகழ்ச்சியில்) 1ஆம் இடத்தைப்பெற்ற மாணவர்கள்.

கடந்த யூலை மாதம் 19ஆம், 25ம் திகதிகளில் ஹற்றன். ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியிலும், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் நடைபெற்ற அகில இலங்கை. தேசிய நிலையத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில், மன்னார் வலயம். 04 முதலிடங்களையும், 01 இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

அதில் 03 முதலிடங்களையும் 01 இரண்டாம் இடத்தையும் மன்/ சித்திவிநாயகர் இந்து தேசியக் கல்லூரியும், 01 முதலிடத்தை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரையும் மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரிவு 1 ஆக்கத்திறன் வெளிப்பாடு – க. ஸ்ரீஜனனி, 1ம் இடம், மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி.
பிரிவு 1 இசையும் அசையும் - அ. டிவேய்ன், 1ம் இடம், மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.
பிரிவு 3 பாவோதல் பிரிவு – அ. ஜனுசியா, மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி.
பிரிவு 5 பாவோதல் பிரிவு – யோ. கிருஷ்னா, மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
விவாதம் : மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி. 2ம் இடம் ச. நிதாகரன், யூ. ஜெயறாஸ் லோகு. சு. டினேஸ்குமார், மை. சிவிஜா
வாழ்த்துவோர் : வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எம். சியான், வலயக்கல்விச் சமூகம்.

***தகவல் : திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)***

## முதலிடம்



பிரிவு 1இல் "இசையும் அசையும்" போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் செல்வன் அ. டிவேய்ன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆணைக்குழுமீது நம்பிக்கையில்லை!

# சாட்சியமளிக்க மறுத்து அறிக்கை சமர்ப்பித்தார் மன்னார் ஆயர்

"காணாமற்போனோர் தொடர்பில் விசாரிக்கும் ஆணைக்குழுவில் நம்பிக்கையில்லை. இது அரசின் வற்புறுத்தலின் பெயரில் நடைபெறும் கண்துடைப்பு வேலையே. தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தவே மக்கள் இந்த ஆணைக்குழு முன்பாக வருகின்றார்கள். இந்நிலையில், ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு நான் விரும்பவில்லை. பதிலாக ஓர் அறிக்கையை மாத்திரம் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்" இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை ஆணைக்குழுவின் முன்பாக நேரடியாகத் தெரிவித்துள்ளார்.



"தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோள். காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைக்குழுவின் முன்னிலையில் எனது ஆதங்கத்தை வெளிப்படுத்தவே நான் இங்கு வந்தேன் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அன்று மன்னாரில் ஆரம்பமான ஆணைக்குழுவின் மூன்றாவது நாளான அமர்வு மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது மன்னார் ஆயருக்கும் சாட்சியமளிக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி கடந்த 10.08.2014 அன்று காலை 10.30 மணிக்கு மன்னார் ஆயரும், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஏ. விக்ரர் சோசை அடிகளாரும் ஆணைக்குழுவின்முன் சமூகமளித்தனர். ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்க ஆயர் அழைக்கப்பட்டார். அந்த நேரம் அவர் 7 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து அதனை ஆணைக்குழுமுன் வாசித்துக்காட்டினார்.

ஆயரால் கையளிக்கப்பட்ட மனுவில் முதல் இரண்டு பக்கங்கள் ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்கும் கருத்துக்களும், ஏனைய பக்கங்கள் ஏற்கனவே ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட 14 அம்சக் கோரிக்கைகளும் அடங்கியிருந்தன. சுமார் 45 நிமிடங்கள் ஆணைக்குழுமுன் அவர் விளக்கமளித்தார்.

"இலங்கையில் காலத்துக்குக் காலம் பல ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவை சாட்சியங்களைப் பதிவுசெய்திருந்தன. ஆனால் இவற்றின்மூலம் தமிழ் மக்களுக்கு பலன் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. இந்த ஆணைக்குழுவும் அரசினால் கட்டாயப்படுத்தப்பட்டு ஏற்படுத்தப்பட்டதே. நீங்கள் சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. மக்கள் தங்களது ஆதங்கங்களை வெளிப்படுத்த உங்கள் ஆணைக்குழுவை ஒரு களமாக பயன்படுத்துகின்றனர் என்று மட்டுமே உணரமுடிகிறது என ஆயர் அங்கு தெரிவித்தார்.

## சாட்சிகள் வருகை தராதமைக்கு சி.ஐ.டி.யினரே முழுக் காரணம்

### மன்னார் மாவட்ட பிரசைகள்குழுத் தலைவர் ஆணைக்குழுவின் தலைவரிடம் முறைப்பாடு



மன்னார் மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதிகளவானோர் சாட்சியம் அளிக்காமைக்குக் காரணம் குற்றத் தடுப்புப் பொலிசாரே (சி. ஐ.டி) என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி. இ. செபமாலை அடிகளார் ஆணைக்குழுத் தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வு கடந்த ஓகஸ்ட் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை மாந்தை மேற்கு, மன்னார், மடு ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம்பெற்றது.

சுமார் 230 பேர் விசாரணையில் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களில் 155 பேர் மட்டுமே சாட்சியம் அளித்தனர். கடந்த 11.08.2014 அன்று அமர்வின் முடிவில் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகமவிடம் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி இ. செபமாலை அடிகளார் இது குறித்து முறைப்பாடு செய்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில், தங்கள் பிள்ளைகள், கணவன்மார், உறவினர்களை இழந்து தவிக்கும் மக்கள் உறவுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என நாளாந்தம் அங்கும் இங்குமாக அலைமோதித் திரிகின்றனர். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்த ஆணைக்குழுவின்முன் தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்தனர். எனினும் இந்தப் பகுதியிலுள்ள குற்றத்தடுப்புப் பொலிஸார் இந்த ஆணைக்குழுமுன் சாட்சியம் அளிப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை எனவும், இதனால் உங்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை எனவும் கூறிச் சாட்சியம் அளிக்கவிருந்த மக்களைத் தடுத்துள்ளனர். அத்துடன் இவர்கள் விசாரணைக்குச் சமூகமளிக்கவிருந்த மக்களை அச்சுறுத்தியதாகவும் எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆகவே உறவுகளை இழந்து வேதனையிலும் சோதனையிலும் உள்ள மக்களுக்கு இந்தக் குற்றத் தடுப்புப் பொலிஸாரின் நடவடிக்கைகள் மேலும் வேதனையைக் கொடுத்துள்ளன என்றார்.

இதற்கு ஆணைக்குழுவின் தலைவர் பதிலளிக்கையில், இந்த ஆணைக்குழு காணாமற்போனோர் சம்பந்தமாக விசாரணை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதொன்றாகும். இதன் மூலம் மக்களுக்கு விமோசனம் ஒன்றை பெற்றுக்கொள்வதே நோக்கமாகும். ஆகவே இதனை எவரும் தடைசெய்வதை அனுமதிக்கமுடியாது என்று கூறினார்.

## அருட்பணி. எட்வின் தேவதாசன் (அமதி) இறைபதம்

### கண்ணீர் அஞ்சலி!



**மன்னார் மறைமாவட்டம் விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்தவரும், அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தைச் சார்ந்தவருமான அருட்பணியாளர் எட்வின் தேவதாசன் (அமதி) அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியை ஆழ்ந்த வருத்தத்தோடு மன்னா தெரிவிக்கின்றது.**

கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி இறைபதமடைந்த இவரின் இறுதிக் கிரிகைகள் 20ஆம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருகோணமலை ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் ஏழு வருடங்கள் மட்டுமே பணியாற்றினார். இவரின் எதிர்பாராத இறப்பு அனைவரையும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்த கவலையிலும் ஆழ்த்தியுள்ளது. இந்த ஏழு வருட குறுகிய காலத்தில் அவர் ஆற்றிய அரும்பணிகள் அளவிட முடியாதவை.

40 வயது நிரம்பிய அருட்பணி. எட்வின் தனது குறுகிய பணிக்காலத்தில் தன் அர்ப்பணம் நிறைந்த அன்புப் பணிகளால் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவராவார். இவருக்கு ஏற்பட்ட எதிர்பாராத திடீர் சுகவீனம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் 18 நாட்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டு வைத்தியர்களின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

எட்வின் அடிகளாருக்கு மன்னா தனது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது அன்புக் குடும்பத்தினருக்கும், விடத்தல்தீவுப் பங்குச் சமூகத்திற்கும், அமதிகள் சபையினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

**இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற தொடர்ந்து செபிப்போம்!**

## அர்ப்பண வாழ்வில் வெள்ளிவிழாக் காணும் அருட்சகோதரி திரேசா (அ.க.ச)



முருங்கன் பிச்சகுளம் கிராமத்தைச் சேர்ந்தவரும், அருள்நிறை கன்னிமரி சகோதரிகள் (Sisters of Blessed Virgin Mary) சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி திரேசா அவர்கள் தனது அர்ப்பண வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து (1989.09.08 - 2014.09.08) வெள்ளிவிழாக் காண்கிறார்.

இவர் அந்திரேஸ், விவிந்தா தம்பதிகளுக்கு மகளாக 1963.12.15 அன்று பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/சிறுக்கண்டல் றோ.க.த.க பாடசாலையிலும் உயர்கல்வியை மன்/முருங்கன் மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

பின்பு 1985.11.21 அன்று அருள் நிறை கன்னிமரி சபையில் இணைந்துகொண்டார். தனது முதல் வாக்குத்தத்தத்தை 1989.09.08 அன்று அளித்தார். நித்திய வாக்குத்தத்தத்தை 1994.12.08 அன்று அளித்தார்.

2006 – 2009 வரை புதுமுக அருட்சகோதரிகளை பயிற்றுவிக்கும் பணியை ஆற்றினார். கம்பளை, தவளந்தன, கந்தப்பள, களனி, வலிகன ஆகிய இடங்களில் பாடசாலை ஆசிரியராகவும், சமூக சேவையிலும், சிறுவர்களை பராமரித்தலிலும் ஈடுபட்டார்.

தற்போது மன்னார் காத்தான்குளத்தில் அருள்நிறை கன்னிமரி சபையின் மடத்தலைவியாக பணிபுரிகின்றார். அருட்சகோதரியின் பணிவாழ்வு சிறந்திட இறைவன் தாமே உடல், உள நலத்துடன் ஆசீரையும் வழங்கி வழிநடத்திட வேண்டுமென்று மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**தகவல் : சார்மிளா, காத்தான்குளம்.**

## பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலப் பெருவிழா





செட்டிகுளம், பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா கடந்த 03.08.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பெரியகட்டு அந்தோனியார் ஆலயத்தின் பெருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்த நிலையில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை, அருட்பணி. எம். ஏ. ஜெயசீலன் மற்றும் பல குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியின் நிறைவில் புனித அந்தோனியாரின் திருச்சுருபப் பவனி நடைபெற்றது. செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. பெனோ அலெக்சாண்டர் இவ்விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை குருக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களின் உதவியோடு மேற்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நலனைக் கருத்தில் எடுத்து உடன் இணைந்து செயற்படுங்கள்

## மத்திய அரசிடமும், வடக்கு மாகாண அரசிடமும் யாழ் ஆயர் கோரிக்கை

தமிழர்களின் எதிர்கால நலனையும் அபிலாஷைகளையும் கருத்தில்கொண்டு அரசும் மாகாண சபையினரும் இணைந்து செயற்பட வேண்டிய அவசரத் தேவை இன்று உள்ளது. இரு தரப்பினரும் பொதுநலனைக் கருத்தில்கொண்டு இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், வடக்கு மாகாண முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரனையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியதை அடுத்து அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ஓகஸ்ட் மாத இறுதியில் நடைபெற்ற இலங்கை ஆயர் பேரவையின் கூட்டத்தொடரின் இறுதியில் இலங்கை ஆயர்கள் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தோம். அங்கு தற்போதைய நாட்டின் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடினோம். குறிப்பாகப் பொதுபல சேனாவுடைய அத்துமீறிய செயற்பாடுகள், இராணுவத்தின் நில அபகரிப்பு போன்ற விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன.



யாழ் ஆயர் என்ற முறையில் நான் குறிப்பாக இரு விடயங்களைப்பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினேன். முதலாவதாக போர் முடிந்து ஐந்து வருடங்களும் மாகாண சபை நிர்வகிக்கப்பட்டு ஓர் ஆண்டு கடந்தும் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் தவிர்ந்த எந்தவித அரசியல் தீர்வுகளும் தமிழர்களுக்கு முன்வைக்கவோ கொடுக்கப்படவோ இல்லை என்பதும் இரண்டாவதாகத் தமிழர் குடிநிலங்களும், அவர்களது வணக்கத்தலங்களும் இராணுவத்தின் நிலஅபகரிப்புக்கு உள்ளாவதும் மிகவும் வேதனைக்குரியது என்றேன்.

மாகாண சபையினரோ முதலமைச்சரோ அரசுடன் இணைந்து செயற்பட முன்வரவில்லை. கொடுக்கப்படுகின்ற அழைப்புக்களை ஏற்று எந்தக் கூட்டங்களுக்கும் சமூகம் கொடுப்பதில்லை. அவர்கள் அரசுடன் இணைந்து செயற்படாதவரை நம்மால் எதையும் செய்ய முடியாது. மக்கள் குடியிருப்புக்கள் ஒருபோதும் அபகரிக்கப்படமாட்டாது. அந்த நிலப்பரப்பு தற்போது அளவிடப்பட்டு வருகிறது. விரைவில் உரியவர்களுக்கு அவர்களது சொந்த நிலம் வழங்கப்படும். மக்களின் வணக்கஸ்தலப் பிரதேசங்களும் விரைவில் மீளக் கையளிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதியின் பதில் அமைந்திருந்தது.

யாழ் திரும்பிய நான் முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட்ட மாகாண சபையினரை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின் விடயங்கள்பற்றிப் பேசினோம். அதற்கு வடக்கு முதலமைச்சர் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார். பலமுறை பல கூட்டங்களுக்குச் சென்றுவந்தபோதும் ஆக்கபூர்வமான விடயங்கள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற எண்ணமும் அரசிடம் தென்படவில்லை. எனவேதான் நாம் அரசின் அழைப்பை நிராகரிப்பதற்குரிய காரணமாயிற்று என்றார். இந்நிலையில் தமிழர்களின் எதிர்கால நலன்களையும் அபிலாசைகளையும் கருத்தில்கொண்டு அரசும் மாகாண சபையினரும் ஒருவர்மீது ஒருவர் பிழைகண்டுபிடிப்பதைத் தவிர்த்து தமிழர் நலனுக்காக இணைந்து செயற்பட வேண்டிய அவரசரத் தேவை இன்று உள்ளது. இதற்கு இரு தரப்பினரும் பொதுநலனைக் கருத்தில்கொண்டு இணைந்து செயற்பட முன்வர வேண்டும் - யாழ் ஆயர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மதுரை உயர் மறைமாவட்டத்திற்கு புதிய பேராயர்

இந்தியாவில் மதுரை உயர்மறை மாவட்டத்தின் புதிய பேராயராக ஆயர் அந்தோனி பாப்புசாமி அவர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் நியமித்துள்ளார்.



மதுரை உயர் மறைமாவட்டத்தின் பேராயராகப் பணியாற்றிவந்த பேராயர் பீட்டர் பெர்னான்டோ அவர்களின் பணி ஓய்வை திருஅவைச்சட்டம் 401, பிரிவு 1இன்படி ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திண்டுக்கல் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிவந்த ஆயர் அந்தோணி பாப்புசாமி அவர்களை மதுரை உயர் மறைமாவட்டத்தின் புதிய பேராயராக நியமித்துள்ளார். புதிய பேராயரின் பணிசிறக்க வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

# சிறப்பாக நடந்துமுடிந்த 8வது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு – 2014




எட்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு கண்டியில் உள்ள பொல்கொல்லை என்ற இடத்தில் கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை சிறப்பாக இடம்பெற்றது. "திருச்சபையும் சமூகப்பணியும்" என்ற மையப்பொருளில் இடம்பெற்ற இந்த நான்கு நாள் மாநாட்டில் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளைச் சேர்ந்த தமிழ்க் கிறிஸ்தவ அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

தொடக்க விழாவின்போது மாநாட்டு ஆரம்ப உரையை மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். தொடக்க விழாவின் சிறப்பு நிகழ்வாக முருங்கன் முத்தமிழ் கலாமன்றக் குழந்தைக் கலைஞர்கள் வழங்கிய 'யார் குழந்தை?' என்ற நாட்டுக்கூத்து நாடகம் இடம்பெற்றது. நிறைவுநாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை கலந்துகொண்டார்.

இந்தியாவைத் தளமாகக்கொண்டு இயங்கும் உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவையின் அனுசரணையோடு இம்மாநாடு இடம்பெற்றது. இலங்கையில் இம்மாநாட்டை நடத்துவதற்கென 'இலங்கை மாநாட்டுக் குழு' ஏற்படுத்தப்பட்டிருந்தது. இக்குழுவின் தலைவராக அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த வண. போதகர் ஸ்டீபன் அருளம்பலம் அவர்களும், செயலாளராக இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த வண. போதகர் ஜோன் பேரானந்தம் அவர்களும் இன்னும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பல்வேறு திருச்சபைகளைச் சேர்ந்தவர்களும் இடம்பெற்றிருந்தனர். மாநாட்டு இணைப்பாளராக திரு. கிறிஸ்ரி அவர்கள் செயலாற்றினார். கத்தோலிக்க திருச்சபை, பிராதான திருச்சபைகள் மற்றும் சுயாதீனத் திருச்சபைகள் ஆகிய அனைத்துத் திருச்சபைகளையும் உள்ளடக்கியதாகவே இந்த மாநாடு இடம்பெற்றது.

முதல் மூன்று நாட்கள் இடம்பெற்ற பொது அமர்வில் தமிழையும், கிறிஸ்தவத்தையும், திருச்சபையின் சமூகப் பணிகளையும் உள்ளடக்கிய பல ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்றன. இதைவிட ஒரே நேரத்தில் பல்வேறு தலைப்புக்களில் பாசறைகளும் இடம்பெற்றன.

இம்மாநாட்டின் நிறைவுவிழா நிகழ்வுகள் புசல்லாவையில் இடம்பெற்றன. புசல்லாவை அங்கிலிக்கன் ஆலய வளாகத்தில் மாநாட்டு நினைவுப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. இலங்கைத் திருச்சபையின் குருநாகல் மறைமாவட்ட ஆயர் சாந்தா பிரான்சிஸ் அவர்கள் இம்மாநாட்டுப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார். நிறைவுநாள் நிகழ்வின்போது மாநாட்டுத் தீர்மானங்களை அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வாசித்தார். நிறைவு விழாவில் பல்வேறு துறைசார்ந்த அறிஞர்கள் விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.




DON BOSCO
VOCATIONAL TRAINIHG CENTRE
MURUNKAN

2015ம் ஆண்டிற்கான பயிற்சிநெறிகளை புதிய தொழில்நுட்ப முறைகளில் வழங்குகின்றது உங்கள் தொன் பொஸ்கோ!

தக்கென தனி இடத்தை பிடித்து, தன் சேவையை பல்வேறு துறைகளில் வழங்கிக்கொண்டிருக்கும் தொன் பொஸ்கோ பயிற்சி நிலையம் இம்முறையும் தனது பயிற்சிநெறிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது.

விசேட கற்கை நெறிகளும் பயிற்சிகளும்

- Computer Jan. 2015
- கணனி வகுப்பு – தை 2015
- Motor Mechanic – Jan. 2015
- இயந்திர தொழில்நுட்பம் - தை 2015
- Welding – Jan 2015
- ஒட்டு வேலை – தை 2015
- Carpentry – Jan 2015
- தச்சு வேலை – தை 2015
- Tailoring – Jan 2015
- தையல் பயிற்சி – தை 2015





உலகில் எந்த நாட்டிற்கு கொண்டுசென்றாலும் நல்மதிப்புடைய, பெறுமதிமிக்க (NVQ) சான்றிதழ்கள் பயிற்சியின் இறுதியில் வழங்கப்படும்.

தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
Don Bonsco
Murunkan Pitty, Murunkan
T.P. 0232050370
dbtechmannar@gmail.com
www.sdblanka.org



DBTECH
Murunkan

DON BOSCO
Murunkan

Tel: 0232050370/ e – mail: dbtechmannar@gmail.com www.sdblanka.org



Face the Future with confidence
ENGLISH & COMPUTER
@ Dbtech
Murunkan

- Advanced Level Certificat
- Helpful to enhance your career prospects.
- Quality Tutorial Books
- Qualified Staff


A three months English course

A General English course designed to cover and improve the 4 main language skills of Reading, Writing, Listening & Speaking.

Monday - Friday
Duration : 3 months
Time: 8.00a.m - 12.30 p.m
Commencement : 10 September
Register before: 4 September
Interview 5,6,8 September

Post A/L Students are most welcome

- Modern A/C Lecture Room
- Audio Visual Equipment
- Library Facilities
- this course provides a unique combination of academic & vocational skills necessary for stdents to excel at their work place.



A three month computer course @ DBTCH



Obtain a certificate in computing

you are Welcome

Register now for the September 2014 Course


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# இலங்கையில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியே!

## – மன்னார் ஆயர் –

இலங்கையில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாக உள்ளது. ஊடகம் என்பது உண்மைகளை வெளிக்கொண்டுவருவதே, ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் ஊடக சுதந்திரம் என்பது கேள்விக்குறியாகியுள்ளது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

பல ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்படுவதும், காணாமல்போவதும் ஊடக அலுவலகங்கள் தாக்கப்படுவதும் என நீண்டகாலமாக இருந்துவரும் துர்ப்பாக்கியநிலை தொடர்ந்தவண்ணமே உள்ளது. உண்மைகள் வெளிவந்துவிடும் எனும் அச்சத்தினாலேயே அரச கையாட்கள் இவ்வாறான தீய காரியங்களை மேற்கொள்கின்றனர் என மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

மன்னாரில் இருந்து வெளிவரும் தமிழ் நாழிதழான புதியவன் தனது 150ஆவது இதழை கடந்த 02.08.2014 அன்று வைபவ ரீதியாக வெளியிட்டு மகிழ்ச்சி கண்டுள்ளது. புதியவனின் துணை ஆசிரியர் மக்கள் காதர் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

## பாதுகாப்புக் குறித்து ஆராய்வு

பாப்பரசரின் மடு வருகையின்போது பாதுகாப்புத் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் கடந்த ஆவணி மாதம் 14ஆம் திகதி மடு ஆலயத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பரிசுத்த பாப்பரசர் மன்னார் மாவட்டத்தின் யாத்திரைத்தலமான மடு ஆலயத்துக்கும் செல்கிறார். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பிலேயே இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் உயர் அதிகாரிகள், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை, மடுப்பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.




## மடு ஆலயத்தின் புனிதத்தன்மை குறித்து இருநாள் விழிப்புணர்வுக் கருத்தமர்வு

மடு ஆலயத்தின் புனிதத்தன்மையைக் கருத்தில்கொண்டு திருவிழாக் காலத்தில் சிறுவர்கள் மற்றும் பெரியோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் மது மற்றும் போதைப்பொருள் பாவனையைத் தவிர்த்தல் தொடர்பான இருநாள் விழிப்புணர்வுக் கருத்தமர்வு நடைபெற்றது.

மதுவரித் திணைக்களத்தின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மடுத் திருத்தல தியான மண்டபத்தில் கடந்த ஆவணி மாதம் 13, 14 ஆகிய தினங்களில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. இதன்போது மது மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள், அதன் தாக்கம், விளைவுகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கருத்தமர்வில் மதுவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் மல்லவ, திணைக்களத்தின் பிரதம பரிசோதகர், அருட்தந்தையர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

# வங்காலை புனித அன்னம்மாள் ஆலயத்திருவிழா






வங்காலைப் பங்கின் புனித அன்னம்மாள் ஆலயத்திருவிழா சென்ற ஆடி மாதம் 26ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக்கிராமத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் புனித ஆனாள் அன்னை கொலுவீற்றிருந்து தம்மை நாடி வருவோருக்கு கருணைமழை பொழிந்து வருகிறார். தனது ஆன்மீக வாழ்க்கையில் முன்மாதிரிகையாக வாழ்ந்த ஆனாள் அன்னை இறைவனின் தாயாகும் வரத்தை அன்னை மரியாளுக்கு பெற்றுக்கொடுத்தார். இதனால் எல்லாத் தலைமுறையினரும் பேறுபெற்றவர் எனப் புகழும்வண்ணம் இறைவன் இவரை உயர்த்தினார்.

இத்திருவிழா ஆடி மாதம் 17ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. திருவிழா ஆயத்த நவநாட்களில் இந்தியாவிலிருந்து வருகைதந்த அருட்தந்தை அந்தோனிராஜ் அவர்களால் தினமும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் நடைபெற்ற நற்கருணை வழிபாட்டில் மறையுரையும், குணமாக்கும் வழிபாடும் நடத்தப்பட்டது. அடிகளாரின் மறையுரையிலே இவ்வருட குடும்ப ஆண்டில் "இறைவார்த்தையில் மலரும் உறவுகளில் பிறரை உயர்வாக மதிப்போம்" போன்ற தலைப்பிலான மறையுரைகள் மக்கள் உள்ளத்தைத் தொட்டுநின்றன. திருவிழாவிற்கு முன்தினம் இரவு வேஸ்பர் ஆராதனை, திவ்விய நற்கருணை எழுந்தேற்றம், இறைபுகழ் உரை, நற்கருணைப் பவனி, நற்கருணை ஆசீர்வாதம் ஆகியன இடம்பெற்றன.

அடுத்தநாள் திருவிழாக் கூட்டுத்திருப்பலியானது காலை 6.00 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. திருப்பலி முடிவில் ஆனாள் அன்னையின் திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்ட வலம்புரிச்சங்கில் எழுந்தருளி வைக்கப்பட்டு திருச்சுரூபப் பவனியும் இடம்பெற்றது. இப்பவனி இடம்பெற்றபோது ஆலய மைதானம் மக்கள் வெள்ளத்தால் அலைமோதியமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இத்திருவிழாவிற்கான சகல ஆயத்தங்களையும், வழிபாடுகளையும் பங்குத்தந்தை அருட்பணி சீ. ஜெயபாலன் அடிகளார் ஒருங்கமைத்து நெறிப்படுத்தினார். இத்திருநாட் திருவிழாவிற்கு ஏராளமான பக்தர்களும், அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், கௌரவ அமைச்சர் மில்றோய் பெர்ணாண்டோ, தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர்திரு சிவசக்தி ஆனந்தன், உயர்திரு செல்வம் அடைக்கலநாதன் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். இறுதியில் மறைமாவட்ட ஆயர் அவர்களால் அன்னையின் திருச்சுரூப ஆசிர்வாதமும் வழங்கப்பட்டு திருவிழா சிறப்பாக நிறைவுபெற்றது.

**தகவல் : ஜெயதாஸ் மிராண்டா, தோழமைக்குழு.**

# யோசப்வாஸ் நகரில் நற்கருணை நாதர் திருவிழா

யோசப்வாஸ் நகரில் உள்ள நற்கருணை நாதர் திருவிழா கடந்த ஆனி மாதம் 13ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகியது. அன்றைய தினம் தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் அடிகளார் தலைமையில் மறையுரையாளர் அருட்பணி. அந்தோனிராஜ் அடிகளார், ஆன்மீக மைய இயக்குனர் அருட்பணி யூட்குருஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து கொடியேற்றி நவநாள் வழிபாடுகளை ஆரம்பித்துவைத்தனர்.

எட்டு நாட்களாக மறையுரையாளரின் மறையுரைகள் மக்களின் ஆன்மீக வாழ்வை இறைவனோடு இணைய வைத்தது. கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் மையமுமாகிய நற்கருணைநாதரின் அன்பு, ஒற்றுமை, தியாகம், பகிர்வு போன்ற விடயங்கள் மறையுரையில் ஆழமாகப் பிட்டுக்கொடுக்கப்பட்டது. 9வது நாளில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்டர் சோசை அடிகளார் தலைமை தாங்கி திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

22.06.2014 அன்று காலை 7.00 மணிக்கு மேன்மை தங்கிய மன்னார் ஆயர் தலைமையில் திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இன்னும் சிறப்பான முறையில் அருட்பணி அந்தோனிராஜ் அடிகளார் காலையிலும் மாலையிலும் குடும்பங்களைத் தரிசித்து ஆழமான உறவுநிலைக்குள் மக்களை இட்டுச்சென்றது மிகவும் சிறப்பான ஒரு செயல்பாடாக அமைந்திருந்தது.

**- தகவல், எ. அற்புதராணி**

## கீளியன்குடியிருப்புப் பங்கின் அண்மைக்கால முன்னெடுப்புக்கள்

**03.03.2014 அன்று சிரமதானமும், நிதிவழங்கலும்**

ஒரு இளம் பெண்ணின் மருத்துவத் தேவை கருதி பங்குச் சமூகம் ஒன்றிணைந்து பாரிய சிரமதானப் பணியை முன்னெடுத்தது. (பனைமரம் வெட்டியது) இதில் கிடைத்த ரூபா 77,000.00 அப்பெண்ணுக்கு வழங்கப்பட்டது.

**12.03.2014 தவக்காலக் கருத்தமர்வு**

அன்று மாலை 3.00 மணிக்கு திருமண பந்தத்தில் 10 வருடம் பூர்த்தியடைந்தவர்களுக்கான தவக்காலக் கருத்தமர்வு அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரால் மேற்கொள்ளப்பட்டது.

**28.03.2014 சிலுவைப்பாதையும் தவக்காலத்தியானமும்**

அன்று மாலை 4.00 மணிக்கு பெரிய சிலுவைப்பாதையும், தவக்காலத் தியானமும் மறைமாவட்டக் குருக்களால் நடத்தப்பட்டது.

**20.04.2014 சிரமதானம்**

மேதின விழாவை நடத்தும் முகமாக பங்குச் சமூகம் ஒன்றிணைந்து சிரமதானம் மேற்கொண்டு நிதி பெறப்பட்டது.

**01.05.2014 விளையாட்டுப் போட்டி**

மேதினத்தையொட்டி விளையாட்டுப்போட்டி நடத்தப்பட்டது. சைக்கிள் ஓட்டம், மரதன், கரப்பந்தாட்டம், இன்னும் பல விளையாட்டுக்கள் பங்குச் சமூகத்தால் கலந்து சிறப்பிக்கப்பட்டது.

**15.05.2014 குணமாக்கல் வழிபாடு**

இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்பணி. பீற்றர் பிரான்சிஸ் அவர்களும் அவருடைய குழுவும் இணைந்து நடாத்தினர்.

**பங்கு நிகழ்வுகள்**

**05.01.2014 மேய்ப்புப் பணித் திட்டமிடல்**

பங்குத்தந்தையின் தலைமையில் பங்குச்சபை உறுப்பினர்கள், அருட்சகோதரி, மறையாசிரியர்கள், வழிபாட்டுக்குழுவினர், பக்திச் சபை உறுப்பினர்கள் ஆகியோரால் இணைந்து திட்டமிடப்பட்டது.

**25.01.2014 வீடுதரிசிப்பு**

பூலார் குடியிருப்பு ஆலய மக்களின் வீடுகள் அருட்சகோதரர் யேசுபாலன் அவர்களால் தரிசிக்கப்பட்டு ஆன்மீகத்துக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

**28,29.01.2014 வீடுதரிசிப்பு**

துள்ளுக்குடியிருப்பு ஆலய மக்களின் வீடுகளும் அருட்சகோதரி அவர்களால் தரிசிக்கப்பட்டது.

**22.02.2014 கருத்தமர்வு**

மறையாசிரியர், வழிபாட்டுக்குழு, பாடகர்குழாம், ஆகியவற்றை ஒன்றிணைத்து அருட்பணி. றெஜினோல்ட் அடிகளார் அவர்களால் கருத்தமர்வு நடத்தப்பட்டது.

**27.02.2014 ஓகன் வகுப்பு ஆரம்பம்**

அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் அவர்களால் ஓகன் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

**27.05.2014 கருத்தமர்வு**

திருமணத்தில் 07 வருடம் பூர்த்தியானவர்களுக்கும், இளைஞர், யுவதிகளையும் ஒன்றிணைத்து கருத்தமர்வு நடைபெற்றது.

**31.05.2014 செபமாலை பேரணி**

பங்கின் மரியாயின் சேனைகளின் முன்னெடுப்பில் மாபெரும் செபமாலைப் பேரணி துள்ளுக்குடியிருப்பில் ஆரம்பித்து பங்கு ஆலயத்தில் முடிவுபெற்றது.

**19.06.2014 சுற்றுலா**

பங்குசபை உறுப்பினர்கள், மறையாசிரியர்கள் ஆகியோர் யாத்திரைத்தலங்களுக்கும், மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் சுற்றுலா சென்றனர்.

**- எஸ். வசீகர், செயலாளர், பங்கு மேய்ப்புப் பணிச்சபை.**

### பங்குச் செய்திகளை அனுப்புவோர் கவனத்திற்கு

உங்கள் பங்கில் நடைபெறும் விசேட நிகழ்வுகளை, (அசாதாரணமான, மற்றப் பங்குகளுக்கு முன்னுதாரணமான செய்திகளை) எமக்கு அனுப்புங்கள். காலம் தாமதிக்காமல் உடனுக்குடன் பங்குத்தந்தையின் கையெழுத்துடன் படங்களுடன் சேர்த்து எமக்கு அனுப்புங்கள். பல மாதங்கள் கடந்த நிலையில் பழைய செய்திகளை அனுப்ப வேண்டாம் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்

## புனித செபஸ்தியார் பேராலயப் பங்கின் அன்பிய விழா நிகழ்வுகள்

மன்னார் பேராலயப் பங்கில் மாதத்தின் இரண்டாவது சனியன்று நடைபெற்றுவரும் பங்கு அன்பிய இணைப்பாளருக்கான ஒன்றுகூடல் கடந்த யூன் மாதம் 14ஆம் திகதி பங்குத்தந்தையின் தலைமையில் இடம்பெற்றது. சுமார் 75 அன்பியப் பணியாளர்களுடன் அன்பியவாரச் செயல்திட்ட முயற்சிகள் தீர்மானிக்கப்பட்டன.

அன்பிய வாரத்தின் ஒவ்வொரு நாள் திருப்பலியினை ஒவ்வொரு வலயங்கள் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஆன்மீக ஆயத்தங்கள் மேற்கொண்டன. வலயங்களில் சோர்வுற்றிருக்கும் அல்லது செயல்படாதிருக்கும் அன்பியங்களையும், அவ்வன்பிய இணைப்பாளர்களையும் அவ்வலயத்தின் இணைப்பாளர்கள் சென்று சந்தித்து, அங்கு இல்ல வழிபாடுகளை நடத்துவதன் மூலம் அன்பியங்கள் புதுப்பொலிவு பெற்று எழுச்சிபெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரின் மடுப் பயணம் மாற்றத்தை ஏற்படுத்தும்

## எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் நம்பிக்கை

மடுத் தேவாலயத்துக்கான பரிசுத்த பாப்பரசரின் பயணம், போரால் பாதிக்கப்பட்டவர்களின் தற்போதைய நிலைகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உதவியாக இருக்கும் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்பணியாளர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

வத்திக்கான் இன்சைடர் இணையத்தளத்துக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

"எதிர்வரும் ஜனவரி மாதம் 13 முதல் 15ஆம் திகதிவரை மேற்கொள்ளவுள்ள தனது இலங்கைப் பயணத்தின்போது பரிசுத்த பாப்பரசர் மடுத்தேவாலயத்துக்குச் செல்வார். அதன்மூலம் பெருமளவு தமிழ் மக்கள் வாழும் மடுப்பகுதியில் காலடிவைக்கும் முதலாவது பரிசுத்த பாப்பரசராகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற சிங்களவர் தமிழர்களுக்கிடையிலான 26 வருடகால உள்நாட்டுப் போரில் மிகவும் உணர்வுபூர்வமான விடயத்துக்குள் நுழைவதற்கு அவர் தீர்மானித்துள்ளார். பரிசுத்த பாப்பரசரின் பயணம் சில போக்குவரத்துப் பிரச்சினைகளை உள்ளடக்கியது. எனினும் நல்லிணக்கத்தை மையப்படுத்திய இந்தப் பயணத்தின்போது தமிழ் மக்களைப் புறக்கணிக்க முடியாது.

தமிழ் மக்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பு ஆட்சியின் கீழேயே வாழ்கின்றனர். அவர்கள் இன்னமும் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் ஒடுக்குமுறை போன்ற மனித உரிமை



மீறல்களுக்கு உட்படுகின்றனர். பரிசுத்த பாப்பரசரின் இந்தப் பயணம் திருச்சபைக்குத் திருப்புமுனையாக அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இரண்டாம்தர இறுதிப்போட்டியில் விடத்தல்தீவு யுனைற்றட் அணி அசத்தல்





மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட 'B'Division அதாவது இரண்டாம் தர அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான ஆட்டம் கடந்த 17.08.2014 இன்று முடிவுக்கு வந்தது. 16 அணிகள் இதில் பங்குபற்றின.

17.08.2014 அன்று இச்சுற்றின் இறுதிப்போட்டியானது மன்னார் பொது விளையாட்டரங்கில் முருங்கன் பொதுசன விளையாட்டுக் கழகத்திற்கும் விடத்தல்தீவு யுனைற்றட் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான இரசிகர்கள் மத்தியில் மாலை 3.30 மணிக்கு இச்சுற்றுப்போட்டியின் பிரதம விருந்தினராகிய சமூக சேவையாளர் திரு. சார்ள்ஸ் நிர்மலநாதன் அவர்களை இரு அணி வீரர்களும் லீக் நிர்வாகத்தினரும் வரவேற்றனர். வீரர்களின் அறிமுகத்தைத் தொடர்ந்து 4.00 மணிக்கு இறுதிப்போட்டி ஆரம்பமாகியது.

போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை எந்த அணி வெல்லும் எனத் தெரியாதவாறு இரு அணிகளும் மிகவும் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் ஆடிக்கொண்டிருந்தனர். 8ம் நிமிடத்தில் யுனைற்றட் அணியின் வீரர் நிதர்சன் தமது அணிக்காக முதலாவது கோலைப்போட, 26ம் நிமிடத்தில் மீண்டும் யுனைற்றட் அணியின் வீரர் சுரேந் தமது அணிக்காக இரண்டாவது கோலை பெனால்டி முறையில் போட இடைவேளையின்போது ஆட்டம் 2 - 0 ஆகக் காணப்பட்டது.

இரண்டாம் பாதியில் 50ம் நிமிடத்தில் மீண்டும் யுனைற்றட் அணியின் சார்பில் தீபன் மூன்றாவது கோலைப் போட்டு அணியின் வெற்றியை உறுதிசெய்தார். இருந்தும் முருங்கன் அணியினர் இறுதிவரை கடுமையாகப் போராடியும் ஆட்டம் 3 - 0 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது.

2014ம் ஆண்டிற்கான லீக்கின் 'B' Division கிண்ணத்தை விடத்தல்தீவு யுனைற்றட் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது. லீக் செயலாளர் திரு. ஞானராஜ் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டன.

# காஸா கிறிஸ்தவக் கோவிலில் தொழுகை நடத்திய முஸ்லிம்கள்

காஸாவில் அமைதி நிலவ வேண்டி அங்குள்ள முஸ்லிம்கள் காசா புனித போர்பைரியஸ் கிறிஸ்தவக் கோவிலில் தொழுகை நடத்தினர். காஸாவில் இஸ்ரேல் தொடர்ந்து குண்டுமழை பொழிந்து வந்ததால் காஸா நகரில் உள்ள கிறிஸ்தவக் கோவிலில் ஏராளமான பாலஸ்தீனிய இஸ்லாமியர்கள் தஞ்சமடைந்த நிலையில் அவர்கள் கோவிலிலேயே தொழுகை நடத்த கிறிஸ்தவத் தலைவர்கள் அனுமதி வழங்கியிருந்தனர்.

கிறிஸ்தவக் கோவிலில் தொழுகை நடத்த தஞ்சமடைந்துள்ள இஸ்லாமியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் கிறிஸ்தவர்கள் குறித்து தங்களின் எண்ணத்தை மாற்றியுள்ளதாகவும் அவர்களைச் சொந்த சகோதரர்கள்போல் எண்ணுவதாகவும் இக்கோவிலில் அடைக்கலம் தேடியுள்ள மெஹ்மூத் காலப் என்பவர் கூறினார்.

ரமலான் நோன்பு காலத்தில் தங்கள்முன் சாப்பிடாமல், கிறிஸ்தவர்கள், இஸ்லாமிய நோன்பிற்கு மரியாதை அளித்ததாகவும் அவர் மேலும் கூறினார்.



காசாவின் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் புனித போர்பைரியஸ் கோவிலில் ஏறத்தாள 1000 முஸ்லிம்கள் அடைக்கலம் தேடியிருந்தனர். காசா பகுதியின் 18 இலட்சம் இஸ்லாமியரிடையே 1400 கிறிஸ்தவர்களே வாழ்கின்றனர்.

# மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு

உலகம் தோன்றி உயிரினங்கள் நிலைக்கக் களமாக அமைவது பெண்மை. அன்பு தழைக்க, அறம் நிலைக்க அருள் துளிர்க்கக் காரணமாக இருப்பது பெண்மையே. தியாகம், கடமை, பொறுமை, அன்பு, பாசம் இவை முகிழ்ப்பதும் பெண்மையில். இந்தப் பெண்மையே இயேசுக்களையும், நபிநாயகங்களையும், சித்தார்த்தர்களையும் படைத்தது. இந்தப் பெண்மைதான் தாயாக, மனைவியாக, மகளாக, மருமகளாக, மாமியாராக, பாட்டியாகப் பல்வேறு நிலைகளைப் பெறுகிறாள்.

### அந்தோனியார்புரம் மற்றும் நேவன்பிட்டிப் பங்குகளின் பெண்கள்

இப்படிப்பட்ட நிலைகளில் வாழ்ந்துவரும் நாங்கள், கத்தோலிக்கப் பெண்கள் பணிக்குழுவில் சேர்ந்து இயேசுவின் விழுமியங்களை வாழ்வாக்கவும், தன்னுடைய ஆளுமைத் திறனை வெளிப்படுத்தவும், விழிப்புணர்வுபெற்ற பெண்களாகவும் திகழமுனைகின்றோம். இறை அன்பிலும் பிறர் அன்பிலும் தங்களை வளர்த்துக்கொள்ள முன்வந்த 68 அந்தோனியார்புரத்து பெண்களையும், தேவன்பிட்டி பங்கிலுள்ள 92 பெண்களையும் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவினராகிய நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்கள் தொடர்ந்து ஆர்வத்தோடும்,



உற்சாகத்தோடும், திருச்சபைக்கும், சமூதாயத்திற்கும் உப்பாக, ஒளியாக வாழச் செபிக்கின்றோம். அவர்களை ஒருங்கிணைத்த பங்குத்தந்தையர்கள் அருட்பணி. ஏ. றஜனிகாந்த் மற்றும் அருட்பணி. அருட்குமரன் அவர்களுக்கும் மற்றும் CIC அருட்சகோதரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

அன்றைய நிகழ்வுகள் அனைத்தையும், கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகள், மற்றும் தலைவி, செயலாளர், பொருளாளர் பங்கேற்று வழிநடத்தினார்கள்.


# லியோன்சின் புனித வளன் சபை அழைக்கிறது!

**தங்கையே,**
உங்களை எம் வளன் சபை
அன்போடு வரவேற்கிறது.
அன்று ஆண்டவர்
ஆபிரகாமை நோக்கி,
உன் நாட்டிலிருந்தும்,
உன் இனத்தாரிடமிருந்தும்,
உன் தந்தை வீட்டிலிருந்தும்
புறப்பட்டு நான் உனக்குக்
காண்பிக்கும் நாட்டிற்குச்
செல் என்றார் (தொ.நு.12:1) இன்று ஆண்டவர் உங்களையும் அதற்காகவே அழைக்கிறார். புறப்படு மகளே! புறப்படு!!!



**எம் சபையின் தோற்றம்:**
**தோன்றிய இடம்** :: பிரான்ஸ் (லியோன்ஸ்) - 1650
**தோற்றுவித்தவர்கள்** : அருட்தந்தை ஜான்பீட்டர் மெதாய் சே.ச மற்றும் அன்னை ஜான்போண்ட் போன்

**இந்தியாவில் தோற்றம்** : மதுரை -1906
**இலங்கையில் தோற்றம்** : மன்னார் (நொச்சிக்குளம்) -2012
**எம் சபையின் பணிகள்** : கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூகப்பணி, சிறார் நல்வாழ்வுப் பணி, முதியோரை கண்காணித்தல், பார்வையற்றோரை வாழ்வில் ஊக்குவிக்கும் பணி, அயல்நாடுகளில் எம் அன்புப் பணி...
**எம் சபை வேரோடிய இடங்கள்**: பிரான்ஸ் , அமெரிக்கா , மெக்சிகோ , எகிப்து , ஆபிரிக்கா , ஐவரிகோஸ்ட் , புர்கினோ பாஸோ , இங்கிலாந்து , இந்தியா , இலங்கை, அயர்லாந்து, லெபனன் கிரீஸ் , சுவிட்சர்லாந்து , பெல்ஜியம்...
**இந்தியாவில்** : தமிழ்நாடு , கேரளா , கர்னாடகா , மத்தியபிரதேசம் , ஓரிசா , ஆந்திரபிரதேசம்
**தகுதி** : இறைபணியில் ஆர்வம் , நல்ல உடல்நலம் , A/L, மற்றும் அதற்கு மேல் படிப்பு
**தொடர்பு கொள்க:**
Vocation Promoter
Sisters of St. Joseph of Lyon , Nochikulam, Uyilankulam,
Mannar Main Road, Srilanka.
Mobile: 0773727865 CDMA: 0233238807.


## பத்தாண்டு நிறைவு விழா காணும்
# பள்ளக்கமம் பெண்கள் பணிக்குழு



கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவினரால் ஒவ்வொரு மாதமும் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில் ஏற்கனவே பல பங்குகள் தரிசிக்கப்பட்டு ஒன்றுகூடல் நிகழ்வுகளும் நடைபெற்றன. கடந்த 30.07.2014 அன்று முருங்கன், பள்ளக்கமம் கத்தோலிக்க பெண்கள் பணிக்குழுவின் பத்தாண்டு நிறைவுவிழாவினைச் சிறப்பிக்கும் முகமாக ஒன்றுகூடல் நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வானது திருப்பலியுடன் ஆரம்பமாகி மதிய உணவுடன் நிறைவடைந்தது. இந்நிகழ்வில் பங்குத்தந்தை பீற்றர் மனோகர் அடிகளார் மிகுந்த ஆர்வத்துடன் முழுமையாக எம்முடன்கூட இருந்தார். இந்நிகழ்விற்கு ஏனைய பெண்கள் பணிக்குழுக்களிலிருந்தும் 45பேர் வருகைதந்து மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள். விசேடமாக தூர இடங்களிலிருந்தும் பெண்கள் (தேவன்பிட்டி, அந்தோனியார்புரம்) வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் சிறப்பம்சமாக வளவாளர் வைத்தியர் பிரசன்னா அவர்களினால் பெண்களுக்கு ஏற்படுகின்ற நோய்களான கருப்பைக்கட்டி, மார்புக்கட்டி, வயிற்றுப்புண், தொண்டைக்கழலை என்பவைபற்றி விரிவாக எடுத்துக்கூறினார். பெண்களும் பல கேள்விகள் கேட்டு தெரியாத பல விடயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள்.


அடுத்து சிறப்பம்சமாகப் பெண்கள் பணிக்குழுத்தலைவர் அருட்சகோதரி ஜோசப்பின் அவர்கள் பெண்களின் உரிமை, கட்டுப்பாடு, மூடநம்பிக்கை, ஆடம்பரச்செலவு போன்றனபற்றி எடுத்துக் கூறினார். அடுத்து இயக்குனர் எஸ். கே. தேவராஜா அடிகளார் அனைவருக்கும் நன்றிகூறி பெண்கள் இவ்வாறு ஒன்றுகூடி வரும்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டு, விழிப்புணர்வு ஏற்பட்டு பெண்களுக்கான ஆர்வம் தூண்டி எழுப்பப்படும் எனவும், தொடர்ந்தும் பெண்களின் சுகாதாரம், கருக்கலைப்பு போன்ற விழிப்புணர்வுக் கருத்தமர்வுகள் இடம்பெறும் எனவும் கூறினார். **- கத்தோலிக்க பெண்கள் பணிக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# ஊடக சுதந்திரம் இலங்கையில் இல்லை

### மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கவலை



எமது நாட்டில் தற்போது ஊடக சுதந்திரம் இல்லை. ஊடக சுதந்திரம் முக்கியமானதாகும். அனைவருக்கும் கருத்துக்கூறுகின்ற சுதந்திரம் உண்டு. ஆனால் இங்கு ஊடவியலாளர்களுக்கோ, ஊடகங்களுக்கோ சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் கடந்த 09.08.2014 அன்று நடைபெற்ற உலக தொடர்புதின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "எமது நாட்டில் தற்போது ஊடக சுதந்திரம் இல்லை. ஊடக சுதந்திரம் முக்கியமானதாகும். அனைவருக்கும் கருத்துக்கூறுகின்ற சுதந்திரம் உண்டு. ஆனால் இங்கு ஊடகவியலாளர்களுக்கோ, ஊடகங்களுக்கோ சுதந்திரமாகச் செயற்பட முடியாதுள்ளது.

தற்போது தகவல் தொடர்புச் சாதனங்கள் உலகை ஆக்கிரமித்துள்ளன. இணையத்தளங்கள் மற்றும் கைபேசிகள், தொலைக்காட்சிகள் உள்ளிட்டவைகள் தற்போது செல்வாக்குச் செலுத்துகின்றன. ஊடகங்களால் நன்மை உள்ளது. அதேபோன்று தீமையும் ஏற்படுகின்றது. உலகில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளை அதே நிமிடத்தில் நாங்கள் அறிந்துகொள்கின்றோம்.

உக்ரைன் நாட்டில் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்ட தகவலை ஐந்து நிமிடங்களில் அறிந்துகொள்ள முடிகின்றது. இதேபோன்று அவ்விடத்தில் நடக்கும் முக்கிய நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்துகொள்கின்றோம்.

இன்று தொலைக்காட்சி நாடகங்களால் பல குடும்பங்கள் சீரழிந்து போகின்றன. பலரின் திருமண வாழ்க்கை சீர்குலைவதற்கு இந்தத் தொலைக்காட்சி நாடகங்கள் காரணமாக உள்ளன. அத்தோடு பாடசாலை மாணவர்கள் கைபேசிகள் பயன்படுத்துவதால் மாணவர்களும் இதன் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

கருத்துச் சுதந்திரமும் ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## துறவறவாழ்வில் வெள்ளி விழாக்காணும்
## அருள்நிறை கன்னியர் சபையின்
## ஏழு அருட்சகோதரிகள்

CELEBRATING 25 Years



அருட்சகோதரி.
மாறி
(வட்டயப்பொல)



அருட்சகோதரி.
அருள் மேரி
(அவிசாவல)



அருட்சகோதரி.
லூர்ட்ஸ் மேரி
(அவிசாவல)



அருட்சகோதரி.
சகாய மேரி
(அவிசாவல)



அருட்சகோதரி.
திரேசா
(மன்னார்)



அருட்சகோதரி.
மாக்கிறட்
(நாவலப்பிட்டி)



அருட்சகோதரி.
புஷ்பா திசேரா
(நீர்கொழும்பு)

இவ்வாண்டு புரட்டாதி மாதம் 08ம் நாள் தமது துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் அருட்சகோதரிகளுடன் இணைந்து நாமும் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு இவர்களின் பணிவாழ்வு சிறந்திட மனமகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

***அருட்சகோதரிகள்,***
***அருள்நிறை கன்னியர் சபை, காத்தான்குளம்.***

## திருவுளச்சபையின் மாகாண பொது அமர்வு 2014

திருவுளச்சபையின் மாகாணப் பொது அமர்வு "சமாதானத்தாலும் சகோதரத்துவத்தாலும் இறையாட்சியை நான் வாழும் சூழலில் கட்டியெழுப்ப அழைப்பு பெற்றுள்ளேன்" என்னும் மையப்பொருளில் கடந்த யூலை 14ஆம் நாள் தொடக்கம் 17ம் நாள் வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது.

திருவுளச்சபை இலங்கையில் உருவாக்கல் மாகாணமாக தரம் உயர்த்தப்பட்டபின் இரண்டாவது தடவையாக இவ்வமர்வு நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் திருவுளச்சபை உறுப்பினர்களின் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பதினெட்டு உறுப்பினர்கள் இவ்வமர்வில் பங்குபற்றினார்கள். இதில் ஒன்பது குருக்களும் மூன்று மணத்துறவு ஆண்களும், ஆறு திருமணத் தம்பதிகளும் அடங்குவர்.

முதல்நாள் நிகழ்வாக ஆண்டவரோடு ஒரு மணி நேரம் உரையாடியபின் குத்துவிளக்கேற்றி சபையின் கீதம் இசைக்கப்பட்டது. அவையின் தலைவராக அருட்பணி. பிலிப் (I.V.D) அடிகளார் தெரிவுசெய்யப்பட்டார். சகோதரன் கமிலஸ் செயலாளராக நியமிக்கப்பட்டார். கனடாவில் இருந்து வருகை தந்த சபையின் முன்னைநாள் முதல்வர் அருட்பணி. பிரான்சுவா கெமல் அவர்களை வரவேற்றும், இவ்வமர்வின் நோக்கம், முக்கியத்துவம், பணிகள் பற்றித் தெளிவுபடுத்தித் தலைவர் தலைமையுரை ஆற்றினார்.

சபையின் தற்போதைய முதல்வர் அருட்பணி. டன்ஸ்ரன் அடிகளார் இந்நிகழ்வுக்கு வருகை தரமுடியவில்லை என்பதைத் தொலைபேசி மூலம் அவையினருக்குத் தெரியப்படுத்தி சிறிய உரையும் நிகழ்த்தினார். மரியாளின் சவால் நிறைந்த வாழ்க்கையை உதாரணமாக ஏற்று எமது வாழ்வை உலகின் மத்தியில் வாழ வேண்டும் என்பதை உதாரணங்களுடன் எடுத்தியம்பி தனது ஆசீரையும் அன்பையும் ஒவ்வொருவருக்கும் அளித்து உரையை நிறைவுசெய்தார்.

நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் அங்கத்தவர்கள் ஒப்புதல் வழங்கினார்கள். அங்கத்தவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டார்கள். "சமாதானத்தால் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதே திருவுளத்தோரின் அழைப்பு" என்னும் விடயம்பற்றி திரு. எட்வேட் பீரீஸ் முதலாவது உரையை நிகழ்த்தினார். அதற்கான குழு ஆய்வும் நிகழ்த்தப்பட்டது. அடுத்து இலங்கை மாகாண அதிபர் அருட்பணி. சகாயநாதன் நிர்வாக அறிக்கையை வாசித்துப் படங்களுடன் சமர்ப்பித்தார்.

"சமாதானத்தால் சகோதர வாழ்வை உண்டாக்கும் திருவுளத்தோரின் அடிப்படை உருவாக்கம்" என்னும் தலைப்பில இரண்டாவது உரை திரு. சௌந்தரம் அவர்களால் வழங்கப்பட்டது. உருவாக்க அறிக்கையை உருவாக்கப் பொறுப்பாளர் அருட்பணி. மரியதாஸ் விளக்கங்களுடன் வாசித்து சமர்ப்பித்தார்.

சமாதானம் செய்வதும் சகோதரத்தை உண்டாக்குவதும் திருவுளத்தோரின் பணி என்னும் விடயம் பற்றி அருட்பணி. இயூஸ்ரஸ் அவர்கள் விபரமாக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து நிதியறிக்கையை நிதிப்பொறுப்பாளர் அருட்பணி. மரியதாஸ் வாசித்தார். ஆய்வும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. அடுத்து இலங்கை உருவாக்கல் மாகாணத்திற்கான ஒழுங்குவிதிகள் ஆய்வுசெய்யப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டது.

இறுதி நிகழ்வாக புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. அருட்பணி. இயூஸ்ரஸ் அடிகளார் இலங்கை மாகாண அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரது ஆலோசகர்களாக அருட்பணி. பிலிப், அருட்பணி. அலன், திரு. மருசலீன், திரு. சௌந்தரம், திருமதி. றோகினி ஆகியோர் தெரிவாகினார்கள். இத்தெரிவுகள் சபை முதல்வர் மற்றும் அவரது ஆலோசகர்களினதும் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அருட்பணி பிரான்சுவா கெமல், அருட்பணி. சகாயநாதன் ஆகியோரின் நன்றியுரையுடன் மாகாணப்பொது அமர்வு நிறைவுபெற்றது.

- ஜொய்ஸ் நவரட்ணம்.

## தனிநாயகம் அடிகளாருக்கு யாழ் மடத்தடியில் சிலை

யாழ் நகரில் உள்ள மடத்தடி (கொண்வென்ற் பாடசாலை அருகில்) பிரதான வீதியில் அரசமரத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் சிலை மற்றும் நினைவுமுற்றம் அடிகளாரின் பிறந்த தினமாகிய ஆகஸ்ட் 2ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும், யாழ் மறைமாவட்டமும் இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், நல்லை திருஞானசம்மந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தார்கள்.

நினைவுதின நிகழ்வுகள் யாழ் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றன. தொடக்க உரையை அருட்பணி. அ. பி. ஜெயசேகரம் அடிகள் நிகழ்த்தினார். தனிநாயகம் அடிகளாரின் கல்வித்துறைசார் பங்களிப்பு என்ற பொருளில் நினைவுப் பேருரையை பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் நிகழ்த்தினார். திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கிய "தமிழ்த்தாயின் புகழானாய்" என்ற நாட்டிய நிகழ்வும் இடம்பெற்றது.


## இன்றே செல்லுங்கள் – சஹன மதுர
## அமைதியின் தோட்டம்

மக்களைக் குணப்படுத்துவதிலும் அவர்களுக்கு தொழிலைப் பெற்றுக்கொடுப்பதிலும் 20 வருட அனுபவம்



### புனர்வாழ்வு நிலையம்

- ஜாஎலையில் அமைந்துள்ளது.
- 40 வதிவிட வாடிக்கையாளர்களுக்கு உளவியல் ரீதியான சிகிச்சை வழங்கப்படுகின்றது.
- உளவியல் சிகிச்சையானது தகுதிவாய்ந்த நிபுணர்களால் இயக்குனர் அருட்திரு. கலாநிதி பிராக்சிட் அந்தனி (அமதி) அவர்களின் வழிகாட்டலில் வழங்கப்படுகிறது.
- இயக்குனரையும் உளவள நிபுணர்களையும் சந்திக்கவும்.
- இயக்குனர் அவர்கள் அமெரிக்கவின் நியூயோர்க்கில் உள்ள கலிவான் நிலையத்தில் 4 வருடங்கள் உளவள நிபுணராகப் பணியாற்றிய அனுபவம் உடையவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர். தற்போது கொழும்பு அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தில் உளவியல்பீடத் தலைவராகக் கடமையாற்றுகிறார்.
- தொழில் ரீதியான உளவளத் துணையாளராக விளங்குகிறார்.
- இப்பயிற்சி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 20 வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது.
- பல உளவளத் துணையாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.
- ஜாஎல, கண்டி, குருநாகலையில் 270 மணித்தியாலயங்கள் பயிற்சி வழங்கப்படுகிறது.

**புனர்வாழ்வுக்கு விண்ணப்பிக்கவும் :**
011-2235359, 077-6696194, 076-7696194 (ஜாஎல)
**உளவியல் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கவும் :**
0812201586 (கண்டி)
0372237147(குருநாகலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழப்படாத மன்னார் மறைசாட்சிகளின் சுருக்க வரலாறு

ஆய்வாளர் – திரு. S.அந்தோனிப்பிச்சை (M.A., M.Phil.)





கி.பி. 1544ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் மன்னார் தீவில் கமண்டலர் (Kadayar Pattankatty) இன மக்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தமிழ் நாட்டில் ஓரியூர் அருகிலுள்ள காரங்காடு பகுதியிலிருந்து நீண்ட காலங்களுக்கு முன்பு மன்னார் தீவில் குடியேறியவர்கள். இவர்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள். மாரியம்மன் என்ற இந்துத் தெய்வத்தை குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் முத்து, சங்கு குளித்தல், மீன்பிடித் தொழில் செய்தல், சுண்ணாம்பு சுடுதல், தனுஸ்கோடி முதல் தலைமன்னார் வரையுள்ள இராமர் பாலத்தைப் பாராமரிப்பு செய்தல் போன்ற வேலைகளைச் செய்துவந்தனர். மற்றப் பகுதியினர் சாயவேர் சேகரித்தல் தொழிலை செய்துவந்தனர்.

### புனித சவேரியார் வருகைக்குமுன் முத்துக் கடற்கரை

தென் இந்தியாவின் கன்னியாகுமரி முதல் இராமேஸ்வரம் ஊடாக இலங்கையின் மன்னார் – முத்தரிப்பு வரையுள்ள கடற்கரைப் பகுதி போர்த்துக்கேயரால் முத்துக் கடற்கரையென அழைக்கப்பட்டது. இக்கடற்கரையில் முத்து, சங்கு குளித்தல் போன்ற தொழில்கள் நடைபெற்றதால் இப்பெயரில் அழைக்கப்பட்டது. இக்கடற்கரையில் கன்னியாகுமரியிலிருந்து வேம்பார் வரையுள்ள பகுதியில் பரதவகுல மக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். அதேசமயம் இஸ்லாமியர் இப்பகுதியில் வணிகர்களாகவும், மீனவர்களாகவும் வாழ்ந்துவந்தனர். பெரிய பட்டணம் முதல் இராமேஸ்வரம் மன்னார் வரையுள்ள பகுதியில் கமண்டலர் (Kadayar Pattankatty) குலமக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். போர்த்துக்கேயர் இந்தியாவைப் பிடித்ததும் அவர்களது முயற்சியால் புன்னக்காயல் பகுதியை மையமாகக்கொண்டு இருபதாயிரம் பரதவர்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவினார்கள்.

### புனித சவேரியார் வருகையும் கமண்டலர் திருமுழுக்கு

பரதவக் கிறிஸ்தவர்களை வழிநடத்த குருக்கள் தேவைப்பட்டதால் இயேசுசபை சார்பாகப் புனித சவேரியார் உரோமையிலிருந்து புன்னக்காயலுக்கு போர்த்துக்கேயரால் அழைத்துவரப்பட்டார். மத்தேயு 20:19 இன்படி "நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள்" என்பதற்கிணங்க புனித சவேரியார் வேதபோதகம் செய்தவேளையில் புன்னக்காயலுக்கு அருகிலுள்ள கொம்புத்துறை கிராமத்திற்கு சென்று திருமறையை அறிவித்தார். அந்தவேளையில் நிறைமாதக் கர்ப்பிணிப்பெண் ஒருத்தி கர்ப்பவேதனையில் துடித்துக்கொண்டிருந்தாள். அவ்வூரைச் சேர்ந்த பூசாரிகள், மந்திரம் மூலம் சுகப்பிரசவம் அடைய முயற்சிசெய்தார்கள். ஆனால் எவ்வளவு முயன்றும் தோல்வியைச் சந்தித்தனர். அதன்பின் புனித சவேரியாரிடம் செப உதவி வேண்டினர். அவரால் அற்புத சுகம் கிடைக்குமென நம்பினர். புனிதர் செபிக்க ஆரம்பித்தார். சுகப்பிரசவம் நடந்தது. இதனால் அந்தக் குடும்பமும், அவ்வூர் மக்களும் கிறிஸ்தவத் திருமறையை ஏற்றுக்கொள்ள முன்வந்தனர். கிராமம் முழுவதும் திருமுழுக்கு பெற்றது. அக்காலம் சமுதாய ஒற்றுமையுள்ள காலம். ஆகவே தங்களது உறவினர் கிராமங்களாகிய வேதாளை, இராமேஸ்வரம், மன்னார் போன்ற பகுதிகளுக்கு தூது அனுப்பினர், சேர்ந்து முடிவெடுத்தனர். அதன் அடிப்படையில் மன்னார் தவிர மற்ற எல்லாக் கிராம மக்களும் திருமுழுக்குப் பெற்றனர். இதை திருச்சபை, 'சமுதாயத் திருமுழுக்கு' எனக் கூறுகின்றது. இவர்கள் திருமுழுக்கு எடுத்த காலங்களில் தமிழ்நாட்டில் விஜயநகரப் பேரரசு ஆட்சி செய்தது.

### மாபெரும் தியாகம் (Mass Martyrdom)

மன்னார்ப் பகுதியை யாழ்ப்பாண மன்னன் செகராஜாசேகரன் என்ற சங்கிலி ஆண்டு வந்தான். அவன் சைவ மதத்தில் மிகுந்த பற்றுள்ளவன். ஆகவே மன்னார்ப் பகுதி மக்கள் கிறிஸ்தவராவதை அவன் முற்றிலும் விரும்பவில்லை. இந்நிலையில் மன்னார் மக்கள் புனித சவேரியாருக்குத் தூது அனுப்பி தங்கள் பகுதிக்கு வந்து திருமுழுக்கு வழங்க வேண்டிக்கொண்டனர். அந்தவேளையில் புனித சவேரியாருக்கு இங்கு வரமுடியாத சூழல் இருந்ததால் தன் பெயர்கொண்ட இந்தியக்குரு பிரான்சிஸ் கொயில்கோ (Francis Coelho) என்பவரை மன்னாருக்கு அனுப்பிவைத்தார். அவர் மன்னார் தோட்டவெளி பட்டித்தோட்டம் பகுதியில் வாழ்ந்த இவ்வின மக்களைச் சந்தித்து முதல் பகுதியாக 1000 பேருக்குத் திருமுழுக்கு வழங்கினார். இந்தத் திருமுழுக்கு 1544ம் ஆண்டு ஆவணி மாதத்தில் நடந்தது. திருமுழுக்கு வழங்கிய குரு இவர்களுடன் தங்கியிருந்து திருமறையைக் கற்பித்துவந்தார். சங்கிலியின் மகன் இளஞ்சிங்கனும் இப்போதனையினால் ஈர்க்கப்பட்டு கிறிஸ்தவ மதம் செல்லத் தயாரானார். இதையறிந்த சைவக் குருக்கள் யாழ் மன்னன் சங்கிலியிடம் முறையிட்டனர். இளஞ்சிங்கன் மதமாற்றமடைய வாய்ப்பிருந்ததை அறிந்த சங்கிலி மன்னன் மிகுந்த கோபமடைந்து 5000 தஞ்சாவூர் நாயக்கர் படையை மன்னார் தோட்டவெளிப் பகுதிக்கு அனுப்பி குருவையும், மக்களையும் கொல்ல ஆணை பிறப்பித்தான். படைகள் எருக்கலம்பிட்டி ஆமைப்படுக்கை வழியாக நுழைந்து, தோட்டவெளிப் பகுதியிலிருந்த மக்களையும், குருவையும் கொல்ல முயன்றபோது மக்கள் குருவைக் காப்பாற்ற அதிகம் போராடினார்கள். இறுதியில் பெரியவர், சிறியவர் குழந்தைகளென 600க்கும் மேற்பட்டோர் வாளுக்கு இரையாகினர். இதை மாபெரும் தியாகம் (Mass Martyrdom) என வரலாறு கூறுகின்றது. அதேவேளை தன் சொந்த மகனையும் சங்கிலி கொன்றான் என புனித சவேரியார் தன் கடிதத்தில் குறிப்பிடுகின்றார். இச்சம்பவத்தை இலங்கைத் தமிழரின் வரலாற்று நூலாகிய யாழ்ப்பாண வைபவ மாலையும் எடுத்துரைக்கின்றது.

திருத்தூதர் பணி நூல் 7:60ன் படி (புனித முடியப்பரைப்போல்) கிறிஸ்துவின் சாயலைத் தாங்கி, தம்மைக் கொல்பவர்களையும் மன்னித்து, கிறிஸ்துவின் சாட்சியானார்கள் இந்த புகழப்படாத மன்னார் மறைசாட்சிகள்.

யோவான் 15:13ன்படி யாரொருவன் தனது உயிரைக் கிறிஸ்துவுக்காகவும், தனது சகோதரனுக்காகவும் தாரை வார்க்கின்றானோ அதைவிட மேன்மையான அன்பு வேறொன்றுமில்லை என்பதை தங்கள் விசுவாசமாகக் கொண்டு தங்கள் உயிர்களைக் கையளித்தார்கள். இந்தப் படுகொலையில் சிலர் தப்பி தென்னிந்தியா காரங்காடு கிராமத்திலும், மன்னார் மாதோட்டத்திலும் வாழ்ந்து வந்தனர். இயேசு சபை கி.பி. 1560ல் இறைபணியை மன்னாரில் ஆரம்பித்தவுடன் மாதோட்டப் பகுதிக்கு தப்பிச்சென்ற மக்கள் தோட்டவெளிக்குத் திரும்பினர்.

இந்தத் தியாகத்தை உலகத் திருச்சபை ஏற்றுக்கொண்டு மன்னார்த்தீவை "மறைசாட்சிகளின் தீவு" என அழைத்தது. இந்தத் தியாகத்தை மையமாகக்கொண்டு இச்சமூகத்திற்கு "பரிசுத்த ஆவி விழா" திருச்சபையால் வழங்கப்பட்டது.

இப்படுகொலைக்குப்பின் புனித சவேரியார் தோட்டவெளிப் பகுதிக்கு வருகைதந்து படுகொலை நடந்த இடத்தைப் பார்வையிட்டு, இந்த மண்ணை முத்தமிட்டார் எனவும் அதன் பிறகு யாழ்ப்பாணம் சென்று இந்தியாவிற்கு கப்பலில் சென்றார் எனவும் நம்பப்படுகின்றது.

## மடுத்தேவாலய வைத்தியசாலை ஜயலத் நினைவாகப் புனரமைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜயலத் ஜயவர்த்தனவின் 61ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மடுதேவாலய வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்பட்டு கடந்த 16.08.2014 அன்று திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா யோசேப்பு ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற விசேட திருப்பலியைத் தொடர்ந்து இந்த வைத்தியசாலை திறந்துவைக்கப்பட்டது.

இதில் மேல் மாகாண சபை உறுப்பினரும் அமரர் ஜயலத் ஜயவர்த்தனவின் மகனுமான மருத்துவர் கவிந்த ஜயவர்த்தன மற்றும் குடும்பத்தினர் கலந்துகொண்டனர். இந்தத் திறப்பு விழா நிகழ்வில் மடுச்சந்தி விகாரையின் விகாராதிபதி, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மருத்துவ கலாநிதி அரவிந்தன் உட்பட பலர் பங்கேற்றனர்.



இதேவேளை மருத்துவர் ஜயலத் ஜயவர்த்தன நிதியம் மற்றும் மருதமடு வைத்தியசாலை அபிவிருத்திக் குழு என்பவற்றின் ஊடாக மடுதேவாலய வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மன்னார் மனித புதைகுழி விவகாரம்: மூடப்பட்ட கிணறு குறித்து விசாரணை

### உத்தரவிட்டது மன்னார் நீதிமன்று

மன்னார் புதைகுழியை மேலும் தோண்டவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், அங்கு அக்காலப்பகுதியில் இருந்து பின்னர் மூடப்பட்ட கிணறு ஒன்றையும் கண்டுபிடித்து தோண்ட வேண்டுமென்றும் நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மன்னார் திருக்கேதீச்சர மனிதப் புதைகுழி வழக்கு மன்னார் நீதிவான் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே காணாமல்போனோரையும் மன்னார் பிரஜைகள் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

வழக்கு விசாணைகளின்போது கொழும்பில் இருந்து வந்திருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்னார் பேசாலைப் பிரதேசசபைத் தலைவரை அவரால் நீதிமன்றிற்கு வழங்கப்பட்ட கடிதம் தொடர்பில் வாக்குமூலம் எடுக்க 4ஆம் மாடிக்கு அழைத்திருந்ததாகவும் அவர் வரவில்லை எனவும் தெரிவித்தனர்.

அதன்போது காணாமல்போனோரையும் மன்னார் பிரஜைகள் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள் அவரின் வாக்குமூலத்தை மன்னாரில் வைத்தே பதிவுசெய்ய வேண்டுமென்று தெரிவித்தனர். அதையடுத்து நீதவானும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வாக்குமூலத்தை மன்னாரில் வைத்தே பதிவுசெய்யுமாறு பணித்தார்.

காணாமல்போனோரையும் மன்னார் பிரஜைகள் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள், அந்தப் புதைகுழியை மேலும் தோண்டவேண்டுமென்றும் அது தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அங்கு அக்காலப்பகுதியில் இருந்து பின்னர் மூடப்பட்ட கிணறு ஒன்றையும் கண்டுபிடித்து தோண்ட வேண்டுமென்றும் சென்ற தவணை கோரப்பட்ட அறிக்கைகள் சம்பந்தப்பட்ட - வர்களிடமிருந்து கிடைக்கவில்லை என்பதையும் மன்றிற்கு சுட்டிக்காட்டினர்.

அத்துடன் அவ்விடத்தில் மயானம் இருந்திருக்கலாம் என தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தால் வழங்கப்பட்ட அறிக்கை மன்றினால் கோரப்படாதது என்பதையும் அவர்களின் அறிக்கை 1951ஆம் ஆண்டுகளில் திருக்கேதீச்சரம் பகுதியில் ஓர் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது என்பதையும் அது எவ்விடம் என்பது தெரியாது என்பதையும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன் மன்னார் ஆயர் உட்பட மூவரின் கடிதங்களையும் சட்டத்தரணிகள் சமர்ப்பித்தனர்.

புதைகுழியை மேலும் தோண்டுவது தொடர்பில் உள்ள ஆளணி, பணக்கொடுப்பனவு போன்ற நடைமுறைச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டிய நீதிமன்று, அங்கு இருந்த கிணறு பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், சென்ற தடவை கோரப்பட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறும் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கட்டளை இட்டது.

மேற்படி அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்காகவும் மேலதிக நடவடிக்கைகளுக்காகவும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. காணாமல்போனோரையும் மன்னார் பிரஜைகள் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டத்தரணிகள் இராஜகுலேந்திரா, சாறுடீன், நிரஞ்சன், லோகு, மாகாணசபை உறுப்பினர் சிராய்வா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

## அருட்தந்தைமுன் சரணடைந்த மகன் எங்கே? ஆணைக்குழுவிடம் தாய் கேள்வி



மடுத் தேவாலயத்தில் வைத்து அருட்தந்தை முன்பாக இராணுவத்தினரிடம் சரணடைந்த எனது மகன் எங்கே? அவரைப் பொறுப்பேற்றுக்கொண்டதாக குறித்த இராணுவம் கொண்டுசென்ற எனது மகன் இப்போது எங்கே? இவ்வாறு ஆணைக்குழு முன்பாகக் கேள்வி எழுப்பினார் தாயார் ஒருவர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றது. மடுப்பிரதேச செயலகத்தில் கடந்த 11.08.2014 அன்று இறுதிநாள் அமர்வு இடம்பெற்றது. இதில் பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த தாயார் ஒருவர் சாட்சியமளிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மன்னார் காட்டுப்பகுதிக்குள் தப்பி, வாழ்ந்துகொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தனது மகனை, மடுத்தேவாலயத்துக்கு அழைத்துவந்த ஒருவர் தேவாலயத்தின் அருட்தந்தை டெஸ்மன் குலாஸிடம் ஒப்படைத்திருந்தார். அவர் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த இராணுவப் பொறுப்பதிகாரியிடம் தேவாலயத்தில் வைத்து சரணடையச் செய்திருந்தார்.

அதன் பின்னர் தேவாலயத்துக்கு குறித்த இராணுவ அதிகாரி வந்தபோது அருட்தந்தை அவரிடம் சரணடைந்தவர் தொடர்பில் கேட்டுள்ளார். இதன்போது அவரை உரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்குச் சாட்சியாக அருட்தந்தையால் குறித்த இராணுவ அதிகாரியிடம் எழுத்துமூலமான கடிதம் பெறப்பட்டது. அது இப்போது என்னிடம் உள்ளது என்று குறித்த தாயார் தெரிவித்தார். அதையடுத்து ஆணைக்குழுவினர் குறித்த இராணுவ அதிகாரி எங்குள்ளார் என்பதை அறிந்து விசாரணை மேற்கொள்வதாகத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு இடையிலான உண்மையான சகோதரத்துவத்தை நோக்கி....


**ரம்சான் திருவிழாவை முன்னிட்டு சமயங்களுக்கிடையிலான உரையாடலுக்கான திருப்பீட அமைப்பு வழங்கியுள்ள செய்தியின் சாரம்**

**அன்புக்குரிய முஸ்லிம் சகோதர சகோதரிகளே,**

ஒறுத்தல், செபம் மற்றும் ஏழைகளுக்கு உதவுதல் போன்ற நற்செயல்களுக்கு என்ற ரம்சான் நோன்பை முடித்துக்கொண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஒரே கடவுள் படைத்த மனிதக் குடும்பத்தில் கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் சகோதர சகோதரிகளே என்பதில் ஐயமில்லை. இதையே எமது கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றனர்.

எம்முடைய ஒற்றுமையை முன்னிட்டு நன்றிகூறும் அதேவேளை எமது வேற்றுமைகளையும் நாம் நன்கு அறிவோம். ஆகவேதான் உண்மையான பலனுள்ள உரையாடலை நட்புறவுடனும், மரியாதையுடனும் நடாத்துவது காலத்தின் கட்டாயம் என்பதை நாம் உணர்கிறோம். எமது ஒற்றுமையின் நிமித்தம் நாம் நீதி, நியாயம், அமைதி மற்றும் தனிமனித உரிமைகளுக்காகச் சேர்ந்து உழைப்பது தேவையாகும்.

மேலும் தேவைகளில் இருக்கும். ஏழைகள், நோயாளிகள், பலவாறு அடிமைகளாயுள்ளோருக்கு உதவுவது எமது கடமை என்பதை உணர்ந்து நிற்கின்றோம். இன்றைய உலகில் காணப்படும் பலதரப்பட்ட பிரச்சினைகளின்முன் நல்லுள்ளம் படைத்தவர்களின் ஒற்றுமை தேவைப்படுகிறது. உதாரணமாக சூழலில் ஏற்படும் மாசுக்கள், உலக பொருளாதார சீர்குலைவு, வேலையின்மை, பிளவுபட்டிருக்கும் குடும்பங்கள், அல்லலுறும் குழந்தைகள் என இவை அனைத்துமே எம்மை ஒன்றுபட்டு உழைக்க அழைத்துநிற்கின்றன. அதேபோல, முஸ்லீம்களும்,




கிறிஸ்தவர்களும் போரின் நிமித்தம் அல்லலுறும் பிரதேசங்களில் அமைதியையும், ஒப்புரவையும் ஏற்படுத்தும் பாலங்களாக நாம் மாற உழைப்பதும் அவசியமாகும்.

எமது நட்பு இவ்வாறாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொறுமையுடனும் மனத்தெளிவுடனும் செயற்பட எம்மைத் தூண்டுவதாக. மேலும் பிளவுகளைக் களைந்து பொதுநலத்தில் நாம் முன்னேற உதவுவதாக. சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்படுத்த சமயங்களின் பங்களிப்பையும் நாம் அறிந்து செயற்படுவோம். முழு மனித குடும்பத்தில் ஒப்புரவும், நியாயமும், அமைதியும் அபிவிருத்தியும் தழைக்கச் செய்வதே எமது பிரதானமான நோக்கமாகட்டும். பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களோடு சேர்ந்து, எமது மகிழ்ச்சிநிறை வாழ்த்துக்களை இப்பெருவிழாக் காலத்தில் உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அமைதியும், சுபீட்சமும் நிறைந்த வாழ்வு உங்களுக்கு உரித்தாகட்டும்.

# மரணதண்டனை விதிக்கப்பட்ட சூடானிய பெண் பாப்பரசருடன் சந்திப்பு





மதம் மாறியமைக்காக மரணதண்டனை விதிப்புக்குள்ளாகி பின்னர் விடுதலையான சூடானிய பெண்ணான மரியம் யஹியா இப்ராஹிம் இஷாக் பாப்பரசர் பிரான்சிஸை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுள்ளார்.

சூடானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஒரு மாத காலமாக தஞ்சமடைந்திருந்த மரியம், தனது கணவருடனும் இருபிள்ளைகளுடனும் இத்தாலிய உரோம் நகரை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரியத்தின் தந்தை முஸ்லிம் என்பதால் இஸ்லாமியச் சட்டத்தின் பிரகாரம் மரியமும் முஸ்லிம் எனவும் அவர் மதம் மாற முடியாது எனவும் தெரிவித்து அந்நாட்டு நீதிமன்றமொன்று அவருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பானது உலகளாவிய ரீதியில் கடும் கண்டனத்தைச் தோற்றுவித்திருந்தது. இந்நிலையில் கிறிஸ்தவத் தாயாரால் வளர்க்கப்பட்ட தான் ஒருபோதும், இஸ்லாமிய மதத்தை பின்பற்றவில்லை என மரியம் வாதிட்டார். தென் சூடானைச் சேர்ந்த கிறிஸ்தவரான மரியத்தின் கணவர் இப்ராஹிம் ஒரு அமெரிக்கப் பிரஜையாவார். சர்வதேச அழுத்தம் காரணமாக கடந்த ஜூன் மாதம் மரியம் விடுதலை செய்யப்பட்டபோதும், அமெரிக்கா செல்ல முயன்றவேளை போலியான பயண ஆவணங்களை வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விமான நிலையத்தில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறமுடியாத நிலையில் அவர் சூடானிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் தஞ்சமடைந்தார்.

இந்நிலையில் மரியத்தின் தந்தையின் குடும்பத்தினர், முஸ்லிம் பெண்ணொருவர் முஸ்லிமற்றவரை திருமணம் செய்ய முடியாது என்ற வகையில் அவரது திருமணத்தை இரத்து செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அதேசமயம் சூடானிலுள்ள ஹம்ஸா என்ற போராளிக்குழு மரியத்தையும் அவருக்கு உதவுபவர்கள் அனைவரையும் கொல்லப்போவதாக இரு நாட்களுக்குமுன் எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனையடுத்து சூடானில் தொடர்ந்திருப்பதன் அபாயத்தை கருத்திற்கொண்டு அவருக்கு நாட்டைவிட்டு வெளியேற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மரியத்துடனான அரை மணிநேர சந்திப்பின்போது பாப்பரசர் அவர் விசுவாசத்துக்கு சாட்சியாக உள்ளமை தொடர்பில் அவருக்கு நன்றிதெரிவித்ததாக வத்திக்கான் பேச்சாளர் அருட்தந்தை பெடேறிகோ லொம்பார்டி தெரிவித்தார்.

# 31வது உலக கத்தோலிக்க இளையோர் தினம் – 2016

31வது உலக கத்தோலிக்க இளையோர் தினம் 2016ஆம் ஆண்டு போலந்தின் கிராக்கோல் நகரில் நடைபெறவுள்ளது. இந்த நாளுக்கான அதிகாரப்பூர்வமான இலச்சினை மற்றும் செபம் என்பவற்றை போலந்து கர்தினால் ஸ்ரனிஸ்சோ ட்சிவைஸ் (Stanisaw Dziwisz) வெளியிட்டுள்ளார்.

இந்த இலச்சினை மூன்று சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. உலக இளையோர் தினம் நடக்கும் இடம், அதன் தலைப்பு, அதன் முக்கிய நபர்கள் என சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. அத்தோடு இந்த இலச்சினை, "இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" என்ற உலக இளையோர் தினத்தின் தலைப்பையும், போலந்தின் வரைபடத்தையும் கொண்டுள்ளது. அதில் உள்ள மஞ்சள் நிற சிலுவை இந்த உலக இளையோர் தினத்தின் இதயமாக விளங்கும் இயேசுக்கிறிஸ்துவைக் குறிக்கின்றது என்றும் கர்தினால் கூறினார்.

### திருத்தந்தை மன்னிப்பு வேண்டியதைத் தொடர்ந்து எவஞ்சலிக்கல் தலைமைச் செயலர்

# மன்னிப்பு வேண்டல்

எவஞ்சலிக்கல் சபையைச் சார்ந்தவர்களை, கத்தோலிக்கர் சரிவரப்புரிந்துகொள்ளாமல் நடந்துகொண்டதற்காக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அச்சபையைச் சார்ந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டதை எவஞ்சலிக்கல் உலக ஒன்றியத்தின் தலைமைச் செயலர் மதிப்புக்குரிய முனைவர் ஜெயோப் ரியூனிலிப் அவர்கள் மனமுவந்து பாராட்டினார்.

முனைவர் ரியூனிலிப் அவர்கள் வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மன்னிப்புக் கோரியது விவிலிய அடிப்படையிலும் கிறிஸ்துவின் நற்செய்தி அடிப்படையிலும் அமைந்திருந்தது என்று கூறினார்.

மேலும் எவஞ்சலிக்கல் சபையைச் சேர்ந்தவர்களும் கத்தோலிக்கர்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் நடந்ததற்காக, முனைவர் ரியூனிலிப் அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

நானும், ஏனைய கிறிஸ்தவ சபைகளின் தலைவர்களும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, கடந்த யூன் மாதம் வத்திக்கானில் சந்தித்ததை நினைவுகூர்ந்த எவஞ்சலிக்கல் சபையின் தலைமைச் செயலர் ரியூனிலிப் அவர்கள் கத்தோலிக்கத் திரு அவையுடன் எவஞ்சலிக்கல் சபையின் உறவு ஆழப்பட வேண்டும் என்ற ஆவலை வெளியிட்டார்.

# குழந்தைகளின் நம்பிக்கையைப் பறிக்காதீர்!

மத்தியகிழக்குப் பகுதி, ஈராக் மற்றும் உக்ரைனில் இடம்பெறும் மோதல்களும் உயிரிழப்புக்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். போரில் அனைத்தும் இழக்கப்படுகின்றன. ஆனால் அமைதியிலோ இழக்கப்படுவது ஒன்றுமில்லை என்றார். போர் என்பது எப்போதுமே வேண்டாம் என்று கூறிய திருத்தந்தை, குழந்தைகளை நோக்கி என் எண்ணங்கள் செல்கின்றன. நேர்த்தியான வாழ்வுக்கான அவர்களின் நம்பிக்கைகளை இந்தப்போர்கள் மூலம் நாம் பறித்துக்கொள்கின்றோம் என்றார்.

போர்களால் இறக்கும், காயமுறும், ஊனமாகும், அநாதைகளாகும், புன்னகையை மறந்துவாழும் குழந்தைகள் குறித்து எண்ணிப்பார்ப்போம் என்று அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

முதலாம் உலகப்போர் துவங்கி 100 ஆண்டுகள் நிறைவுறுவதை நினைவூட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், போர் நடைபெறும் இடங்களில் எடுக்கப்படும் முடிவுகள் பொது நலனையும் தனிமனிதனுக்குரிய மதிப்பையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித ஜான் கிறிசோஸ்தம்

(ஆயர், மறைவல்லுநர் - கி.பி. 349 - 407)




**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

கிறிசோஸ்தம் என்ற சொல்லுக்குப் "பொன்வாய்" என்பது பொருள். இவர் அந்தியோக்கியா நகரில் பிறந்தவர். தம் கல்வியை முடித்தபின் கடுமையான தவவாழ்க்கையை மேற்கொண்டார். குருப்பட்டம் பெற்றபின் கி. பி 367இல் இவரை ஆயராக்குமாறு திருமறை அதிகாரிகள் கட்டாயப்படுத்தி அப்பதவியை ஏற்கச் செய்தனர். அரச ஆணவத்தின் நடுவே இப்பதவியை இவர் ஏற்க நேர்ந்தது.

இவர் தவமே உருவெடுத்தவராக வாழ்ந்தவர். உடல் நலம் குன்றியவராகக் காணப்பட்டார். ஆனால் சொல்வன்மையில் வல்லுனராகத் திகழ்ந்தார். இவர் நிகழ்த்திய சில சொற்பொழிவுகளை இரண்டு மணிநேரங்கூடச் சோர்வின்றிக் கேட்டு மக்கள் பயன்பெற்றனர். அரசகுலத்தினரின் தவறுகளையும் கொடுமைகளையும் அம்பலப்படுத்த இவர் தயங்கவில்லை. அதனால் நாடுகடத்தப்பட்டார். இவர் ஆயர்களின் வாழ்விலிருந்த ஊழல்களையும் வெளிக்கொணர்ந்தார். "பகிர்ந்துகொள்ளுதல்" என்ற சொல் இன்று மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. அரச குலத்தினரும், பிரபு குலத்தினரும் தங்களின் சொத்துக்களை ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென இவர் முழக்கமிட்டார். ஒவ்வொருவனுக்கும் தனிச் சொத்து உரிமை வந்ததற்கு காரணம் ஆதாம் அருள் வாழ்விலிருந்து வீழ்ச்சியடைந்ததுதான் என்று இவர் கூறினார். அரசகுலத்தினர் இதைக் கேட்கப் பொறுக்காமல் காதுகளை அடைத்துக்கொண்டனர்.

அலெக்சாண்டிரியா நகரின் ஆயர் தியோபிலசும், அரசியான யூடோக்கியாவும் இவரைப் பழிவாங்கும் நோக்குடன் கதை கட்டினார்கள். அரசி ஆத்திரம் அடைந்தவளாய்ப் புனிதரை ஆர்மினியாவுக்கு நாடுகடத்தினாள். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இவரை அங்கிருந்து கருங்கடலுக்கு அப்பால் கொண்டுபோக ஆணை பிறப்பித்தாள். அங்கு செல்லும் வழியில் கொமேனா என்ற நகரில் தமது 52ஆவது வயதில் தளர்ச்சியின் காரணமாக இவர் இறைவனடி சேர்ந்தார்.

31 ஆண்டுகளுக்குப் பின்னர் யூடோக்சியாவின் பிள்ளைகளான அரசி புனித புல்கேரியாவும் அரசன் 2ஆவது தியேடோசியசும் தம் பெற்றோரின் அடாத செயல்களுக்காக மனம் வருந்தினர், தவம் புரிந்தனர். புனிதரின் தூய உடலைக் கொன்ஸ்டான்டிநோபிளுக்குக் கொண்டுவரச் செய்தனர். பெரிய ஊர்வலத்திலே சவப்பெட்டியை தங்கள் கைகளிலேந்தி வாங்கினர். மீண்டும் நல்லடக்கம் செய்தனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 35.

## தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும்






### நம்பிக்கை வெற்றிகண்டது!

சாமுவேல் ஜான்சனின் நண்பர்கள் வந்து சாமுவேலின் இன்னுமொரு நண்பன் ஒருவனைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். அவனின் குடும்ப வாழ்க்கை வெறும் வேதனை நிறைந்த வாழ்வு என்றே எப்போதும் குறைப்பட்டுக்கொள்பவனின் மனைவி ஒரு மாதத்திற்குமுன் இறந்துவிட்டாள் என்று கூறினார்கள். அதற்கு சாமுவேல் ஜான்சன், "அதற்கு இப்போது என்ன?" எனக் கேட்க, அவர் நண்பர்கள், "அவன் மனைவி இறந்து ஒரு மாதம் ஆவதற்குள் அந்த மனிசன் இன்னுமொரு திருமணம் செய்திற்றான்!" என்றார்கள். சாமுவேல் ஜான்சன், "அனுபவத்தைத் தோற்கடித்து நம்பிக்கை வெற்றிகண்டுவிட்டது" என்றார்.

### நாட்டம்: நாட்டு நடப்புகளிலல்ல, நாள்நட்சத்திரத்தில்!

நவீன தொழில்நுட்பங்களால் அறிவியல் வளர்ச்சி மிக உச்சத்திற்கு வளர்ந்துகொண்டுவரும் இந்நவீன யுகத்தில், ஏதோ தெரியவில்லை, இப்போதெல்லாம் நாள்நட்சத்திரம், சாஸ்திரம், சகுனம், வாரபலன் போன்றவற்றில் மக்கள் அதிகம் நம்பிக்கை வைப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்துவதுபோல பல்கலைக்கழகம் ஒன்றில் ஊடகத்துறையில் கல்விகற்கும் மாணவ மாணவியர்களுக்குக் கல்வி கற்பிக்கின்ற பேராசிரியர் ஒருவர் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் ஆசிரியர் தலையங்கம், பிரதான செய்திகள், ஏனைய முக்கிய கட்டுரைகள் போன்றவற்றை வாசிக்கிறார்களா? என வினவியிருக்கிறார். அம்மாணவர்கள் அவற்றில் அவ்வளவு நாட்டம் கொள்வதாக அவர்கள் காட்டிக்கொள்ளவில்லை என்றும் ஒவ்வொரு நாளும் வெளியாகும் வாரபலன், சோதிடம், சினிமாச் செய்திகள் போன்றவற்றைத் தவறாது வாசிப்பதில் ஆர்வமுள்ளவர்களாகத் தென்பட்டார்கள் எனவும் அண்மையில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின்போது குறிப்பிட்டார்.

இம்மாணவர்கள் படிக்கவேண்டியது – பாண்டித்தியம் பெறவேண்டியது ஊடகத்துறை. ஆனால் தவறாது படிப்பதோ வாரபலன், சோதிடம், சினிமா போன்ற பகுதிகளை! இவையும் ஊடகத்துறையின் ஒரு பகுதிதானே என மனதை நாம் ஆற்றிக்கொள்ளவேண்டியதுதான்! இவர்கள்தான் ஊடகத்துறையில் எதிர்காலத்தில் பணிசெய்யப்போகும் ஊடகத்துறைப் பணியாளர்கள்!

### பூனையை வளர்க்காமல் நரியை வளர்க்கலாமே?

சாஸ்திரம், சகுனம் பார்ப்பவர்கள் பின்வரும் கவிதையை மனதில் கட்டாயமாக பதியவைக்கவேண்டும். 'பூனை' என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு ஒருவன் எழுதியிருந்தான்: "பூனை குறுக்கால் போனால் சகுனம் சரியில்லை என்கிறாய். நரி எதிர்கொண்டு வந்தால், நல்ல சகுனம் என்கிறாய். அப்படியென்றால்; ஏன் வீட்டில் பூனையை வளர்க்கிறாய்? நரியை வளர்க்கலாமே!" என்ற வரிகள் நம் மேலான சிந்தனைக்குரியது. வீட்டுப் பிராணி என நாய், பூனையை வளர்க்க யோசிப்பவர்கள் மேற்குறிப்பிட்ட கருத்துநிலையின் பின்னர் மாற்றுப் பிராணிகளை வளர்க்க உத்தேசிக்கலாம்!

மேற்சொன்ன கருத்தை இன்னொருவன் கூறுகின்றபோது, "புலியின் பல்லை நம்புகிறாய், நரியின் கொம்மை நம்புகிறாய், யோசியரின் சொல்லை நம்புகிறாய், கைரேகையின் கோட்டை நம்புகிறாய், கிளியின் ஏட்டை நம்புகிறாய்; உன்மேல் நம்பிக்கை வையடா, வெற்றி நிச்சயம்" என்கிறான். தங்களின் கடின உழைப்பைத்தவிர மற்றெல்லாவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றவர்கள்தான் இந்நவீன உலகில் அதிகமாகிக்கொண்டு இருக்கிறார்கள் என எண்ணுகின்றபோது மனம் வேதனைப்படுவதைத் தவிர்க்கமுடியாமல் போகிறது!

### மதியை நம்பு, விதியை விட்டொழி!

இந்திய நாட்டை மேலும் அறிவியல் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச்செல்லும் இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், "மதியை மதித்தவன் வானத்தில் ஏறி மதியை மிதித்துவந்தான். தலைவிதியை நம்பி விழுந்தவனே நீ விழுந்தே கிடக்கின்றாய்" எனத் 'தலைவிதி'யோடு தாண்டுபோகின்றவர்களை தன்னம்பிக்கைகொண்டு எழ அழைக்கிறார். கைரேகையில்தான் எதிர்காலம் இருக்கிறதென்றால் கையில்லாதவனுக்கு எதிர்காலம் இல்லையென்றா பொருள்? எனவேதான், 'விடியும் என்று விண்ணை நம்பும் நீ, முடியும் என்று உன்னை நம்பு' என்ற வாசகம் வாழ்வில் தன்னம்பிக்கையோடு முன்னேற அழைக்கிறது.

### தன்னம்பிக்கையில் தளைத்தோங்கியவர்கள்

"பல்கலைக்கழகப் படிப்பை நான் நிறைவுசெய்யாதவன்..." என்கிறார் பில் கேற்ஸ் (Bill Gates). "சிறுபராயத்தில் நான் செருப்புத் தைத்தவன்..." என்றார் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன். "ஒரு காலத்தில் நான் பேரூந்து நடத்துனனாக இருந்தேன்...' என்றார் சுப்பர் ஸ்ரார் ரஜக்னிகாந்த். "பத்தாம் வகுப்புத் தேர்வில் சித்தியடையாதவன் நான்..." என்கிறார் கிறிக்கற் வீரதீரன் சச்சின் ரெண்டில்கார். "பாடசாலையில் இருந்து இடைவிலகிய நிலையில் ஒரு காலத்தில் நான் 'கீபோட்' வாசிப்பவனாயிருந்தேன்..." என்கிறார் இசைமேதை ஏ. ஆர். ரகுமான். "ஒருகால்த்தில் வாங்கில் படுத்துறங்கி, நண்பன் ஒருவனிடம் நாள்தோறும் இருபது ரூபா கடன்பட்டு சினிமா உலகிற்கு வந்தவன் நான்..." என்றார் நடிகர் சாறுக்கான். "கால்பந்து வீரர்களின் பயிற்சிக்கு 'ரீ' பரிமாறும் பணியாளனாக முன்பு பணிசெய்தேன்..." என்றார் கால்பந்து வீரன் பையனொல் மெஸ்சி. உலகம் போற்றுபவர்களாக இவர்கள் எதனால் உயர்ந்து நிற்கிறார்கள்? என்றால், தன்னம்பிக்கையால் தளைத்தோங்கி விடாமுயற்சியால் வெவ்வேறு துறைகளில் விருட்சமாக வளர்ந்து நிழல் பரப்பி நிற்பதனால் ஆகும்.

### நம்பிக்கை, மூன்றாவது கை!

"நம்பிக்கை மனிதனுக்கு மூன்றாவது கை. இரண்டு கைகள் இல்லாதவர்கள்கூட, இந்தக் கை இருந்துவிட்டால், எவ்வளவு உயரத்தையும் எட்டிப் பிடித்துவிடலாம்" என்பார் ஆம்ஸ் ரோங். "பலவீனர்கள் அதிஸ்ரத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். பலமுடையவர்கள் காரணகாரியத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள்" என்பார் எமர்சன். "சோதிடத்தை நம்பினேன் பார்த்தவன் வாழ்ந்தான், லொட்டரியை நம்பினேன் விற்றவன் வாழ்ந்தான், உழைப்பை நம்பினேன் உண்மையில் நான் வாழ்கிறேன்" என்பார் கவிப்பேரரசு வைரமுத்து.

நினைத்தது நெகிழ்ந்தது என்ற தன் நூலில் எழுத்தாளர் மு. மேத்தா 'தன்'னம்பிக்கை என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதுகிறார்: "எங்களை நாங்களே நம்புவதென்றொரு இறுதி முடிவெடுத்தோம்! சமூக விரோதிகளிடமிருந்து தப்பிக்க போலீசை நம்பினோம் - போலீசிடமிருந்து தப்பிக்கக் கோர்ட்டுகளை நம்பினோம் - கோர்ட்டுகளிடமிருந்து தப்பிக்க... இனி – எங்களை நாங்களே நம்புவதென்றொரு இறுதி முடிவெடுத்தோம்!" எனத் தன்னம்பிக்கைபற்றிக் கூறுவார். ஒரு நண்பன் தன் நண்பனுக்கு எழுதியிருந்தான்: 'உதவிக்கு யாரும் இல்லை எனக் கவலைப்படாதே! உன்னுடன் நானிருக்கிறேன். துணிந்து செல்! நிமிர்ந்து நில்!' இப்படிக்கு, தன்னம்பிக்கை என்றிருந்ததாம்.

### தன்னம்பிக்கை இறைநம்பிக்கைக்கு எதிரானதல்ல!

தன்னம்பிக்கை; இறை நம்பிக்கைக்கு (Faith) எதிரானதும் அல்ல, அதேவேளை உயர்வு மனப்பான்மையும் (Superiority Complex) அல்ல என்பதனையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். "நம்பிக்கை ஒரு பறவை போன்றது. இன்னும் இருளாயிருக்கும்போதே விடியலின் ஒளியை உய்த்துணர்ந்து ஓசை எழுப்புகிறது" என்பார் தாகூர். "கடவுளின் நம்பிக்கை என்பது ஒரு அறிவியல் ரீதியான இணங்கல் அல்ல, ஆனால் அவரில் நாம் கொண்டுள்ள ஆத்மார்த்த ஒன்றிப்பும், அர்ப்பணிப்புமாகும்" என்பார் அருள்தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம். ஆக, தன்னம்பிக்கை இறை நம்பிக்கைக்கு எதிரானதல்ல, இறை நம்பிக்கை தன்னம்பிக்கையில் வளர ஏதுவாயிருக்கும்.

### தன்னம்பிக்கை, உயர்வு மனப்பான்மையல்ல!

உயர்வு மனப்பான்மை என்பது அடிப்படையில் ஒருவர் தன் உண்மை நிலையை ஏற்றுக்கொள்ளாமல் தன்னை உயர்வாகக் கருதுகின்ற மனநிலை எனலாம். 'மற்றவர்களைப்போல என்னால் இதனைச் செய்யமுடியும்' என்றால் அதனைத் தன்னம்பிக்கையின் வெளிப்பாடு எனக் கொள்ளலாம். ஒருவரால் ஒரு காரியத்தைச் செய்ய முடியாது எனத் தெரிந்தும் அக்காரியத்தை தன்னால்தான் சிறப்பாகச் செய்யமுடியும் என்ற நினைப்பு இருக்கிறதே அது உயர்வு மனப்பான்மையின் உச்ச வெளிப்பாடாகும். "மற்றவர்களைவிட என்னால்தான் இதனைச் செய்யமுடியும்" என்பது உயர்வு மனப்பான்மையின் இன்னுமோர் தன்மை என விளங்கிக் கொள்ளலாம்.

ஆக, கருத்தியல் ரீதியாகவோ அல்லது வேறு எவ்வகையில் நோக்கினாலும் தன்னம்பிக்கையையும் உயர்வு மனப்பான்மையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டது. தன்னம்பிக்கை நேர்மறையானது, உயர்வு மனப்பான்மை எதிர்மறையானது. தன்னம்பிக்கை ஒவ்வொருவரின் ஆளுமையில் வளர்க்கப்படவேண்டியது, உயர்வு மனப்பான்மை ஆளுமையிலிருந்து அகற்றப்படவேண்டியது. ஆக, தன்னம்பிக்கை ஒவ்வொரு மனிதனுடைய ஆளுமையிலும் மிக நேர்மறையான செல்வாக்குச் செலுத்தவேண்டியது.

### தன்னம்பிக்கை என்பது தற்பெருமையல்ல!

நூல்கள் இருக்கும் இடங்களைச் தேடிச்சென்று இடைவிடாது தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியினாலும் கற்றுயர்ந்தவர் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன். முடியாது என்று எதுவும் இல்லை என 'முடியாது' என்ற வார்த்தைப் பிரயோகத்தை தன் வாழ்க்கை அகராதியிலிருந்து நீக்கிக்கொண்டவன் மாவீரன் நெப்போலியன். 'என்னால் முடியும்' என்ற ஓர்மத்தோடும் தன்னம்பிக்கையோடும் தொடர் தேடலில் ஈடுபட்டு பல அறிவியல் கண்டுபிடிப்புக்களை இன்றைய உலகிற்கு அளித்தவர் அறிவியல் மாமேதை தோமஸ் அல்வா எடிசன்.

மேடைப்பேச்சில் பிரசித்திபெற்று விளங்கிய சேர்ச்சில், தான் அவ்வாறு வெற்றிபெறக் காரணம் தனது தன்னம்பிக்கைதான் என்கிறார்: "மேடைப் பேச்சில் நான் வெற்றிபெறக் காரணம் தன்னம்பிக்கைதான். கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லாரையும்விட என்னை நான் அறிவாளியாக நினைத்துக்கொள்வேன். ஆனாலும் யாரையும் நான் அவமதித்துப் பேசமாட்டேன்" என்கிறார். ஆக, 'என்னால் எல்லாம் முடியும்' எனச் சொல்லிக் கொண்டிருப்பதாலோ அல்லது தற்பெருமை கொள்வதனாலோ தன்னம்பிக்கை ஏற்படாது - வளராது, முன்னெடுக்கும் முயற்சியில் வெற்றி கிடைக்காது. முயற்சியும் தொடர்பயிற்சியும் இலக்கை நோக்கி இடைவிடாத கடின உழைப்பும் இலக்கின் நிறைவை அடைய உதவும்.

### 'விதி'.... நீங்கள் உங்களுக்குச் செய்யும் சதி!

புதிதாக மாற்றலாகிவந்த குறித்த ஒரு வங்கி முகாமையாளர் வங்கியில் வேலைசெய்யும் அனைத்து ஊழியர்களுடனான தொடர்பாடல், மின்னஞ்சல் (Email) ஊடாகவே இருக்கவேண்டும் எனத் தீர்மானித்தார். ஊழியர்களின் மின்னஞ்சல் விலாசங்களைப் பதியும்படி கேட்டுக்கொண்டார். அவ்வங்கியில் துப்பரவுப் பணிகளைச் செய்யும் ஊழியனிடம் மின்னஞ்சல் இருக்கவில்லை என்பதனால் அவனுடைய வேலை பறிக்கப்பட்டது.

அத்துப்பரவுத் தொழிலாளி கவலைப்பட்டான், முகாமையாளரின் காலின் விழுந்தான். எவ்வித பலனும் இல்லை. 'இதுதான் உன் விதி' என்றார்கள் வங்கியின் ஏனைய ஊழியர்கள். அத்தொழிலாளியோ, 'இதுதான் என் விதி' என்று இருந்துவிடாமல் தன்னம்பிக்கையுடன் முயன்றான். தன் முயற்சியினால் சிறிய மரக்கறிக்கடையுடன் தன் வியாபாரத்தை ஆரம்பித்தான். நாளடைவில் வளர்ந்து பிரசித்திபெற்ற வணிகன் ஆனான்.

மிகச் சாதாரண துப்பரவுத் தொழிலாளியாக இருந்து மிகப்பெரும் வர்த்தகனாக உருவானதால் ஓர் ஊடகவியலாளன் அவனை நேர்காணல் செய்தான். அந்நேர்காணலின் நிறைவாக அவனுடனான தொடர்புகளை வைத்திருக்கும் எண்ணத்துடன், "உங்களிடன் 'ஈமெயில்'இருக்கிறதா?" எனக் கேட்டதற்கு அவன், "'ஈமெயில்' இருந்திருந்தால் நான் துப்பரவுத் தொழிலாளியாகத்தான் இன்றும் இருந்திருப்பேன்!" என்றானாம்.

(அதிர்வுகள் தொ..ட..ரு.....ம்.... கருத்துக்களுக்கு: anpuomi@yahoo.com)

### மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் தமிழ் மறைமாநிலம் இன்றைய காலத்தின் தேவை

**– வாகரைவாணன் –**

ஈழத்தின் வடக்கு கிழக்கில் உள்ள கத்தோலிக்கத் தமிழ் மறை மாவட்டங்களை ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரும் விதத்தில் அவற்றை ஒன்றாக இணைத்து தனியான ஒரு மாநிலமாக உருவாக்கக்கூடிய சாத்தியம் உண்டு என்னும் பாப்பரசரின் இலங்கைக்கான புதிய பிரதிநிதியின் கூற்று உலகெலாம் வாழும் தமிழ்க் கத்தோலிக்கரின் காதுகளில் தேனாகப் பாயும் அதேவேளை, ஏனைய தமிழ் உடன் பிறப்புக்கள் அனைவரும் எத்தகைய வேறுபாடும் இன்றி அந்நற்செய்தியை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

கத்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் நிக் யூ யென் வான்ரொட் (Nguyen Van Tod) அவர்கள் கடந்த ஆடித்திங்கள் (யூலை) 13ம் நாளன்று யாழ் மறைமாவட்டத்திற்குச் சென்று அம்மறைமாவட்டத்தின் ஆயர், குருக்கள் ஆகியோருடன் கலந்துரையாடியவேளை அவர் வெளியிட்ட கருத்து ஈழத்தமிழரின் விடியலுக்கும் சிறு ஆதாரமாக அமையும் என நாம் எதிர்பார்க்கலாம்.

திருத்தந்தையினுடைய பிரதிநிதியின் அக்கூற்று பலருக்குப் புதிதாக இருந்தாலும் அதனை முதன்மையாக வைத்து, இக்கட்டுரையாளர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய கட்டுரை ஒன்று, "தமிழ் ஆயர்களை ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பு இன்றைய காலத்தின் கட்டாயத்தேவை" எனும் தலைப்பில் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து வெளிவரும் 'மன்னா' எனும் கத்தோலிக்கத் திங்கள் இதழில் (மே – 2009) வெளிவந்தமையை வாசகர்கள் அனைவருக்கும் நினைவூட்டுவதோடு அதன் இன்றையத் தேவை கருதி சில திருத்தங்களோடு மீண்டும் அது வாசகர் முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய கத்தோலிக்கத் திருச்சபை காலகதியில் தனது பாதையில் இருந்து தடம் மாறும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனைப் பின்வரும் சுருக்கமான வரலாறு தெளிவுபடுத்தும்.

உரோமை சாம்ராஜ்ஜியத்தின் முதல் கத்தோலிக்கப் பேரரசனாக (Emperor) விளங்கிய கொன்ஸ்ரான்ரைன் (Constantine) ஆளுகையின்போது (கி.பி 3ம் நூற்றாண்டு) உரோமையர் கலை பண்பாட்டையும், உரோமையருக்கேயுரிய அதிகாரத்தையும் கத்தோலிக்க திருச்சபை ஆரத்தழுவிச் செயற்பட விரும்பியமையே அது தடம் மாறியமைக்கான காரணம் என நாம் கருதலாம்.

கத்தோலிக்கத் திருச்சபையின் இத்தகைய போக்கே கி. பி 11ம் நூற்றாண்டில் அதன் தலைவரை (Pope) ஓர் உரோமை அரசனாக உலகிற்குக் காட்டியது. இன்றும்கூட கத்தோலிக்கத் திருச்சபை உரோமைப் பண்பாட்டாதிக்கத்தில் இருந்து விடுபடவில்லை என்பதனை கத்தோலிக்கத் திருச்சபை என்னும் சொற்றொடருக்கு முன் உள்ள 'உரோமன்' (Roman) என்னும் அடைமொழி திருச்சபையின் தலைவரை Roman Pontiff என்று அழைக்கும் மரபு, ஆலயத்தில் திருச்சடங்குகள் நிறைவேற்றுகையில் திருச்சபையின் தலைவர் (Pope) மற்றும் ஆயர்கள் (Bishops) அணியும் அங்கிகள் (Vestments), முடி (Crown), தாங்கும் செங்கோல் (Sceptre), பாப்பரசர் என்னும் சொல்லாட்சி என்பன ஓர் உரோமை அரசனையே மக்கள் கண்முன் நிறுத்தும்.

கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தவரையில் மத்திய காலம் (Medieval Period) மிக முக்கியமானது. ஏனெனில் இக்காலகட்டத்திலேயே (கி.பி 11முதல் 13ம் நூற்றாண்டு வரை) கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்களாக (Supreme Pontiff) விளக்கிய 7வது கிறகோறி (Gregory V11) மூன்றாவது இன்சன்ற் (Innocent 111) ஆகிய பாப்பரசர் இருவரும் பெரும் செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவர்களாக (Political Leaders) செயற்பட்டமையை ஐரோப்பிய வரலாறு எடுத்துச்சொல்லும். கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர்கள் எடுத்த இந்தப் புதிய அவதாரமே மார்ட்டின் லூதர் (Martin Luthar – 1483 – 1556) கல்வின் ஜோன் (Calvin John – 1509 – 1564) ஆகிய பிரபல்யம்மிக்க கத்தோலிக்கத் துறவிகள் திருச்சபையைவிட்டுப் பிரியவும், புரொட்டஸ்தாந்து (Protestantism) கல்வினிஸம் (Chlvinism) என்னும் புதிய கிறிஸ்தவ சபைகள் பிறப்பெடுக்கவும் காரணம் ஆகியது.

இத்தகையதோர் நிலையில் கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்து அந்நியப்பட்டு நின்ற பொதுநிலையினரை (Laity) மீண்டும் அதனோடு இணைத்த பெருமை அதன் ஆன்மீகத் தலைவர் 23வது அருளப்பர் பாப்பரசரையே சாரும். 1962ம் ஆண்டு ஐப்பசித்திங்கள் 11ம் நாள் உரோமையில் அவர் கூட்டிய இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் இவ்வரும் பெரும் சாதனையை நிலைநாட்டிய திருத்தந்தை அவர்கள், கத்தோலிக்கத் திருச்சபையின் கவசமாகவே (Shield) காட்சி தந்தார். ஆற்றல்மிகு ஒரு சிலராலேயே வரலாறு ஆக்கப்படுகிறது என்பதற்கு 23ம் அருளப்பர் பாப்பரசர் ஓர் அரிய உதாரணமாவார்.

23வது அருளப்பர் பாப்பரசரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கம் மனிதனின் மாண்பு (Dignity of A Man), அவனது அடிப்படை உரிமைகள், சமூகநீதி, தனித்துவமான பண்பாடு, இறைவழிபாடு, கலை, இலக்கியம் என்பவற்றிற்கு பெரும் மதிப்புக் கொடுக்கின்றது. இதன் வெளிப்பாடாகவே 1962க்குப்பின் கத்தோலிக்கத் திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தமட்டில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் சிலவற்றிற்கு அது செயல்வடிவம் கொடுத்திருப்பினும் வத்திக்கான் சங்கம், அதன் தொடக்க நிகழ்வின்போது திருத்தந்தை 23வது அருளப்பர் வானொலியில் ஆற்றிய உரை, அவரது Mater Etmagistra என்னும் சுற்றுமடல் (Encyclical) வலியுறுத்திய சமூக நீதி (Social Justice) தொடர்பில் எத்தகைய கவனமும் செலுத்தவில்லை என்பதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

1956ம் ஆண்டிலிருந்து கொழுந்துவிட்டெரியும் இனப்பிரச்சினை என்னும் நெருப்பை அணைப்பதில் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை தன் பங்கிற்கு இதுவரை என்ன செய்திருக்கிறது? அவ்வப்போது ஆயர் மன்றத்தைக் கூட்டி அறிக்கைகளையும் தீர்மானங்களையும் தயாரித்து பத்திரிகைகளுக்கு அளிப்பதும் சமாதான ஊர்வலங்களை நடத்துவதும், எரியும் நெருப்பை அணைக்க உதவும் என்றா அது நினைக்கிறது?

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எரியும் அந்தத் தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல் எழுபதுகளில் திருமதி. சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட 'தரப்படுத்தல்' தமிழ் மாணவர்களை வன்முறை வழிக்கு இட்டுச்சென்றபோது அதை இந்தக் கத்தோலிக்கத் திருச்சபை வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்ததேயன்றி வேறு எதுவும் செய்யவில்லை.

ஈழத்தமிழரின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவகையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் முள்ளிவாய்க்காலில் எதிர்கொண்ட சொல்லுக்குள் அடங்காத துயரம், என்றுமே மறக்க முடியாத கொடிய அனுபவம் என்பவற்றை இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடம் கண்டும் காணாததுபோல் இருந்தமையால் உணர்ந்து உள்ளம் துடித்த அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளார் (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர்) அன்றைய பாப்பரசருக்கு அனுப்பிய கடிதம் அவரது கண்ணீரால் எழுதப்பட்டது ஆகும். ஆயினும் அதனையும் எங்கள் கத்தோலிக்கத் தலைமைப்பீடம் ஏறெடுத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

இது மட்டுமன்றி 2009ம் ஆண்டில் ஈழத்தின் வடபகுதியில் ஊழித் தாண்டவமாடிய உள்நாட்டுப் போரின் விளைவுகளை ஆராய்ந்தறியும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையையும், மேற்படித் தலைமைப்பீடம் நிராகரித்தமை வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும் செயலாகவே அமைந்தது. தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் (ஜெனிவா) இலங்கை அரசுக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இலங்கைக் கத்தோலிக்கத் தலைமைப்பீடம் உதாசினம் செய்தமை, அது தமிழரைப் பொறுத்தவரை மாற்றாந்தாய் என்பதையே காட்டும்.

1956ம் ஆண்டு ஆனித்திங்கள் 5ம் நாளில் இருந்து 2009ம் ஆண்டு வைகாசித்திங்கள் 19ம் நாள்வரை தமது அடிப்படை உரிமைகளுக்காகத் தமிழர் அறவழியிலும் பின் ஆயுதவழியிலும் போராடியபோது இலங்கைக் கத்தோலிக்கத் தலைமைப்பீடத்திற்கு அது வெறும் காட்சியாகவே தென்பட்டது. இப்போராட்ட வேள்வியில் தனது தமிழ்க்குருக்கள் சிலர் பலியிடப்பட்டமையையும் அது ஒரு சாதாரண நிகழ்வாகவே பார்த்தது. தம் மதத்திற்காக உயிர்தந்த மக்களை வேதசாட்சிகள் என்று போற்றிப் பாராட்டும் கத்தோலிக்க உலகம், உரிமைக்காகத் தம் உயிர்களைக் காணிக்கையாக்கிய இலங்கைத் தமிழர்களுக்கு என்ன பட்டம் சூட்டப்போகின்றது?

இத்தகு சூழ்நிலையில் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக இலங்கை அரசியல் அமைப்பில் உள்ள 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்னும் அதன் கோரிக்கையை ஓர் அற்புதம் (Miracle) என்றே கூறவேண்டும். ஆனால் அது ஒரு தீர்மானமாகவே இருந்துவருகிறது என்பதைக் கவனிக்கையில் இலங்கைக் கத்தோலிக்கத் தலைமைப்பீடத்தின் போக்கில் சந்தேகப்படுதல் தவிர்க்க முடியாதது ஆகும்.


அடுத்த ஆண்டு தைத்திங்களில் இலங்கைக்கு வருகை தரவிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நிகழ்ச்சிநிரலை அரசு பயன்படுத்துவற்கு ஆதரவாகக் கர்தினால் மல்கம் றஞ்சித் அவர்கள் செயற்படுகின்றாரா என்னும் வினாவும் மேற்படி சந்தேகத்தை வலுப்படுத்தும்.

இலங்கைக் கத்தோலிக்கத் தலைமைப்பீடம் தனது மதத்திற்குக் கொடுக்கும் பெரும் முக்கியத்துவம் இந்நாட்டின் மூத்த குடிமக்களான தமிழரின் அடிப்படை உரிமைகளுக்கு கொடுக்கவில்லை என்பதற்குப் பல சான்றுகளைத் தர இயலும். அவற்றில் சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ்க் கத்தோலிக்கர்கள் சிங்களக் கத்தோலிக்கர்களாக மாற்றப்பட்டமையும் அன்று இந்த அநீதிக்கு எதிராக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் குரல் கொடுத்தமையையும் வரலாறு கூறும்.

இவ்விதம் ஈழத்தமிழர் விடயத்தில் இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடம் கடைப்பிடிக்கும் பக்கசார்பான போக்குத் தொடரும் நிலையில், தமிழரின் அனைத்து நலன்களையும் கருத்தில்கொண்டு வடக்கு கிழக்கில் உள்ள நான்கு மறைமாவட்டங்களையும் இணைத்து தனியான ஒரு மறைமாநிலமாக்குதல் காலத்திற்கேற்ற சிறந்த காரியம் ஆகும். இதற்கு ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களிடம் பரிவும் அக்கறையும் கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான புதிய பிரதிநிதியின் ஆசீர்வாதம் கிடைத்திருப்பது கண்ணீர்க்கடலில் நீந்தும் ஈழத்தமிழருக்குக் கிடைத்த கடவுளின் கடாட்சம் எனலாம். எனவே, கத்தோலிக்கத் தமிழ் உலகம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்றே களத்தில் குதிக்க வேண்டும். இது காலம் அவர்களுக்கு இட்ட கட்டளை ஆகும்.●

# பகிர்ந்து வாழும் பண்பை வாழ்வாகக் கொள்ளுங்கள்!

**பெரியகட்டு புனித அந்தோனியார் திருத்தலத்தில் மன்னார் ஆயர்**



ஒவ்வொரு மனிதனும் மனித மாண்பை மதித்து ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து வாழும் பண்பைக் கடைப்பிடிக்க வேண்டும். இப்பொழுது சிசுக்களைக் கொல்லும் தாய்மார்களையும், சிறுவர்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் மனிதர்களின் கலாசாரத்தையும்தான் பார்க்கின்றோம். ஆகவே ஒவ்வொரு மனிதனும் குடும்பமும் மனித மாண்புக்கு மதிப்பளித்து வாழவேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் அரசாங்கத் தகவல் அறிக்கையில் பதியப்பட்ட யாத்திரைத் தலங்களில் ஒன்றான பெரிகட்டு புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா கடந்த 03.08.2014 அன்று கொண்டாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இவ்விழாவிற்கு வருகை தந்த பக்தர்கள் மத்தியில் மன்னார் ஆயர் அவர்கள் மறையுரை ஆற்றுகையில் கூறியதாவது, அந்தோனியார் உலகளாவிய ரீதியாக மக்களால் போற்றப்படுவதற்குக் காரணம், அவர் தம்மை சிறப்பான விதத்திலே இறைவனுடன் பகிர்ந்துகொண்டதே ஆகும். கொடுப்பதுதான் மனிதத்துவம். அதுதான் கிறிஸ்தவம். இந்தக் கொடுக்கும் பண்பு இல்லாவிட்டால் ஒருவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. நாம் வாழ வேண்டும் என விரும்புகின்றோம் பெற்றுக்கொள்வது மட்டுந்தான் வாழ்வு அல்ல. கொடுப்பதன் மூலம்தான் நாம் எமது வாழ்வை மேம்படுத்திக்கொள்கின்றோம். நாம் ஒருவர் ஒருவருக்குக் கொடுத்து மற்றவர்களை வாழவைக்க வேண்டும்.

இசையால் ஆகமத்திலே விருந்தைப்பற்றி கூறப்படுகிறது. "ஆண்டவர் அழைக்கின்றார். நீங்கள் ஏன் தாகமாய் இருக்கின்றீர்கள்? ஏன் உணவுக்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்? வாருங்கள் பணம் இல்லாத விருந்தில் வந்து கலந்துகொள்ளுங்கள்" என அழைக்கின்றார்.

இப்படிப் பல இடங்களிலே இறைவனின் விருந்துப் பண்பு, மக்கள்மேல் கொண்ட பாசம் போன்றவை எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த விருந்து என்பது கடவுளின் அன்பையும், பாசத்தையும், பரிவையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுகின்றது.

மக்கள் ஆண்டவர் வந்துவிட்டார் எனத்தேடி ஓடுகின்றார்கள். அப்பொழுது ஆண்டவர் தனது சீடர்களைப் பார்த்துக் கூறுகின்றார். என் அன்புச் சீடர்களே! நாம் உண்பதற்கும் நேரம் இல்லாமல் மக்களுடன் பகிர்ந்துகொண்டிருக்கின்றோம். வாருங்கள் நாம் எம்மை ஆண்டவருக்குப் பகிர்ந்துகொடுக்கத் தனித்துச் செல்வோம் எனச் சீடர்களை அழைத்துச் செல்கின்றார்.

ஆனால், மக்கள் அவர் இருந்த இடத்துக்கே செல்கின்றனர். இதனால் ஆண்டவர் இயேசு, அம்மக்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல் பரிதவிக்கின்றதைப் பார்த்து அம்மக்கள்மீது பரிவுகொள்கின்றார். இந்தப் பண்புதான் மற்றவர்களுடன் பகிர்ந்து வாழும் பண்பாகும்.

பரிவு என்பது பிறரின் கஷ்டம், கவலை, துன்பம் போன்ற அவர்களுடைய உணர்வுகளை உணர்ந்து அவர்களுடன் இரண்டறக்கலந்து, அவர்களுக்கு அர்த்தமுள்ள காரியங்களை செய்வதாகும்.

ஒரு தாய் தனது இரத்தத்தை, தன்னிடம் உள்ள அனைத்தையும் கொடுத்து தனது பிள்ளைகளின்மீது பரிவுகொள்கின்றாள். ஆனால் இறைவன் தாயைவிட தம் மக்கள்மீது அளவுகடந்த பரிவுகொள்கின்றார்.

புனித அந்தோனியார் ஒரு குருவாக வாழ்ந்தது பன்னிரெண்டு ஆண்டுகள்தான். இந்தப் பன்னிரெண்டு ஆண்டுக்குள் தன்னை முழுமையாகக் கொடுக்க வேண்டும், கிறிஸ்துவை அறியாத ஆபிரிக்க, தென் ஆபிரிக்க நாட்டிலே அம்மக்களுக்கு கிறிஸ்துவை பகிரவேண்டும் என விரும்பிச் சென்றபோதும் அங்கு தேவையில்லை நீ இத்தாலியில் வந்து உன் பணியை செய் என அழைக்கப்படுகின்றார்.

ஆகவே இறைவனின் சித்தத்தில் தன்னைப் பகிரச் சித்தம் கொண்டவராகப் புனித அந்தோனியார் வாழ்ந்தார். இதனால்தான் புனித அந்தோனியார் ஒரு கொடை வள்ளல் என அழைக்கப்படுகின்றார். இவரின் இந்தக் கொடையால்தான் இறைவனுக்கு அருகாமையில் அவர் எம்மை அழைத்துச் செல்கின்றார்.

இறைவன் இந்த உலகைப் படைத்து மனிதனின் கையில் கொடுத்தார் என்றால் அதுதான் இறைவனின் கொடுக்கும் தன்மையாகும். ஒவ்வொரு நாளும் பறந்து செல்லும் பறவைகளைப் பாருங்கள். அவைகள் உழைப்பதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை. ஆனால் எல்லாவற்றுக்கும் இறைவன் உணவைக்கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றார். இவைகளைப் பார்க்க மனிதர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள்?

ஆகவே இறைவனைத் தேடுங்கள், அவர் எல்லாவற்றையும் கொடுப்பார் இறை யேசு தன்னைப் பகிர்ந்துகொடுத்ததுபோன்று அவருக்குச் சாட்சியாக நாமும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் பண்பில் வாழவேண்டும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

### கல்வி



கல்வி என்பது மூன்றெழுத்து – அதைக்
கற்றுவிட்டால் கோடி எழுத்து.
கல்லாதவர் நெஞ்சம் கல்லாகும்
கற்றவர் நெஞ்சம் பூவாகும்.
பிறர்துயர் கண்டால் துவண்டுவிடும்
அவர்தம் துயர்போக்கி இன்புறுமே!
காற்றாலும் தீயாலும் மற்றும்
கடற்கோளாலும் அழியாது கல்வி.
வற்றாத ஊற்றாகும் கல்விதனை
விருப்புடனே நாம் கற்றிடுவோம்.



வறியோரை வானுயர வைத்திடும்
சமூக ஏற்றத்தாழ்வினை ஒழித்திடும்
ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும்
சிந்தனையை கிளறித் தெளியவைக்கும்.
கல்வியே எம் உயர்விற்கு
என்றும் ஏணிபோல் உதவிடும்.
நாம் என்றும் அதனை மறவாது
போற்றி அதன்புகழ் பாடிடுவோம்.
*பெ. பிரகாசமேரி, அருப்பே சிறுமியர் இல்லம்,*
*பூவரசங்குளம், வவுனியா.*

### தாய்மை



இரத்தத்தில்கூட பிரிவுகள் வரலாம்
தாய் அன்பில் பிரிவுகள் இல்லை.
நட்பில்கூட பிரிவுகள் வரலாம்
தாய்ப் பாசத்தில் பிரிவினை இல்லை.
உண்மையான அன்பின் சிகரம்தான் தாய்!

என்னை நடக்கவைத்து
பார்க்க வேண்டும் என்ற ஆசையைவிட
நான் விழுந்துவிடக் கூடாது என்ற
கவனத்தில்தான் இருந்தது
உன் தாய்ப்பாசம்
*8A , எம். இதய வேலினி லெம்பேட்,*
*மன். புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை.*

### என் முதல் உறவான அன்னை



பஞ்சத்திலும் பசுமையாய்
கஷ்ரத்திலும் கலங்காமல்
துக்கத்திலும் துவழாமல்
பத்து மாதம் அன்புடனே சுமந்து
என்னைப் பாரினிலே
தவழவிட்டவள் அன்னை.

என் பசி தீர்க்க தன் பசி பொறுத்தாள்
ஏக்கம் என்னை அணுகாதிருக்க
தன் தூக்கம் மறந்து எனைக் காத்தாள்
என் சிரிப்பில் தன் சோகம் மறந்தாள்!

பால் இறங்காவிட்டால்
பசு தட்டிக் கொடுப்பதுபோல் – தன்
உயிர் போதும்வரை
தன் உதிரத்தைத் தட்டிக்கொடுத்தாள்.




கட்டிய கணவனுடன்
காட்டும் பொறுமைக்கு அளவேது?
கஷ்ரத்திலும் கடினமற்றமற்ற உள்ளம்
கொண்டவள் அம்மா.
மொத்தத்தில் என் தெய்வமே
என் அம்மாதான்.
- து. லூட்ஸ் கிருசாந்தினி,
கறிக்காமுறிப்பு, அச்சங்குளம், நானாட்டான்.

### அன்பு



உண்மையான
அன்பில்தான்
கோபங்களும்
கட்டுப்பாடுகளும் அதிகம்.
அதனை
அறிந்துகொண்டவர்களைவிட
பிரிந்துசென்றவர்கள்தான்
அதிகம்.
*8A ஸ். சாள்ஸ் ஜோசப் குலாஸ்,*
*மன். புனித ஆனாள் ம.ம.வி, வங்காலை*

## சிறுகதை

# வேலி

நாளைக்கு மதியம் பயணம். அதற்குமுன், வழக்கம்போல் மாதா கோவிலுக்குப் போய் பிராத்தனை செய்துவிட்டு வரவேண்டும்.

காரை ஓட்டியபடி அந்தத் தெருவுக்குள் நுழைந்தபோதே, சிலீரென்று மனசுக்குள் ஒரு தென்றல். பின்னே? பிறந்ததிலிருந்து இருபத்திரண்டு வருடங்கள் வளர்ந்து திரிந்த வீதி ஆயிற்றே!

திருமலையில் ஒண்டுக்குடித்தனத்தின் நடுவில் பிறந்து வளர்ந்தவள் நான். இன்று பல அமெரிக்கக் கம்பெனிகளுக்கு உதவும் ''கால் சென்டர்'' ஒன்றின் முதலாளிகளில் ஒருத்தி. நான்தான் மாறிவிட்டேன். ஆனால், இந்தத் தெருவின் நெரிசலும், போக்குவரத்தும், பிரச்சினைகளும் அப்படியேதான் இருக்கின்றன.

வீதியின் மேடு பள்ளங்களுக்கு ஏற்ப காரின் வேகத்தை மெதுவாக்கினபோது, குயிலி மாமி கண்ணில் பட்டார். தன் வீட்டின் வாசல் திண்ணையில் உட்கார்ந்து யாரோடோ பேசிக்கொண்டு இருந்தவர், சட்டென்று என்னை அடையாளம் கண்டு. எழுந்து வந்தார்.

''வா வா, மைதிலி! எத்தனை வருஷம் ஆச்சு உன்னைப் பார்த்து? உள்ளே வந்து ஒரு கப் காப்பியாவது குடிச்சுட்டுத்தான் போகணும்'' கைகளைப் பிடித்துக் கொண்டார். காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி, அவருடன் வீட்டின் உள்ளே நுழைந்தேன்.

''உட்காரு மைதிலி! எப்படி இருக்கே?'' என்றவர் தானே தன்னைத் திட்டிக் கொள்பவர்போல, ''இது என்ன கேள்வி? பார்த்தாலே தெரியுதே, நல்ல சிவப்பா, பளபளனு... என் கண்ணே பட்டுடும்போல இருக்கேம்மா! நல்ல வேலையில இருக்கிறதா கேள்விப்பட்டேன். சந்தோஷமா இருக்கு'' என்றவர், ''இரு காபி போட்டுக்கொண்டு வாரன்'' என்றபடி சமயலறைக்கு நடந்தார். ''மாமி, மாலினி எப்படி இருக்கா? அமெரிக்காவிலேதானே? அவ கல்யாணம் நடந்து மூணு வருஷம் இருக்குமா....என்னமோ நேற்று நடந்தமாதிரி இருக்கு!'' என்றேன் பின்னாடியே போய்.

நான் என்னத்தைச் சொல்லுவேன் மைதிலி? அவள் அமெரிக்கா போய் மூணு வருஷம் ஆச்சு! எப்பவாவது அத்திப் பூத்த மாதிரி கடிதம் போடுவாள். மாமியாரும், புருஷனும் தன்னை சந்தோஷமா வச்சிருக்கிறதா இரண்டே இரண்டு வரி எழுதுவாள்!''

''நல்ல விஷயம்தானே மாமி? வேறென்ன வேணும்?''

''இல்லேம்மா! அவள் ஏதோ சொல்லிக் கொடுத்து எழுதிறமாதிரிதான் எனக்குப்படுது. ஒரே ஒரு தடவை மாமியார், மாப்பிள்ளையோடு மாலினி இங்கே வந்தாள் சாப்பிடுறதுக்கு முன்னாடி, ''நாங்க மூணு பேரும் மாதா கோவிலுக்கு போய் வாறோம்னு மாப்பிள்ளை கிளம்பினார். மாலினி அவரைப் பார்த்து ''எனக்குத் தலைவலியா இருக்கு. நீங்க இரண்டுபேரும் போயிட்டு வாங்களேன் என்று கெஞ்சற மாதிரி கேட்டாள்.

உடனே அவள் மாமியார், 'ஆமாண்டா! எனக்கும் முடியலை. நானும் இங்கேயே இருக்கேன். நீ மட்டும் போய்ட்டு வா! என்று சொல்லிட்டார். என்னவோ மாலினியை தனியா என்கூட விடக்கூடாதுங்கிற மாதிரி அதுல ஒரு அவசரம் தெரிஞ்சுது. பிறகு பக்கத்து வீட்டு மேரி அக்கா மாலினியை பார்க்க ஆசையா ஓடி வந்தார். 'ஒரு பாட்டுப் பாடேண்டி'னு கெஞ்சினார். இல்ல மாமி இப்பெல்லாம் நான் பாடறதே இல்லை'னு மாலினி ஒரேயடியா மறுத்துட்டாள்! அக்காவுக்கு வருத்தமோ வருத்தம். 'அமெரிக்கா போய் மாலினி ரொம்பவே மாறிட்டாள்'னு சொல்லிச் சொல்லி மாஞ்சுபோனா. ஆனா. எனக்கென்னவோ மனசுக்குள்ள திக்குனு இருக்கு. மாலினி முகத்தில சந்தோஷமோ, கண்ணுல ஒளியோ எதுவுமே காணல என்றார்.

''மாமி... மாலினிட அட்ரஸ், டெலிபோன் நம்பர் கொடுங்கள். நான் நாளைக்கு அமெரிக்கா போறன். நானே மாலினியை நேரிலே போய் பார்த்துட்டு உங்களுக்கு தகவல் சொல்றேன். ஒண்ணும் கவலைப்படாதீங்க! எல்லாம் நல்லபடியா இருப்பாள்.''

மைதிலி மாலினியைப் பற்றிச் சிந்தித்தாள் .....

''பஞ்சாப் கோதுமை நிறம். கருங்கூந்தல் நீண்டு முழங்காலைத் தொடும். அதை இரட்டைப் பின்னலாக்கி, ஒரு பக்கம் மட்டும் ரோஜா வைத்திருப்பாள்.

அவளின் பெயருக்குக் காரணம் கேட்டேன். ''இது ஒரு அழகான இராகத்தின் பெயர். என் அப்பா ஆசையா வைத்த பெயர். நாங்க இதுக்கு முன்னாடி யாழ்ப்பாணத்தில் இருந்தோம். அவர் பாட்டு சொல்லிக் கொடுப்பார். நான் பெரிய பாடகியா வரணும்னு ஆசைப்பட்டார். அப்பா இப்ப இல்லை. ஆனா, அவரோட கனவை நனவாக்கணும். அதுதான் என்னோட ஒரே ஆசை!'' என்றாள். எதைப்பற்றி பேசினாலும், அவளுடைய பேச்சு அப்பாவில்தான் வந்து முடியும். அவருடைய கனவை நனவாக்க, விடியற்காலை ஐந்து மணிக்கே எழுந்திருப்பாள். சுருதி சுத்தமாகக் கூட்டப்பட்ட தம்புரா, அவள் வீட்டிலிருந்து ஒலிக்கும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# கொஞ்சம் சிரிங்க

எல்.கே.ஜி. பையன் : என்னை உங்களுக்கு பிடிச்சிருக்கா?
ஆசிரியை : ஆமாம்
எல்.கே.ஜி. பையன் : அப்படியானால், என் அம்மா அப்பாவை வரச்சொல்லி உங்கள் வீட்டில் பேசச் சொல்லட்டுமா?
ஆசிரியை : டேய் முட்டாள்... உன் மனசுல என்ன நினைச்சிகிட்டிருக்க?
எல்.கே.ஜி. பையன் : ஹேய்ய... நான் டியூசனுக்கு வாறதைப்பற்றி சொன்னேன்.
கிறுக்கு பயபுள்ள, எப்ப பார்த்தாலும் நம்மளயே நினைச்சிக்கிட்டு இருக்கா!

.........................................

மாணவன் 1 : ''இரண்டு கழுதை சேர்ந்து கணக்குப் போட்டா எப்படி இருக்கும்?''
மாணவன் 2 : ''தெரியலையே?''
மாணவன் 3 : எங்கேயாவது உதைக்கும்.

ஆசிரியர் : ''கணக்கு பரீட்சையில எல்லாக் கேள்விக்கும் ஏணிப்படியை வரைஞ்சு வச்சிருக்கியே, ஏண்டா?
மாணவன் : ''கணக்குல ஸ்ரெப்புக்குத்தான் மார்க்குன்னு நீங்கதானே சார் சொன்னீங்க!

.........................................

பையன் : ''ஐ லவ் யூ!''
பொண்ணு : ''ஐ டோன்ட் லவ் யூ''
பையன் : ''நல்லா யோசிச்சு சொல்லு டியர்!''
பொண்ணு : ''கண்டிப்பா, ஐ டோன்ட் லவ் யூ!''
பையன் : ''ஒ, கே வெயிட்டர்... எனக்கு மட்டும் பில் போடு''
பொண்ணு : ''ஏய்! ஏய்! ஐ லவ் யூடா! செல்லம்!''

.........................................

மதன் : என் தம்பி ரொம்ப பயந்த சுபாவம்! சூடா இட்லிகூட சாப்பிட மாட்டான்.
விமல் : ஏன்?
மதன் : அதுல ஆவி இருக்குமே!

# மன்னா விளம்பரப் பலகை

''கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல, தன் குற்றங்களை உணராதவனே குருடன்''

இருக்க வேண்டியவை ஐந்து :
சுவையான உணவு படைக்க அன்புள்ள தாயிருக்க வேண்டும். ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்க வேண்டும். நல்ல அறிவு வளர ஆசான் இருக்க வேண்டும். இனிமையான இங்கித வாழ்க்கைக்கு நல்ல மனைவி வேண்டும். தூய சிந்தனைக்கு தெய்வ பக்தி இருக்க வேண்டும்.
*பெ. பிரகாச மேரி,*
*அருப்பே சிறுவர் இல்லம், பூவரசங்குளம், வவுனியா.*

- வாழ்க்கையில் சம்பாதிக்க வேண்டிய மிகப்பெரிய விஷயம் பொறுமை.
- விழும்போது திமிறி எழுந்து ஓடு, வெல்லும்போது திமிரு இல்லாமல் நட.

- யார் ஒருவன் தனக்குள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான். (விவேகானந்தர்)
- பண்பில்லாத நண்பனைவிட, பண்புள்ள பகைவன் மேலானவன்.

உலக அரசரின் குழந்தையாக இருப்பதைவிட இறைவனின் குழந்தையாக இருப்பதே சிறந்தது.
- புனித அலோசியஸ் கொன்சாகா . -

நீ வாழ்க்கையை நேசிக்கின்றாயா? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே. ஏனெனில் வாழ்க்கை நேரத்தால் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ புனித ஆனாள் ம.மா.வி, வங்காலை.

01. பேதுருவின் சகோதரன் யார்? அந்திரேயா
02. பழைய ஏற்பாட்டுப் புதுமைகளுள் ஒன்றாக அமைவது? மன்னா உணவும், நீரும்
03. "வாயை மூடு. இவரைவிட்டு வெளியே போ" என்று இயேசு கூறியது யாருக்கு? அலகைக்கு
04. புதுமைகள் மூலம் இயேசு மக்களிடம் எதிர்பார்த்தது? விசுவாசம்
05. திருத்தொண்டர்களுள் அடங்காதவர்? பேதுரு
06. "நானும் இஸ்ராயேல் இனத்தவன். நான் பென்ஜமின் குலத்தவன். திருச்சட்டத்தில் எனக்கிருந்த ஆர்வத்தால் திருச்சபையைத் துன்புறுத்தினேன்" எனக் கூறும் திருவிவிலியப் பகுதி எது? பிலி. 3:5-6
07. பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இறைவனின் பெயரை எடுத்துச்செல்ல தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்? சவுல்
08. திருச்சபையின் பொதுத் தன்மையைக் குறித்து நிற்கும் பண்பு எது? கத்தோலிக்கம்
09. சிலைகளுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை புற இனத்தார் உண்ணலாகாது என்ற தீர்மானம் எச்சங்கத்தில் எடுக்கப்பட்டது.? ஜெருசலேம் பொதுச் சங்கத்தில்
10. "இறையாட்சியின் .................... அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது." மறைபொருளை
11. இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் .................. நிலைவாழ்வு பெறவும் செல்வார்கள். நேர்மையாளர்கள்
12. இஸ்ராயேல் மக்கள் ............... விழா கொண்டாட கடவுளால் அறிவுறுத்தப்பட்டனர். பாஸ்கா விழா
13. ஆவியின் செயல்களுள் அடங்காதது. பொறாமை
14. திருச்சபை கிறிஸ்துவின் .................. (மணவாட்டி)
15. கனியைக் கொடுக்கும் கிளையையோ மிகுந்த கனியைத் தரும்படி .................. (கழித்திடுவார்)
16. இறைதந்தை - இறைமகன் - .................. (திருச்சபை)
17. .................. இறைவாக்குகளையும் முழுமைப்படுத்தவே இயேசு வந்தார். (திருச்சட்டங்களையும்)
18. தனது வாழ்க்கை மாற்றத்தை வெளிப்படுத்திய சக்கேயுவுக்கு இயேசு வெளிப்படுத்தியது என்ன? மீட்பு
19. 'பிபிளோஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தை எது? பைபிள் என்ற வார்த்தை
20. திருவிவியம் வாழ்வைப் பூரணப்படுத்திச் செல்லும் .................. (ஞான ஊற்றாகும்)
21. மரியாளின் அழைப்புப்பற்றிக் கூறும் திருவிவிலியப்பகுதி எது? லூக்: 1:38
22. இறுதி நற்கருணை உட்கொண்டு 1857 மார்ச் 9ம் திகதி விண்ணகம் சென்றவர் யார்? புனித டோமினிக் சாவியோ
23. "அநீதியை காணும்போது என்னால் அமைதியாக இருக்க முடியாது .................. எனக் கூறியவர் யார்? பேராயர் டெஸ்மன் ரூட்டு
24. இறந்து 400 ஆண்டுகளுக்குப்பின் 1935.06.06 இல் பதினொராவது பத்திநாதர் திருந்தந்தையால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது யாருக்கு? புனித தோமஸ் மூர்
25. தன்னலம் நாடாதது, தீங்கு நினையாதது எது? அன்பு
26. இயேசுவின் சுயபரித்தியாகம், அவரின் சுய.............. அவருக்கு மாட்சியைக் கொணர்ந்தது. வெறுமையாக்கல்
27. உன்னத குருவாகிய ................ ஆபிரகாம் பத்திலொரு பாகத்தை காணிக்கையாகச் செலுத்தினார். மெல்கிசதேக்கிற்கு
28. இயேசுவின் தியாகப் பலியை நினைவுகூருவதற்காக எமக்கு வழங்கப்பட்ட மிக உன்னத சந்தர்ப்பம் எது? திருப்பலி
29. இறைவார்த்தை வழிபாடு, நற்கருணைவழிபாடு என்பது? திருப்பலியின் முக்கிய இரு பகுதிகள்.
30. 1ம் வருட வாசகம் வாசிக்கப்படும் நற்செய்தி எது? புனித மத்தேயு
31. எல்லா வழிபாடுகளிலும் முக்கிய இடம்பெறுவது? இறைவார்த்தை
32. கிறீஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொள்ளும் எம்மில் வளரவேண்டிய பண்புகளில் அடங்காது. அகங்காரம்
33. 'மவ்செவன' எனும் பெயரில் ஓர் இல்லத்தை ஆரம்பிப்பதற்காக முதன்மை வகித்தவர்? திரு. கொட்வின் மெண்டிஸ்
34. 25.01.1928 அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர் யார்? அதிவண. கருதினால் தோமஸ் கூரே
35. எல்சல்வடோர் நாட்டின் பேராயராக இருந்தவர்? ஒஸ்கார் றோமேறோ
36. மனிதன் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் இறை அழைப்பை ஏற்று இறைவனோடு இணைந்து வாழும்போது அவன் ................ மாற முடியும். புனிதனாக
37. செவிசாய்க்கும் தன்மை ................ (நல்ல மந்தையின் பண்பு)
38. எகிப்திய தலைச்சன் பிள்ளைகள் கொல்லப்பட்டது? பாஸ்கா இரவில்
39. 7-12 நூற்றாண்டுகள்? (தளர்ச்சியின் காலம்)
40. கிறிஸ்து நம்மோடு மிக நெருங்கிய முறையில் ஒன்றிப்பது? நற்கருணையில்

## சிறப்பாக நடந்துமுடிந்த .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆயர்கள் மற்றும் 200க்கும் அதிகமான குருக்கள் திருவிழாவில் பங்குகொண்டிருந்தனர். தமிழ், சிங்களம், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகள் இணைந்ததாகத் திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியின் இறுதியில் திருச்சுருபப் பவனி இடம்பெற்றது.

மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை, காலி ஆயர் றேமன் விக்கிரமசிங்க, அநுராதபுரம் ஆயர் நோபேட் அந்திராடி ஆண்டகை, கொழும்பு இளைப்பாறிய பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை உட்பட இத்தாலியன் ஆயர் மன்றத்தின் பிரதிநிதிகளாக வந்திருந்த குருக்கள் மென்சின் நோர் லேனாட் டீ முருகோ, மொன்டினியோ அன்ரனியோ அமராத்தி ஆகியோரும் பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் உட்பட அரசியல் தலைவர்கள் பலர் இத்திருவிழாவில் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை திருச்சொரூப ஆசீர்வாதத்தின்போது, நல்லிணக்க ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த தாயார் ஒருவர் தனது காணாமற்போன மகனின் படத்தைத் தாங்கிப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் ஆயரின் வழிநடத்தலில், மடுப்பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் தலைமையில் மன்னார் மறைமாவட்டக் குருக்கள், ஏனைய மறைமாவட்டக் குருக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

## தமிழ்த்தூது தனிநாயகம் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த நிகழ்வு தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் மஹாதேவ சர்மா தர்ம குமார குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. கலாபூசணம் திரு. அ. அந்தோனிமுத்து அவர்களால் இறைவணக்கம் நிகழ்த்தப்பட்டது. தமிழ்ச்சங்கத்தின் சிரேஸ்ர உபதலைவர் ஜனாப் மக்கள் காதர் வரவேற்புரை வழங்கினார்.

மன்னார் நகரபிதா திரு. எஸ். ஞானப்பிரகாசம், உபதலைவர் திரு. ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர் திரு. இரட்னசிங்கம் குமரேஸ், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வினோ, தமிழ்ச் சங்கத்தின் உதவிப் பொதுச்செயலாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட், நிர்வாகச் செயலாளர் திரு. மன்னார் அமுதன், நிர்வாக உறுப்பினர்கள் திரு. தே. பி. சிந்தாத்துரை, வைத்தியர் திரு. எஸ். லோகநாதன், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அஜந்த 'ரொட்றிக்கோ மற்றும் பல பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி திருவுருவச் சிலையானது கடந்த ஆண்டு 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் 2ஆம் திகதி தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு தினம் அன்று திறந்துவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாரினதும் நிர்வாக உறுப்பினர்களதும் ஏற்பாட்டில் இந்நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

## தனது நண்பரான .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னிப்பு, ஒப்புரவு, ஆகிய தலைப்புக்களில் உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் எல்லாரும் பாவிகள் எனினும் நம் ஆண்டவரின் பிரசன்னத்தில் நாம் அனைவரும் துணிச்சலுடன் தொடர்ந்து செல்லவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமடலை மேற்கோள்காட்டி, கிறிஸ்துவின் உடலின் பன்மைத்தன்மை பற்றிப் பேசிய திருத்தந்தை, தூய ஆவியின் செயல் வழியாக இந்தப் பன்மைத்தன்மை ஒன்றிப்பிற்குள் வாழ அழைக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வரவேற்றுப்பேசிய அவரின் நண்பரான கசெர்த்தா பெந்தகோஸ்து சபை பாஸ்டர் கியோவன்னி ரார்ற்சன் (Giovanni Trarttion) அவர்கள், இப்பயணம் நினைத்துப் பார்க்க முடியாத, எதிர்பாராத கொடை என்று கூறி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இப்பயணத்திற்கு நன்றி தெரிவித்தார்.

தங்களது பெந்தக்கோஸ்து சபையினர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காகச் செபிப்பதாகவும் ரார்ற்சன் அவர்கள் கூறினார். திருத்தந்தையும் தனக்காகத் தொடர்ந்து செபிக்குமாறு அச்சபையினரிடம் கேட்டுக்கொண்டார்.

## மடுவில் சுகாதாரமற்ற வியாபாரம் 12 பேரிடம் தண்டம் அறவீடு

மடுத்திருவிழா காலங்களில் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்ட உணவகங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள் 12 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது 60 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 6ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மடுத்திருத்தலச் சூழலில் உணவக மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுட்டிருந்தவர்களில் சுகாதாரமற்ற முறையில் செயற்பட்டவர்களுக்கு எதிராக இந்தச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையிலான பொது சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் திடீர்ச் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது காலாவதியான மற்றும் பாவனைக்கு உதவாத உணவு வகைகள், பாவனைப்பொருட்கள் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் 12 பேருக்கு எதிராக [illegible] நீதிமன்றில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 133

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இறைவாக்கினர் எரேமியா கி.மு. 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 6ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இக்காலத்தில்தான் யூதாவின் அரசு பபிலோனிய அடிமைத்தனத்துக்குள் உட்பட்டிருந்தது என்பதை நாம் முன்பு பார்த்தோம்.

இந்நாட்களின் அடிமைத்தனத்தோடு இணைந்து எருசலேமும் சூறையாடப்பட்டது. அவர்களின் பெருமைக்குரிய சொத்தாக இருந்த எருசலேம் தேவாலயம் தரைமட்டமாக்கப்பட்டதுடன் அங்கிருந்த சகல செல்வங்களும் சூறையாடப்பட்டு ஜெருசலேம் ஓர் இழிவுக்குரிய நகராக்கப்பட்டது. அது மட்டுமல்ல அதன் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். இவர்களின் அவல நிலை, துன்ப உணர்வு ஒருபாடல் வடிவில் புலம்பலாக திருவிவிலியத்தின் 24வது நூலாக நமக்குத் தரப்படுகிறது.

ஜெருசலேம் நகரை ஒரு பெண்ணாக உவமித்து இப்புலம்பல் வரிகள் எழுதப்பட்டுள்ளன. பபிலோனியரின் கைகளில் அகப்பட்டு எவ்வித அவமானங்களுக்கு உள்ளாக்கப்பட்டாள் என்பது புலம்பல் நூலின் நான்கு (4) அதிகாரங்களில் சொல்லப்படுகின்றன.

தமது சொந்தக் குழந்தைகளையே உணவாகக்கொண்ட கொடுமையையும், துயரத்தையும் இப்பகுதியில் நாம் காணலாம். இறைபயமும் இறைச்சித்தத்துக்கு அமைவான வாழ்க்கை முறையும் இல்லா எந்த அலகும் - அது ஒரு குடும்பமானாலும் சமூகமானாலும் ஒரு கிராமமானாலும் ஒரு நாடேயானாலும் இறைத் தண்டனைக்கு உள்ளாகும் என்பது இந்நூலில் சொல்லப்படுகின்றது.

**இனி எமது வினாக்களுக்குள் வருவோம்:**

01. "நாடுகளின் மாண்புடையாள் விதவைபோல் ஆனாளே, மாநிலங்களின் இளவரசி அடிமைபோல் ஆயினாளே" இங்கு நாடுகளின் மாண்புடையாள், மாநிலங்களின் இளவரசி யார்/ எது?
02. எருசலேம் நகரை இறைவன் ஏன் துன்பத்திற்கு உள்ளாக்கினார்?
03. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக. (திருவிவிலியத்தில் உள்ளதுபோல்)
மகன்/ ஆலையில்/ என் தலைவர்/ கசக்கி/ பழத்தை/ யூதாவாகிய/ பிழிந்தார்/ கன்னியை/ திராட்சைப்/ பிழிவதுபோல்
04. மகன் சீயோனின் பெரியோர் எங்கே எப்படி இருக்கின்றார்கள் என புலம்பலில் கூறப்பட்டுள்ளது?
05. அவர் சீற்றம் அடைந்து செய்தவை என்ன? 3 கருமங்கள் தருக?
06. அழகின் நிறைவும் மண்ணுலகின் மகிழ்ச்சியுமாக இருந்த நகர் எது?
07. ஆண்டவர் யாருக்கு நல்லவர்?
08. இஸ்ரயேலின் மன்றாட்டு இறைவனை வந்தடையாதபடி இறைவன் தம்மை மேகத்தால் மூடிக்கொண்டு மக்களுக்கு வழங்கிய தீமைகள் என்ன? (மூன்று மட்டும் தருக)
09. பகைவரும் எதிரிகளும் எருசலேம் வாயில்களில் நுழைவர், மண்ணுலகின் மன்னனோ பூவுலகில் எவருமோ நம்பாத எருசலேம் தேவகோபத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டது சிதறடிக்கப்பட்டது. இதற்குக் காரணம் என்ன?
10. பெற்றோரின் குற்றங்களின் - தீமைகளின் துன்பம் அவர்கள் பிள்ளைகளையும் வந்து சேரும் என்பதற்கு ஆதாரம் புலம்பல் நூலில் கூறப்படுகின்றது. இந்த வாக்கியம் எது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 125 இற்கான கேள்விகளுக்கு 15 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

அ. அன்பு, எமில்நகர், மன்னார்.

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. செ. யூடித் வினுஷா, எமில்நகர், மன்னார்.
2. எம். தேவி, இல.22/21B, 3 வீதி எமில் நகர், மன்னார்.
3. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
4. வி. திஷாகன், பெரிய கோமரசன்குளம், வவுனியா.
5. ப. சுகனியா, அந்தோனியார்புரம், இலுப்பக்கடவை.
6. ம. சுதர்சினி, உமனநகரி, நானாட்டான்.
7. தே. தேனுகா, HL21, 8ம் ஒழுங்கை, பா.மா, த.வ, கொச்சிக்கடை.
8. எம். ஜெசில்டா, இல.B29, 2ம்குறு.தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.
9. ஜெ. றேபனா, அந்தோனியார்புரம்.
10. செ. ரெத்தினம் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.146

## லூக்கா நற்செய்தி 1 முதல் 24 முடிய

உங்கள் விடைகளை ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❖ | 04 | | | ❖ | 09 | 21 | | | ❖ |
| 17 | ❖ | 08 | 13 | | | | 07 | ❖ | 03 |
| | | 28 | | 02 | | | | | 26 |
| 29 | | 05 | | | | 16 | | | |
| ❖ | 23 | | | ❖ | ❖ | | ❖ | 27 | |
| 14 | | | | | 10 | | 12 | 20 | ❖ |
| | 19 | | | | | | | | 24 |
| | | | 01 | | | 18 | | | |
| | ❖ | | | 06 | | | 25 | ❖ | |
| ❖ | | 15 | | 11 | ❖ | 22 | | | ❖ |

*உங்கள் விடைகளை, குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, செள். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. உமது .............................. வருக.
2. நீர் எழுந்து ___ வீட்டுக்குப் ...................... என்றார்.
4. மூன்றாம் நாளில் என் ___ அந்த ...................யிடம் கூறுங்கள்.
6. இவையெல்லாம் ___ இன்றோடு ............. நாள்கள் ஆகின்றன.
8. அவரோ ஒரு ..........................
9. ...................... இயேசுவே எங்களுக்கு ___ வேண்டினார்கள்.
10. உலகில் அவருக்கு உகந்தோருக்கு .................... உண்டாகுக.
14. ஏனெனில் நீங்கள் ........................ பெறுவீர்கள்.
16. பேதுருவும் ___ இருந்தவர்களும் .................க் கலக்கமாய் இருந்தார்கள்.
18. அப்போது நீர் பேறுபெற்றவர் ........................
19. இச்செய்தி யூதேய ......................... நாடெங்கும் பரவியது.
21. அவர் பெயர் ............................
22. ...................... "இல்லையப்பா" என்றார்.

### வலமிருந்து இடம்

6. அதற்கு அவர் நூறு .................... கோதுமை என்றார்.
10. பின்னர் அவர் .................. ஆவியால் ___ செல்லப்பட்டார்.
11. உங்களுக்கு எதுவுமே ......................... விளைவிக்காது.
15. ஆனால் நீங்கள் இதைக் கள்வர் ....................... யாக்கினீர்கள் என்று கூறினார்.16. படகு போய்க் ___ ஆழ்ந்து .................... விட்டார்.
18. உங்களைச் சபிப்போருக்கு ..................... கூறுங்கள்.
20. விரைவில் அவர்களுக்கு ......................... வழங்குவார் ___ சொல்கிறேன்.
24. ...................... அவருடைய பெற்றோருக்குத் தெரியாது.
28. அது புளிப்பு .........................க்கு ஒப்பாகும்.

### மேலிருந்து கீழ்

1. ஏனென்றால் அவர்கள் தொங்கல் .................. அணிந்து ___ விரும்புகிறார்கள்.
3. இனி அவர்கள் ...................... முடியாது.
5. .................... நாளில் வேண்டாம் என்றார்.
7. யார்மீதும் ...................... குற்றம் சுமத்தாதீர்கள்.
9. ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ..................... கொள்ளுகிறீர்கள்.
10. ...................... யார்மேல் விழுமோ அவரும் ___ என்றார்.
12. கதிரவன் ___ திருக்கோவிலின் .................... நடுவில் கிழிந்தது.
13. அவர் பெயர் .......................
14. அவர் எழுந்து .......................
16. அப்பொழுது உங்களுக்கு அனைத்தும் ............ யாயிருக்கும்
17. ...................... நினிவே மக்களுக்கு ___ இருப்பார்.
19. இயேசு மக்கள் ___ பார்த்துழ் ....................... வரும் என்கிறீர்கள்.
23. அது எத்தனையோ ..................... அவரைப் பிடித்திருந்தது.
24. அவர் ..................... இல்லை.
25. எனவே, இவர் அரசராக இருப்பது ___ சொல்லித் .................. அனுப்பினார்.
26. ...................... கொண்டிருக்கவும் வேண்டாம்.

### கீழிருந்து மேல்

1. ...................... குலத்தைச் சேர்ந்த ___ ஒருவர் இருந்தார்.
8. அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் ......................
11. மண்ணுலகில் ........................ வந்தேன்.
13. ஏனெனில் ..................... நேரம் ஆயிற்று
15. அவர்கள் ........................... வென்றது.
16. மக்கள் முன்னிலையில் ___ கடவுளின் ..................... முன்னிலையிலும் மறுதலிக்கப்படுவார்.
18. ஓர் .................. அவனைப் பிடித்துக்கொள்கிறது.
19. இறையாட்சியின் ..................... பொருளை ___ வைத்திருக்கிறது.
22. அவர் ...................... பெற்றார்.
23. ஆனால் உடனே ....................... வராது என்றார்.
27. இவற்றை அவர் ___ ஒரு .................... வந்து ___ நிழலிட்டது.
29. வேறொருவர் வந்து, ஐயா இதோ உமது ....................

### விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 144ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
கி. கிருஷாந்தன்,
புனித வளனார் அமதி குருமடம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



**இரண்டாம் பரிசு:**
யோ. டனியா,
4ம் வட்டாரம்,
மண்டைதீவு.

**மூன்றாம் பரிசு:**
அ. தீபன்,
பாலைப்பெருமாள்கட்டு,
வட்டக்கண்டல்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 89 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 72 பேர்.

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 144ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ரி. டக்ஷாயினி. இல.34/7 கன்னியர்மட வீதி, சின்னக்கடை, மன்னார்.
2. அ. அனுசியா, கார்மேல் இல்லம், அடம்பன்.
3. ப. ஜீவனா, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
4. யே. அனோஜா பீரிஸ். கொவ்வங்குளம், நானாட்டான்.
5. க. கார்த்திகா, வைகறை இல்லம், கனேசபுரம், வவுனியா.
6. வி. கிறிஸ்துராஜன் டலிமா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
7. திருமதி. ரஜனி எட்வின், 4ஆ. சதுக்கம், உவர்மலை. திரு.மலை.
8. எ. சுகன்யா, புதுக்காடு, தேவன்பிட்டி.
9. மா. ஜெபர்சன், வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம்.
10. ஜெ. மரிய சுமதி, அந்தோனியார்புரம், மன்னார்.
11. மா. மேரி பவுஸ்ரினா, வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம்.
12. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
13. செ. கமலாதேவி, வைகறை இல்லம், கனேசபுரம், வவுனியா.
14. எ. லுக்ஸன், புதுக்காடு, தேவன்பிட்டி.
15. தி. சசிகரன், பெரியமுறிப்பு, மடுறோட்.
16. செ. யூடித் வினுஷா, 3ம் வட்டாரம், கடற்கரை, பேசாலை.
17. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
18. ஸ். டிறோன்ஷன், 7ம் வட்டாரம், வங்காலை.
19. செ. அஞ்செலா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
20. ச. டெலான்சன், தேவன்பிட்டி, புதுக்காடு.
21. செ. ரெத்தினம் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
22. தே. ருதன், பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
23. திருமதி. லூர்தம்மா குரூஸ், ஆ. வீதி, சின்னக்கடை, மன்னார்.
24. ப. நிலோஜன், மடுமாதா வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
25. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
26. பி. மரியதரணி, சிறுத்தோப்பு, பேசாலை.
27. ஜே. நியூட்டஸ், பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
28. சூசைநாயகம் குணசீலி, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
29. செ. த. பெனில்மஸ் தற்குரூஸ், பருத்திப்பண்ணை, தலைமன்னார்.
30. விமலதாஸ் டயாகன், பெரிய கோமரசன்குளம், வவுனியா.
31. அ. சகாயநாதன் வாஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
32. ஜெசுராஜன் பீரிஸ் ரெரன்ஸ்கோ, முத்தரிப்புத்துறை.
33. எம். திரேசா, 22/21 B3 வீதி, எமில்நகர், மன்னார்.
34. எம். ஜெசில்டா, இல.29B, 2ம் கு. தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.
35. றெபேக்கா பற்றிக், பிரதான வீதி, மன்னார்.
36. ப. நிறோசியா, மடுமாதா வீதி, தாழ்வுபாடு.
37. யூ. யூடின் நிலைக்சனா, நெடுங்கண்டல், அடம்பன்.
38. ஜெ. றேபனா, அந்தோனியார்புரம், மன்னார்.
39. ஜெ. ஜெனிஜன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
40. ஜெ. டில்கானி சிலோஜனா, புதுக்காடு, தேவன்பிட்டி.
41. தா. சங்கீதா, ஆத்திக்குழி, அளவக்கை.
42. மே. பி. றோ. கிறிஸ்ரோபர், 18 கோ. வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
43. திரு. எஸ். சி. பேரின்பநாயகம், சின்னக்கடை, மன்னார்.
44. பி. இருதயராஜ் மிராண்டா, ஆனாள் நகர், வங்காலை.
45. சு. அன்ரனி பொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
46. கி. ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
47. எஸ். நித்தியா, கொன்னையன் குடியிருப்பு, தோட்டவெளி.
48. யே. டியூளா குரூஸ், எமில் வீதி, தாழ்வுபாடு.
49. திருமதி. பி.வி.சி. பேரின்பநாயகம், சின்னக்கடை, மன்னார்.
50. டொ. டிறொக்ஷன், சிறுத்தோப்பு, பேசாலை.

### இல.144 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஓ$^{01}$ | ய் | வு | நா | ளு | ம் | வோ | பு | ம் | ந$^{10}$ |
| ய் | உ$^{02}$ | வ | மை | க | ள் | ரோ | ன் | தி$^{04}$ | கை$^{20}$ |
| வு | ம் | ள் | க | ர் | ள | யா$^{19}$ | நோ$^{12}$ | கி | த் |
| நா | மா | ன் | பி$^{14}$ | வ$^{09}$ | ல் | ல | மை | லு | தா |
| ள் | ல் | பு | ன் | அ$^{07}$ | வ | ரி | ட | ம் | ர் |
| க$^{03}$ | லி | லே | யா | வி | லி | ரு | ந் | து | க |
| ளி | ட | வா$^{15}$ | ர் | க் | யை | னை | த | போ$^{13}$ | ள் |
| ல் | க$^{17}$ | யை | தா | த் | ஹு | ம | ல் | த$^{06}$ | ம் |
| யி | ம் | மூ | ம் | த$^{05}$ | ன் | ணா | ல் | ந் | ரு |
| வா$^{08}$ | தா$^{18}$ | டு | கி | றீ | ர் | க | ள் | வ$^{16}$ | பா$^{11}$ |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.145ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு ஒக்ரோபர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## சிறுகதை ............

12ஆம் பக்கத் தொடர்ச்சி

அவள் பாடுவது அந்த நிசப்தமான வேளையில் காற்றோடு மிதந்துவந்து தாலாட்டும். அவளுடைய இசை பள்ளிக்கூடத்தில் மட்டுமன்றி ஆலயத் திருப்பலிகளில், திருவிழாக்களில், இன்னிசை நிகழ்வுகளில் என விரிந்தது. அடுத்த வருடமே திருமலையில் பல மேடைகளில் அவள் குரல் ஒலிக்க ஆரம்பித்தது. அவளது அழகு, வயது. இசை மூன்றுக்குமாகக் கூட்டம் சேர ஆரம்பித்தது.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் மாதவன் அவளைப் பார்த்தான். விடுமுறையில் ஆலயத் திருவிழாவிற்காக அம்மாவுடன் அமெரிக்காவிலிருந்து வந்திருந்தான். திருவிழா அன்று நடந்த இன்னிசைக் கச்சேரியில் மாலினியை பார்த்த அந்த நிமிடமே 'இவள்தான் எனக்குரியவள்' என்று தீர்மானித்துவிட்டான். அதன்பின், தனது நண்பனைப்பிடித்து விபரங்கள் வாங்கி, முறையாகப் பெண் கேட்டு இரண்டே வாரங்களில் மாலினியை சொந்தமாக்கிக்கொண்டு அமெரிக்கா போய்விட்டான். அதன்பின் அவளுடன் எனக்குத் தொடர்பு விட்டுப்போயிற்று.

மறுநாள் வாஷிங்டன் புறப்பட்டேன். ஓய்வு கிடைத்த முதல் வார இறுதியில், மாலினியை சந்திக்க ஏற்பாடு செய்து கொண்டேன். அவள் வீடு, நான் தங்கியிருந்த இடத்திலிருந்து எழுபது மைல் தூரத்தில் வெர்ஜீனியாவில் இருந்தது. கார் ஒன்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போனேன். அவள் வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டுக் கதவைச் சாத்தியபோது, குதிரைக்குட்டி அளவு இருந்த நாய் ஒன்று குரைத்துக்கொண்டே என்னை நோக்கி பாய்ந்து வந்தது. திகிலாகிவிட்டது எனக்கு. 'தொலைந்தோம்' என்று நினைத்தேன். ஆனால் வீட்டைச் சுற்றியிருந்த புல்வெளியைவிட்டு நடைபாதை ஓரம் வந்தவுடன், அந்த நாய் ஏனோ நின்றுவிட்டது. பயத்துடன் பின்வாங்கியது. காரணம் புரியாமல் திகைத்தேன். அதற்குள், நாயின் குரைப்புச் சத்தத்தை கேட்டு மாலினி வெளியே வந்துவிட்டாள். "ஏய்...மணி! இங்கே வா! என்று அதட்டியவள், அதன் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டவளாய், " வா வா........ மைதிலி! என்று என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். வரவேற்பறையில் நுழைந்ததுமே, செல்வத்துக்கும் வசதிக்கும் குறைவில்லை என்பது புரிந்தது. பெர்ஷியன் கம்பளங்கள், சுவரில் தொங்கிக்கொண்டிருந்த விலையுயர்ந்த ஓவியங்கள், சாண்ட்லியர் விளக்குகள்... அடேங்கப்பா!

"மாதவன் வேலைக்கு போயிருக்கிறார். மாமி ஒரு கலியாண வீட்டிற்கு போயிருக்கிறாங்க. நான் மட்டும்தான் வீட்டில இருக்கிறன். நல்லதாப் போச்சு, இல்லாட்டா உன்னை இப்படித் தனியா சந்திக்க முடிஞ்சிருக்காதே!" என்றபடி என் பக்கத்தில் அமர்ந்தவளின் முகத்தை உற்றுப் பார்த்தேன்.

குயிலி மாமி சொன்னது உண்மைதான். நான் முந்நாட்களில் பார்த்திருந்த ஒளி, அவள் கண்களில் இல்லை. சந்தோஷக்களை முகத்தில் இல்லை. "நீ சந்தோஷமா இருக்கிறியா மாலினி?" என்றேன். அவள் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டாள். "சந்தோஷம்னா என்ன மைதிலி? வயிறு நிறையச் சாப்பிட்டு, சொகுசான படுக்கையில் படுத்துறங்குறதுதான்னா நான் சந்தோஷமாத்தான் இருக்கிறேன்!" என்றாள்.

"இப்போதெல்லாம் நீ பாடுறதில்லையாமே, ஏன்? உன் மாமியாரும் உன் புருஷனும் உன்னைப் பாட அனுமதிக்கலையா? உன் பாட்டையும் அழகையும் பார்த்துத்தானே அவர் உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டார்?" என்று கேட்டேன். அதை ஏன் கேக்கிறா! ஒரு திருமண வீட்டில் என்னை சந்தித்த உள்ளூர் இசையமைப்பாளர் ஒருவர் தன்னுடைய அல்பத்தில் பாட என்னை அழைத்தார். மாதவனும் ஒப்புக்கொண்டார். பாடுவதற்கு போகும்போது மாமிக்குத் தலைவலி, வாந்தி மயக்கம் ஆயிட்டார். ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனோம். நாலு நாள்ல அவர் உடம்பு சரியாகி வீடு திரும்பினார். அல்பத்தில பாட முடியாமல் போயிற்று. அடுத்த மாதம் மறுபடியும் அதேமாதிரி ஒருவருடைய அல்பத்தில் பாடப் போகும்போது அவங்களுக்கு காய்ச்சல், தலைவலி, மயக்கம் மறுபடியும் தடைப்பட்டது. "அதாவது, உனக்கு ஏதாவது பாட வாய்ப்புக் கிடைத்தால் மாமிக்கு மயக்கம்...!" ஆமாம்! எல்லாத்தையும்விட சுவாரசியம் என்னன்னா, ஆயிரக்கணக்கில் மக்கள் வருகின்ற ஆலயத்திருவிழாவின் நிறைவுநாள் இன்னிசை நிகழ்வில் பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் தயாராகி மாமியைத் தேடினேன். அவர் குளியலறையில் பப்பரப்பானு கீழே விழுந்துகிடந்தார். உடம்பெல்லாம் ஒரே இரத்தம். பதறிப்போய் என்னன்டு பார்த்தா, மாதவனோட "ரேஸர் பிளேடாலே" இடது கை மணிக்கட்டைக் கீறிட்டு மயங்கி கிடந்தார். உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து உயிர் பிழைக்க வைத்தோம்...." – அவள் சிறிது நேரம் மௌனமாகி, நடந்ததை ஜீரணித்துக்கொள்வதுபோல் இருந்தாள்.

"அதுக்கப்புறம் புரிஞ்சுபோச்சு மைதிலி! நாகரிகம் கருதி என்னை பாட அனுமதித்தாலும், மாமியோட உள் மனசுல விருப்பம் இல்லை. மாதவனும், அம்மா உடம்புதான் முக்கியம். அதனால நீ இனிமேல் பாட வேண்டாம்'னு சொல்லிட்டார்..." என்றபோது, தோழியின் கண்களில் நீர்.


நான் புறப்படும் நேரம் வந்தது. மாலினியும் என் கார் வரை வந்தாள். "ஏன் மாலினி, உன்னோட மணி என்னைப் பார்த்து நாலு கால் பாய்ச்சல்ல ஓடி வந்தது. ஆனா புல்வெளியைத் தாண்டினதுமே பசு மாதிரி அடங்கி நின்னுடுச்சே, ஏன்?" என்று கேட்டேன்.

"நாய் வீட்டைவிட்டு ஓடக்கூடாது என்று கொஞ்ச நாள் மின்வேலி போட்டிருந்தோம் மைதிலி. இங்கே அமெரிக்காவில் அது வழக்கம்தான். நாய் அதன் அருகே போகும்போதெல்லாம், சின்னதா ஷொக் அடிக்கும். அதனால பயந்து போய், நாய் அதைத் தாண்டி வெளியே போகாது. கொஞ்ச நாளில் இந்த மின்வேலியை எடுத்திட்டாலும், பழக்கதோஷத்தில நாய் அங்கேயே நின்றிடும்! வெளியே போகாது!" என்றாள். நான் காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டேன். எனக்கு விடை கொடுக்க, கையை அசைத்தபடி நின்றிருந்தாள் மாலினி. அருகில் வாலை ஆட்டியபடி அவளது நாயும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 21ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 09 1982

உதிர்வு 31 08 1993

### சுதர்சினி யேசுதாசன்

*"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"*

ஆண்டுகள் இருபத்தொன்று ஆனாலும், உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி ஆறுதல் அடைவோம்? காலையில் எம் தோட்டத்தில் பூக்கும் மலர்களைக் காணும்போது அதில் உள்ள அழகிய மலராக நீ மணம் தந்து எம் மனதை தொட்டுச் செல்கின்றாய். நடை பாதையில் என்றும் நீ எம் வழித்துணையாய் நடந்து வருகின்றாய். மாலையில் வீசும் இளம் காற்றில் நீ கலந்து எம்மை இதமாக வருடிச் செல்கின்றாய்! இனிய நல்மொழி பேசி, இதயத்தால் அனைவரையும் இணைத்து, ஆற்றல்கள் பல பெற்ற நீ, அன்று எம்மையெல்லாம் விட்டு, சொல்லாமல் கொள்ளாமல் பட்டென்று பறந்து போனாயே, அழகிய உன்முகம் காண ஏங்குகின்றோம். மீண்டும் நீ எம்மிடம் வாராயோ?

*உன் பிரிவினை நினைந்து உருகும் :*
*அம்மா, அப்பா, தம்பி, உறவுகள்.*

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி — 06ம் ஆண்டு நினைவஞ்சலி





சவிரி சந்தியோகுப்பிள்ளை இராஜதுரை

திருமதி. திரேசம்மா இராஜதுரை

(பாலைக்குளி. அடம்பன்.)

மலர்வு 25-12-1921 — மலர்வு 20-05-1933

உதிர்வு 02-09-2006 — உதிர்வு 10-09-2008

**அன்பின் அம்மா, ஐயா,**

நீங்கள் இருவரும் இறைபதம் அடைந்து காலங்கள் பல கடந்தபோதும் நீங்கள் எங்களிடம் தந்துவிட்டுச் சென்ற இனியநல் நினைவுகள் எம் இதயத்தில் இனிதாய் நிறைந்து நிற்கின்றது. வான்வீட்டில் நிவீர் வளமுடன் வசித்தாலும், எம்மை மறவாது நாம் செல்லும் பயணங்களில் வழித்துணையாய் வருகின்றீர்கள். எமக்குத் துன்பங்கள் வரும்போது தோள்கொடுத்துத் துயரம் போக்குகின்றீர்கள். எமது மகிழ்வான வேளைகளில் நீங்களும் சேர்ந்து மகிழ்விக்கின்றீர்கள். இறைவன் பாத மலர்களிலிருந்து எம் விண்ணப்பங்களுக்காய் இனிதாய் செபித்திடுவீர்.

*என்றும் உங்கள் நினைவில் :*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 20 09 1997

உதிர்வு 03 08 2014


### செல்வி.ஜே. ஜெனற் மரிஸ்ரெலா (ஜெனா)

(தலைமன்னார் கிராமம்)

எங்கள் வாழ்வின் காவியமே! ஆசை ஓவியமே!
அம்மாவின் பாத்திரமே!
பாசத்தில் பரிதவிக்கவிட்டு நீ எங்கே போனாயோ!
அன்பே ஆருயிரே ஆசைக்கிளியே உன்னை
அண்டி இருந்த ஆதரவுகளை ஏன் மறந்துபோனாய்?
பார்வையிலே பல பூக்கள் பூத்திருந்தாலும்
நீ ஒரு அழகான பூ அம்மா!
உன்னை மனதிலே சுமந்து நீ மரணித்த கதை கேட்டு
எமது மனம் வெடித்துச் சிதறுதம்மா!
மனையதிலே மறைந்ததென மனமுருகி துன்பப்படுகிறோம்.
ஏன் சென்றாய் அம்மா!
அலைகடலாய் நீ வந்து துறையைப்போல நீ கரைந்து
எங்கள் மனதை வதைத்துவிட்டாய் அம்மா!
என்றும் உன் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

*உம் பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.*

## 07ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 20 03 1968

உதிர்வு 07 09 2007

### திரு. இராசையா யோகராஜா

(கோவில்குளம், வவுனியா)

எம் அன்புச் செல்வமகன் யோகா! ஆண்டுகள் ஏழு ஆனாலும் உன் இழப்பை எப்படி நாம் மறப்போம்? எப்படி நாம் ஆறுதல் அடைவோம்? தோட்டத்தில் காலையில் பூக்கும் மலரில் ரோஜா மலராக மணம் தந்து எம்மை தொட்டுச்சென்றாய். இனிய நல்மொழி பேசி இதயத்தால் பலரையும் மனமகிழச் செய்தாய். மாலையில் வீசும் காற்றில் வழித்துணையாய் வந்திடுவாய். இனிய மொழி பேசி எம்மை மகிழச் செய்தாய். உன் புன்னகை முகத்தை பார்க்கத் துடியாய்த் துடிக்கின்றோம் உன் மழலைச் செல்வம் உனக்காக ஏங்கித் தவிக்கின்றது. நீ மின்னல்போல் பட்டென்று எங்கு சென்றாய். உன் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாம் ஆண்டவரை பிராத்திக்கின்றேன்.

*என்றும் உன் துயரில் : அம்மா, ஐயா, மனைவி, மகள், சகோதரிகள், சகோதரர்கள், அத்தான், மச்சான், மருமக்கள், அன்ரிமார், உற்றார் உறவினர்.*

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 09 1939

உதிர்வு 26 09 2012

### திரு. மரிசால் பிலிப்பு அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய கிராம அலுவலர்)

(ஆட்காட்டிவெளி)

*"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ: 14:8)*

எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள்மனவுலகில் மறையாமல்
கல்லறையில் உறங்கும் எங்கள் அன்பு ஐயாவே!
ஆண்டுகள் இரண்டு கடந்து போனாலும்
ஆறவில்லையே எம் துயரம் இன்னும்
கசிந்த எம் ஈரவிழிகள் காய மறுக்கின்றதே
மகிழ்ந்து கொண்டாடிய உம் உறவுகள்
உம்மைக் காணாமல் தவிக்கின்றதே!

*உங்கள் ஆன்மா இறைவன் மடியில் இளைப்பாற இறைவனை வேண்டிநிற்கும் : அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.*

## புனிதர்களின் ...... 09ஆம் பக்கத் தொடர்ச்சி

*சிந்தனைக்கு*

"ஆயர்கள் நல்வழி காட்ட வேண்டும். இதன் மூலம் சொத்துரிமை, படைப்புப் பொருட்களைப் பெருக்குதல், அவற்றை நீதியுடன் பகிர்ந்தளித்தல், அமைதி, அனைத்து நாட்டு மக்களிடையிலும் சகோதர அன்பைக் காட்டுதல் ஆகியவற்றிலும் கண்ணியமான முறையில் சிக்கலைத் தீர்த்துவைப்பதிலும் வழிகாட்டிகளாய் இருப்பார்களாக." (2ஆம் வத் சங். ஆயர்கள் 12) புனிதரின் விளக்கவுரையிலிருந்து.

"அலைகளோ மிகுதி, ஆபத்தான கடற்கொந்தளிப்பு, நாம் மூழ்கிவிடுவோம் எனக் கவலைப்படுவது கிடையாது. நாம்தான் (கிறிஸ்துவாகிய) பாறையின்மீது நிற்கிறோமே! கடல் முழங்கினாலும் அது பாறையைப் பிளக்க முடியாது. அலைகள் வானளாவ உயர்ந்து எழுந்தாலும் அது இயேசுவின் படகைக் கவிழ்க்க இயலாது. சாவு வரும் என்பதனால் நமக்கு அச்சமில்லை. காரணம், எனக்கு வாழ்வதென்பது கிறிஸ்து: சாவது ஆதாயமே." நாடுகடத்தப்படுவதால் நடுக்கமா? இல்லை. "உலகமும் அதில் நிறைந்துள்ள யாவும் ஆண்டவருடையன" பொருளை இழந்துவிடுவோம் என்று அச்சமா? இல்லை நாம் இவ்வுலகிற்கு வரும்போது எதுவும் எடுத்துவரவில்லை. போகும்போது எதுவும் எடுத்துச்செல்வதில்லை. இவ்வுலகில் அச்சம் தருபவற்றை நான் துச்சமாகக் கருதுகின்றேன். இவ்வுலகச் செல்வங்களைப் பார்த்து எள்ளி நகையாடுகிறேன். எனவே மக்களே! நன்மனத்தோராய் மட்டும் வாழ்ந்து வாருங்கள்.

**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

- பதிப்பாசிரியர் -

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978 2

## மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் .....

16ஆம் பக்கத் தொடர்ச்சி

இரண்டாம் பாதியில் 70ஆம் நிமிடத்தில் சென் ஜோசப் அணிக்கு ஒரு பெனால்டி உதை வழங்கப்பட அதை றொண்சன் உதைக்க, கில்லறி கோல் காப்பாளர் சரோன் சிறப்பாக தடுத்து அணிக்கு உதவினார். தொடர்ந்து 79ம் நிமிடத்தில் கில்லறி அணிக்காக றஞ்சன் மிகவும் சிறப்பாக மீண்டும் ஒரு கோலைப்போட்டு அணியின் வெற்றியை உறுதிசெய்தார். இருந்தும் சென் ஜோசப் அணியினர் இறுதிவரை கடுமையாகப் போராடியும் ஆட்டம் 2-1 என்ற கோல் கணக்கில் முடிவுற்றது.

2014ம் ஆண்டிற்கான லீக்கின் "A" Division கிண்ணத்தை கில்லறி விளையாட்டுக் கழகம் தனதாக்கிக்கொண்டது. ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கவர்ந்த இப்போட்டியில் கில்லறி விளையாட்டுக் கழகமானது அனைவரது பாராட்டையும் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் திரு. சார்ள்ஸ் அவர்களுடன் மன்னார் நகரபிதா கௌரவ ஞானப்பிரகாசம் அவர்களும், மாவட்ட விளையாட்டு அதிகாரி பர்சுக் அவர்களும், லீக் தலைவர் தங்கேஸ்வரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். லீக் செயலாளர் திரு. ஞானராஜ் அவர்களின் நன்றியுரையைத் தொடர்ந்து வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் இரு அணிகளுக்கும் வழங்கப்பட்டது.

## போரால் பாதிப்புற்ற தமிழ் மக்களை ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரும் திருத்தந்தை பிரான்சிஸ் காலிமுகத்திடலில் விசேட திருப்பலியை ஒப்புக்கொடுக்கவுள்ளார். இதன்போது இலங்கையில் கத்தோலிக்க மறைபரப்புப் பணியை மேற்கொண்ட அருளாளர் ஜோசப்வாஸ் அடிகளாருக்கு திருத்தந்தை புனிதர் பட்டம் வழங்கவுள்ளார். அத்துடன் அன்றைய தினம் கொழும்பில் அரசியல் சந்திப்புக்களையும் அவர் மேற்கொள்ளவுள்ளார். அடுத்தநாள் 14ஆம் திகதி தமிழர் திருநாளாம் தைப்பொங்கலன்று பி.ப 3.00 மணிக்கு மடுத்திருத்தலத்துக்கு திருத்தந்தை வருகைதரவுள்ளார்.

1995ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கொழும்புக்கு வருகை தந்து திரும்பியிருந்தார். 19 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கு வரும் திருத்தந்தை ஒருவர் முதன்முதலாக வடக்குக்கு அதாவது தமிழர் தாயகப் பகுதிக்கு வருகைதரவுள்ளார். அத்துடன் மடுத்திருப்பதிக்கு வருகை தரும் முதலாவது திருத்தந்தையும் இவராவார்.

அன்றைய தினம் இலங்கையின் தேசிய யாத்திரைத்தலமான மடுவுக்கு வருகைதரும் திருத்தந்தை போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் துன்ப துயரங்களைக் கேட்டறிவதுடன் போரில் அங்கவீனமானவர்களைத் தொட்டு ஆசீர்வாதம் வழங்கவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன் விழா வாழ்த்து



(26. 08. 1964 - 26. 08. 2014)

### திரு. திருமதி. சந்தான் செபமாலை

(முதலைகுத்தி, உயிலங்குளம்.)

தடைக்கற்களை வாழ்வுப் படிக்கற்கள் ஆக்கினீர்கள்
சவால்களைப் பெரும் சாதனைகள் ஆக்கினீர்கள்
சிலுவைகளை நாளும் சுகமாகச் சுமந்தீர்கள்
இல்லற வாழ்வில் பொன்விழாவைக் காண்கிறீர்கள்.

இந்நாள் வரையில் உம்மைக் காத்திட்ட இறைவனுக்கு
இருகரம் கூப்பி நாம் நவில்கின்றோம் நன்றிகளை.
இன்னும் பல ஆண்டுகள் இன்புற்று வாழ்ந்திடவே
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
இறையாசீர் வேண்டுகிறோம்!

பாசமுடன் வாழ்த்துவோர் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து



(07. 09. 1964 - 07. 09. 2014)

### திரு. திருமதி. லோ. சீமான் மாத்தா

(கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்)

"என் பார்வையில் நீ விலையுயர்ந்தவன், மதிப்பு மிக்கவன், நான் உன்மேல் அன்புகூர்கின்றேன்"
(எசாயா :43:4)

உலகில் உண்மையாய் வாழ்ந்து இல்லறத்தில் இன்புற்று
ஈன்றெடுத்தீர் பிள்ளைச் செல்வங்களை!
இல்லத் திருச்சபையைக் கட்டிடவே
இணைந்தே இருவரும் உழைத்தீரே!
இறை பிரசன்னத்தில் திகழ்ந்து இகபர நன்மைகள் பெற்றீரே!
வாழ்க வளமுடன் பல்லாண்டுகள் வாழ்கவென
அக்களிப்புடன் வாழ்த்துகின்றோம் அன்புப் பிள்ளைகள் நாம்!

இன்புற்று வாழ்கவென இனிதே ஆசித்து நிற்கும் :
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்.

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளி விழா வாழ்த்து



(16. 09. 1989 - 16. 09. 2014)

### திரு. திருமதி. எமிலியானுஸ்பிள்ளை, ஜெயராணி

(காத்தான்குளம், வட்டக்கண்டல்.)

இருமனம் கலந்த இல்லற வாழ்வில்
இருபத்தைந்து வருடங்களைக் கடந்து
இன்புற்று மகிழும் எம் அன்புப் பெற்றோரே!
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம் பிள்ளைகள் நாம்!
இதுவரை காத்த இறைவனை
இருகரம் கூப்பி வணங்குகின்றோம்.
ஏற்றிடுவீர் பிள்ளைகள் எம் நன்றியை இனிதாக....!

வாழ்த்துவோர் :
மகள் சயந்தினி, மகன்மார் சயந்தன், கெபின்,
பப்பா, அம்மம்மா, அப்பாச்சி, அன்ரா,
மாமாமார், அன்ரிமார்.

## மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட இறுதிப்போட்டியில் கில்லறி அணி அசத்தல்



மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட முதலாம்தர ('A' Division) அணிகளுக்கிடையிலான லீக் முறையிலான ஆட்டம் கடந்த 3 மாதங்களாக நடைபெற்று கடந்த 10.08.2014 அன்று முடிவுக்கு வந்தது. அன்றைய தினம் இச்சுற்றின் இறுதிப்போட்டியானது மன்னார் பொது விளையாட்டரங்கில் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக் கழகத்திற்கும் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் மத்தியில் மாலை 3.45 மணிக்கு இச்சுற்றுப்போட்டியின் நிதி அனுசரணையாளரும் போட்டியின் பிரதம விருந்தினருமாகிய சமூக சேவையாளர் திரு. சார்ள்ஸ் நிர்மலநாதன் அவர்களை இரு அணி வீரர்களும் லீக் நிர்வாகத்தினரும் மாலை அணிவித்து மங்களகரமாக வரவேற்றனர். வீரர்களின் அறிமுகத்தைத் தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு இறுதிப்போட்டி ஆரம்பமாகியது. போட்டியின் ஆரம்பம் முதல் இறுதிவரை எந்த அணி வெல்லும் எனத் தெரியாதவாறு இரு அணிகளும் மிகவும் சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் ஆடிக்கொண்டிருந்தனர். 32ம் நிமிடத்தில் கில்லறி அணியின் நம்பிக்கை நட்சத்திரம் றஞ்சன் தமது அணிக்காக முதலாவது கோலைப் போட, 41ம் நிமிடத்தில் சென் ஜோசப் அணியின் முன்கள வீரர் சிந்துஜன் தமது அணிக்காக முதலாவது கோலைப்போட இடைவேளையின்போது ஆட்டம் 1-1 என சமநிலையில் காணப்பட்டது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



**திரு. தொம்மை அந்தோனிப்பிள்ளை** — **திருமதி. அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை**

(நாவாந்துறை, யாழ்ப்பாணம்)

மலர்வு : 27 - 10 - 1928 / உதிர்வு : 23 - 07 - 2014

மலர்வு : 23 - 09 - 1932 / உதிர்வு : 24 - 06 - 2014

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்.
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்."
(உரோமர் 14:8)

இல்லறத்து வாழ்வினிலே இணைபிரியா அன்றிலென
நல்லறத்தின் மகிமையினை இகத்தினிலே காட்டிவிட்டீர்
வல்லபரன் பாதமலர் இருவரும் சேர்ந்திடவே
நல்லவராம் இறைவனிடம் நாம் இறைஞ்சி நிற்கின்றோம்.

அன்பான குடும்பமதில் அருமைநிறை பிள்ளைகளில்
இன்பமுற இருவரையே இறைபணிக்காய் அர்ப்பணித்து
என்றுமுயர் திரித்துவத்தின் தூயஅருள் அடைந்தவரே
என்றுமிறை பாதமலர் தனிலிணைந்து வாழ்ந்திடுவீர்!

இவர்கள் பிரிவால் துயருறும் :
குடும்பத்தவர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு — உதிர்வு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 10 |
| 08 | 08 |
| 1974 | 2014 |

### திருமதி. அ. பிலோமினா (லில்லி)

(குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.)

"நேர்மையுள்ளோர் உம் திருமுன் வாழ்வார்"
(திருப்பாடல் 141:13)

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் ஒளிவிளக்காய்
அன்பின் அவதாரமாய் விளங்கியவரே!
அணையாத ஒளிவிளக்காய்
எம் வாழ்வில் வெளிச்சம் தந்த நீங்கள்
எம்மைவிட்டு ஏன் பிரிந்து சென்றீர்?
கலங்கித் தவிக்கின்றோம்.
கண்ணீர்விட்டு அழுகின்றோம் அம்மாவே
உம் ஆன்மா சாந்தியடைய
அனுதினமும் இறைவனிடம் கையேந்தி நிற்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும் : கணவன், மகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 | 07 |
| 12 | 09 |
| 1935 | 2013 |

### திரு. செபமாலை மரியாம்பிள்ளை

(நானாட்டான்)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு மாறாது
உங்கள் இழப்பு எங்களுக்கு என்றும் ஆறாத்துயரமே
ஆண்டவரில் உங்கள் ஆன்மா நித்திய சாந்திபெற
தினம் தினம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் வாடும் :
மனைவி திருமதி. மரியாம்பிள்ளை ஞானபிரகாசி, பிள்ளைகளான ஆசிரியை சாந்தி, போல்ராஜ் *D.S office, Mannar.* நல்லாயன் அருட்சகோதரி அனன்சியற்றா இமல்டா, மற்றும் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(ஒரு வருடத்தை நினைவுகூரும் செபமாலை மரியாம்பிள்ளையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 2014.09.06. அன்று சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித ஆரோக்கிய மாதா ஆலயம், நானாட்டானில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.